Koviloor Digital Library

108 திவ்யதேசங்கள்

23

AC.No: 12032
Q-22

திரு. அழ. ரெங்கநாதன் செட்டியார்

சதாபிஷேக விழா அன்பளிப்பு

31-3-2007 மதகுபட்டி, சொக்கலிங்கபுரம்

Koviloor Digital Library

ஸ்ரீ சக்கரத்தாழ்வார்

Koviloor Digital Library

அழ. ரெங்கநாதன் செட்டியார் - தையல்நாயகி ஆச்சி

Koviloor Digital Library

Koviloor Digital Library

A. No. 12032

உ

சிவமயம்

என்னுரை

ஆலயம் தொழுவது சாலவும் நன்று. இது ஔவைப் பாட்டி அருளிய ஆத்திச்சூடி. சைவமும், தமிழும் நகரத்தாரின் இரு கண்கள். இதைக் கருத்தில் கொண்டு கடந்த ஆண்டு நடைபெற்ற எனது மணிவிழாவன்று தேவாரத் திருத்தலங்கள் என்ற சிறிய நூலை எனது தகப்பனார் திரு. அழ. ரெங்கனாதன் செட்டியார் அவர்கள் தொகுத்து, வந்திருந்த அனைவருக்கும் வழங்கினார்கள். இன்றைய தகவல் தொழில் நுட்பத்தில் உள்ள வசதிகள் மூலம் எந்த ஒரு ஆலயத்தைப் பற்றியும் உடனே தெரிந்து கொள்ள இயலும் என்றாலும்கூட அந்த சிறிய நூல், தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் அனைத்தையும் பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியிருப்பதாலும், சிறந்த வழிகாட்டியாக, பயனுள்ளதாக இருந்தது என்றும் பலரும் கூறியது, அதுபோல் மற்ற திருத்தலங்களைப் பற்றியும் நூல்கள் எழுத உந்துசக்தியாக இருந்து ஊக்கமும் ஆக்கமும் கொடுத்தது. எனது அப்பத்தாள் பெருமாள்மீது கொண்ட பக்தியின் காரணத்தினால் தன் மக்கள் நால்வருக்கும் ரெங்கனாதன், நாராயணன், சீனிவாசன், வெங்கடாசலம் என்று பெயர் கூப்பிட்டு அடிக்கடி பெருமாள் பெயரைச் சொல்லும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆகவே தற்போது வெளியிட எண்ணிய நூல் பெருமாள் திருத்தலங்கள் பற்றி இருக்க வேண்டும் என்று விரும்பினேன். அந்த விருப்பத்தின் காரணமாக "திவ்யதேச வைணவத் திருத்தலங்கள்" என்ற இந்த சிறிய நூலை எனது தகப்பனாரின் சதாபிஷேக தினமாகிய இன்று வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இத்திருத்தலங்கள் பற்றிய விபரங்களை இண்டர்நெட் மூலமாகவும், பல புத்தகங்களிலிருந்தும் எனது தந்தையார் அவர்கள் தொகுத்திருக்கின்றார்கள். இந்த வைணவத் திருத்தலங்கள் பற்றி பல நூல்கள் இருக்கின்றபோதிலும், இந்த திருக்கோயில்களுக்கு செல்ல திட்டமிடுவதற்கு சிறந்த ஒரு வழிகாட்டியாக இந்நூல் பயன்படும் என்று நம்புகின்றேன்.

இந்நூல் வெளிவர துணைபுரிந்த அனைவருக்கும் நன்றி!

ஓம் நமோ நாராயணா

ரெ. திருநாவுக்கரசு

மதகுபட்டி, சொக்கலிங்கபுரம்
31 - 03 - 2007

Koviloor Digital Library

When You Thought I wasn't looking

When you thought I wasn't looking, I saw you fix my doll and so I treasured it all the more.

When you thought I wasn't looking, I saw you feed the cow bananas and I thought it was good to be kind to animals.

When you thought I wasn't looking, I saw you buy crackers just for me, and I knew that little things are special things.

When you thought I wasn't looking, I heard you say a prayer and I believed that there is a God I could always talk to.

When you thought I wasn't looking, I felt you kiss me goodnight and I felt loved.

When you thought I wasn't looking, I saw you watching television and wished I could bridge the gap from where I stood to where you were.

When you thought I wasn't looking, I saw that you cared and I wanted to be everything that I could be.

When you thought I wasn't looking, I looked... and wanted to say thanks for all the things I saw when you thought I wasn't looking

God cannot be everywhere ......

Therefore He created Mother, Father

Koviloor Digital Library

4-2

உ

சிவமயம்

முன்னுரை

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல் கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்வித் திருக்காப்பு.

மானிடப் பிறவியைக் கொண்ட ஆன்மாக்கள் வினையின் கட்டிலிருந்து விடுபட்டு பேரின்ப நிலையை அடைவதற்கு திருக்கோயில்களே ஆதாரமாக அமைகின்றன. தமிழ்நாட்டிலும் வடநாட்டிலும் திருமால் உறையும் திருத்தலங்கள் ஆயிரக்கணக்கில் இருப்பினும், கோவில்களோடு ஒன்றிக் கலந்துவிட்ட ஆழ்வார்களால் பாடப்பெற்ற திருத்தலங்களே திவ்ய தேசங்களாகப் புகழப்படுகின்றன. அவை மொத்தம் 108. அவைகளை வடநாட்டில் உள்ளவை, தொண்டை நாட்டில் உள்ளவை, நடுநாட்டில் உள்ளவை, சோழ நாட்டில் உள்ளவை, பாண்டிய நாட்டில் உள்ளவை, மலை நாட்டில் உள்ளவை, திருநாடு என்று வகைப்படுத்தி அவை பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. திருமால் ஆலய விவரிப்பில் 8 நிலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வழக்கமாக உள்ளது. அதன்படி இயன்றவரை மூலவர், உத்ஸவர், தாயார், தலம், தீர்த்தம் விமானம், பிரத்யக்ஷம், மற்றும் மங்களா சாசனம் ஆகிய விபரங்கள் திரட்டித்தரப்பட்டுள்ளன.

மங்களா சாசனம் செய்யப்படாத புராண ஸ்தலங்கள் 20 பற்றியும் அபிமான ஸ்தலங்கள் 7 பற்றியும் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆழ்வார்களின் வரலாற்று வைபவங்கள் சிறு குறிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

திவ்ய தேசங்கள் முதலாக வைணவத் தலங்களைத் தெரிந்து தொழ வேண்டும் என்று விரும்புவர்களுக்குத் துணையாக விளங்க வேண்டும் என்பதற்காக, இந்த தொகுப்பு ஒரு கையேடாக பயன்படும் என்ற எண்ணத்தில் வெளியிடப்படுகிறது. இதில் நிறைகுறைகள் இருக்கலாம். நிறையை எடுத்துக்கொண்டு குறைகளுக்கு என்னைப் பொறுப்பாளனாக்கி பொறுத்தருளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இனி ஒரு ஸ்தலத்திற்கு சென்றால் சாமி கும்பிடுவதோடு வந்து விடாமல், அதன் மரபு, மற்றும் அருகில் உள்ள ஸ்தலங்கள் வரலாறு, கலாச்சாரம் என்று எல்லாவற்றையும் தெரிந்து நம்மால் இயன்றதைச் செய்து பக்தி சிறக்க வழிவகைகள் செய்ய வேண்டுமென்பதே எனது ஆசை.

அதற்கு இந்த கையேடு உதவியாய் இருக்குமென்று நம்புகின்றேன்.

இந்தத் தொகுப்பு தயாரிக்க உதவிய நூல்களை ஆக்கியோர், அளித்தோர், மற்றும் இணையதளம், அனைவருக்கும் கடப்பாடுடையேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பாளன்

அழ. ரெங்கநாதன்

(சதாபிஷேகம் செய்யப் பெறுபவர்)

Koviloor Digital Library

ஆழ்வார்கள் இல்லாமல் பக்தி இயக்கம் ஏது?

ஸ்ரீமந் நாராயணனின் புகழ்பாடி வைணவத்தை வையகத்திற்கு எடுத்துரைத்து திவ்ய தேசங்களை மங்களா சாஸனம் செய்வித்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள்.

"பொய்கையார், பூதத்தார், பேயார், புகழ்மழிசைஐயன், அருள் மாறன், சேரலர்கோன், தூயபட்ட நாதன், அன்பர் தாள் தூளி, நற்பாணன், நற்கலியன் ஈது இவர் தோற்றத்து அடைவாம் இங்கு" என்னும் பாடலில் சொல்லிய பதின்மருடன் ஆண்டாளையும், மதுரகவி ஆழ்வாரையும் சேர்த்து ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்கள் பற்றிய குறிப்புகள்.

1. **பொய்கை ஆழ்வார் :** காஞ்சி மாநகரம், தாமரைப் பொய்கையில் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசி திங்கள் வளர்பிறை அஷ்டமி திதியில், செவ்வாய்கிழமை திருவோண நட்சத்திரத்தில் 5,500 ஆண்டுகளுக்கு முன்பு துவாபரயுகத்தில் தோன்றியவர். முதல் திருவந்தாதி நூறு வெண்பாக்கள் இயற்றியுள்ளார். இவர் பெருமாளின் பாஞ்சஜன்யம் என்னும் திருச்சங்கு அம்சமாக அவதரித்தது சிறப்பாகும். இவர் முதற் கடவுளாகத் திருமாலைத் துதித்தபோதும் சிவனையும் சிறப்பித்தது போற்றுதற்குரியது. பேயாழ்வார், பூதத்தாழ்வார் இருவருடன் சேர்ந்து முதல் மூன்றாழ்வார்கள் வரிசையில் இருப்பவர். 6 திவ்ய தேசங்களுக்கு மங்களா சாஸனம் செய்துள்ளார்.

2. **பூதத்தாழ்வார் :** இவர் பிறந்த இடம் மஹாபலிபுரம் குருக்கத்தி. துவாபரயுகம் 5,500 ஆண்டுகளுக்கு முன்பு சித்தார்த்தி ஆண்டு ஐப்பசி திங்கள் வளர்பிறை நவமி திதி புதன்கிழமை தோற்றம். 100 வெண்பாக்களும் இரண்டாம் திருஅந்தாதியும் இயற்றியுள்ள இவர் 13 திவ்ய தேசங்களில் மங்களா சாசஸனம் செய்துள்ளார். கதாயுத அம்சமாக தோன்றிய இவர் திருமாலை விஞ்சிய தெய்வம் ஏதுமில்லை என்று உறுதியாக நின்றவர். பொய்கை ஆழ்வார், பேயாழ்வார் என்ற இருவருடன் சேர்ந்து முதலாழ்வார்கள் வரிசையில் மூன்று ஆழ்வார்களில் ஒருவராக, தமிழ் பற்று கொண்டவராக இவர் கருதப்படுகிறார்.

3. **பேயாழ்வார் :** முதல் மூன்று ஆழ்வார்களில் ஒருவராகக் கருதப்படும் இவர் திருமயிலையில் செவ்வல்லி மலரில் துவாபரயுகத்தில் 5,500 ஆண்டுகளுக்கு முன்பு சித்தார்த்தி வருடம் ஐப்பசித் திங்கள் வளர்பிறை தசமி திதி வியாழக்கிழமை சதய நாளில் பிறந்தவர். மூன்றாம் திருவந்தாதி, 100 வெண்பாக்கள் அருளியுள்ளார். 15 திவ்ய தேசங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார். தான் கண்ட இன்பம் உலகமும் பெற வேண்டும் என்ற பெருநோக்கு கொண்ட இவர், நந்தகாம்சம் கொண்டவர்.

4. **திருமழிசை ஆழ்வார் :** இவர், திருமழிசையில் சித்தார்த்தி ஆண்டு தை திங்கள் கிருஷ்ண பக்ஷம் பிரதமை திதி ஞாயிற்றுக்கிழமை மக நட்சத்திரத்தில் பிறந்தவர். இவரது தகப்பனார் பார்க்கவ முனிவர், தாயார் கனகாங்கி. திருச்சந்தவிருத்தம், நான்முகன் திருவந்தாதி ஆகியவற்றின் ஆசிரியர். 17 திவ்ய தேசங்களில் மங்களா சாசனம் செய்துள்ளார். இவர் திருமாலின் சக்ராம்சம் ஆவார்.

Koviloor Digital Library

4-2

5. **மதுரகவியாழ்வார் :** ஈசுவர ஆண்டு சித்திரைத் திங்கள் வளர்பிறை சதுர்த்தசி வெள்ளிக்கிழமை, சித்திரை நட்சத்திரத்தில் திருக்கோளூரில் அவதாரம் செய்தார். வைநதேயாம்சம் கொண்ட இவருக்கு வேறு பெயர்கள் சின்கவியார், ஆழ்வார்க்கடியான். கண்ணிநுண்சிறுத்தாம்பு, பதினோரு மதுரமான பாசுரங்கள் அருளியுள்ளார். மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்த பாசுரங்களைப் பாராட்டி ஸ்ரீமந் நாதமுனிகள் இரண்டு தனியன்கள் பாடியுள்ளார்.

6. **நம்மாழ்வார் :** ஸேநாம்ஸம் அம்சம் கொண்ட இவர் திருக்குருகூரில் பிரமாதி ஆண்டு வைகாசி திங்கள் வளர்பிறை பௌர்ணமி வெள்ளிக்கிழமை விசாக நட்சத்திரத்தில் திருஅவதாரம் செய்துள்ளார். இவர் தந்தையார் காரியார், தாயார் உடையநங்கை. மாறன், காரி மாறன், சடகோபன், பராங்குசன், குருகைப்பிரான், திருக்குருகூர்நம்பி வகுளாபரணன், அருள்மாறன், தென்னரங்கன் பொன்னடி, திருநாவீனுடைய பிரான் என்று பல பெயர்களால் அறியப்படுபவர். திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என 1296 பாசுரங்கள் இயற்றி உள்ளார். 37 திவ்ய தேசங்களில் மங்களா சாஸனம் செய்துள்ளார்.

வைணவ ஆச்சாரியார்களில் முதல் இடம் பெறுபவர். குரு பரம்பரை ஆச்சாரியார்களில், 10 பேரில் மூன்றாவது இடம் பெற்றவர். மதுரகவியாழ்வார் திருமாலைப் பாடாமல் இவரை மட்டுமே 11 பாசுரங்களால் பாடியுள்ளது ஒரு சிறப்பு. இவரைப்பற்றி மற்றும் பல ஆச்சாரியர்கள் தனியன்கள் பாடியுள்ளனர்.

7. **குலசேகர ஆழ்வார்** பிறந்த இடம் கொல்லி (வஞ்சிக்களம்). தந்தையார் திடவிரதன். துளசி மணி அம்சம் கொண்ட இவருக்கு கொல்லி காவலன், கூடல் நாயகன் கோழிக்கோன், சேரலர்கோன், வில்லவர்கோன் என பல பெயர்களும் உண்டு. வடமொழி கிரந்தம் முகுந்தமாலையையும் பெருமாள் திருமொழியும் பாடியதோடு 9 திவ்ய தேசங்களில் மங்களா சாஸனம் செய்துள்ளார். இவர் கௌஸ்துபாம்சம் கொண்டவர்.

8. **பெரியாழ்வார் :** கருடாம்சம் பொருந்திய இவர் செஞ்சொல் மறையவர்கள் விளங்கும் திருவில்லிபுத்தூரில், குரோதன ஆண்டு ஆனித்திங்களில் வளர்பிறையில் ஏகாதசி திதி சுவாதி நட்சத்திரத்தில் ஞாயிற்றுக்கிழமையன்று திருஅவதாரம் செய்தார். இவரது தந்தையார் முகுந்தபட்டர், தாயார் புதுமவல்லி. இவரது காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டென்பர். இவரது வேறு பெயர்கள் விட்டுசித்தர், பட்டர் பிரான், பெரியாழ்வார், பட்டநாதன், திருவில்லிபுத்தூரார், கிழியறுத்தான், புதுவைக்கோன் ஸ்ரீரங்கநாதஸ்வஸுரர் எனப்பல. இவர் 19 திவ்யதேசங்களில் மங்களா சாசனம் செய்துள்ளார். பெரியார் திருமொழி என 473 பாசுரங்கள் இயற்றியுள்ளார். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் வளர்ப்புத் தந்தை என்பதே இவரது பெரிய சிறப்பாகும். இவரது திருமொழியைப் பாராட்டி ஸ்ரீமந் நாதமுனிகளும், பாண்டிய பட்டரும் தனியன்கள் பாடியுள்ளனர்.

9. **ஆண்டாள் (பூமிப்பிராட்டியாம்சம்)** ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றிய இவரை பெரியாழ்வார் எடுத்து வளர்த்தார். இவர் பிறந்தது நள ஆண்டு, ஆடி மாதம், வளர்பிறை சதுர்த்ததி திதி, செவ்வாய்கிழமை, பூர நட்சத்திரம். இவரது

Koviloor Digital Library

அம்சம் துளசியில் தோன்றியது. இவரது மற்ற பெயர்கள் கோதைப்பிராட்டி, சூடிக்கொடுத்த சுடர்க் கொடி. திருப்பாவை 30 பாசுரங்கள், நாச்சியார் திருமொழி 143 பாசுரங்கள் ஆகியவற்றை இயற்றியுள்ளார். 11 திவ்யதேசங்களில் மங்களா சாஸனம் செய்துள்ளார்.

பெருமாளுக்கே தன்னை உரியவளாக்கி மாலையைச் சூடிக்கொடுத்து அவரையே நாயகனாகயடைந்தது மிகச்சிறப்பானதாகும்.

10. தொண்டரடிப்பொடி ஆழ்வார் (வநமாலாம்சம்) இவர் பிறந்த ஊர் திருமண்டங்குடி பராபவ ஆண்டு மார்கழி திங்கள் தேய்பிறை சதுர்த்தசி திதி செவ்வாய்கிழமை கேட்டை நட்சத்திரத்தில் திரு அவதாரம். விப்ரநாராயணர், பக்தாங்க்ரிரேனு, திருமண்டக்குடியார், பள்ளியுணர்த்திய பிரான் எனப் பலபெயரால் அறியப்படுபவர். திருமால் மேல் 45 பாசுரங்கள், திருப்பள்ளி எழுச்சி 10 பாசுரங்கள் இயற்றியுள்ளார். இவர் மங்களா சாசனம் செய்த திவ்ய தேசங்கள் நான்கு.

11. திருப்பாணாழ்வார் : ஸ்ரீவத்ஸாம்சம் கொண்ட இவர் உறையூரில் பிறந்தவர். அமலநாதிபிரான் என்று 10 பாசுரங்கள் இயற்றியுள்ளார். பாணர், போகிவாஹநர், முனிவாஹநர் என்று வேறு பெயர்கள் உண்டு. மூன்று திவ்யதேசங்களில் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

12. திருமங்கை ஆழ்வார் : திருக்குறையலூரில் பிறந்த இவர் சார்ங்காம்சம் பொருந்தியவர். இவரை நீல நிறத்தார், பரகாலன், நாலுகவிர் பெருமாள், கலியன், ஆவி நாடர், அருள்மாரிமங்கையர் கோன் எனப்பல பெயரால் அழைப்பர். பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை சிறியதிருமடல், பெரியதிருமடல் ஆகியவைகளை இயற்றியுள்ளார். இவரது மகத்தான சாதனை 86 திவ்யதேசங்களில் மங்களா சாசனம் செய்தது. இவரது சிகரம் நிறைந்த கவிதைகள் நமக்குப் பக்தி கோபுரங்களின் கலசங்களைக் காட்டி இறைவனிடம் நம்மை அடிமைப்படுத்துகிறதென்றால் அது மிகையாகாது.



Koviloor Digital Library

ஆழ்வார்கள் அவதார விசேஷம்

ஆழ்வார்	அவதார ஸ்தலம்	திருநக்ஷத்ரம்
பொய்கையாழ்வார்	திருவெஃகா காஞ்சி	ஐப்பசி-திருவோணம்
	திருமாலின் பாஞ்சஜன்யம் என்ற சங்கு	
பூதத்தாழ்வார்	கடல்மல்லை	ஐப்பசி - அவிட்டம்
	கௌமோதகி என்ற கதாயுதத்தின் அம்சம்	
பேயாழ்வார்	திருமயிலை	ஐப்பசி - சதயம்
	நந்தகம் என்ற வாளின் (கத்தி)	
திருமழிசையாழ்வார்	திருமழிசை தை - மகம்	
	சுதர்சனம் என்ற சக்ரம்	
நம்மாழ்வார்	ஆழ்வார் திருநகரி	வைகாசி - விக்ரம்
	திருமாலின் படைத்தலைவன் விஷ்வக்சேனரின் அம்சம்	
மதுரகவியாழ்வார்	திருக்கோளூர்	சித்திரை - சித்திரை
	கருடனின் அம்சமாக அவதரித்தவர்	
குலசேகராழ்வார்	திருவஞ்சிக்களம்	மாசி - புனர்வஸு
	திருமாலின் கௌஸ்துப மணியின் அம்சம்	
பெரியாழ்வார்	ஸ்ரீவில்லிபுத்தூர்	ஆனி - ஸ்வாதி
	திருமாலின் ரதத்தின் அம்சம்	
ஆண்டாள்	ஸ்ரீவில்லிபுத்தூர்	ஆடி - பூரம்
	பரமனின் தேவி	
தொண்டரடிப்	திருமண்டங்குடி	மார்கழி - கேட்டை
பொடியாழ்வார்	திருமாலின் வனமாலையின் அம்சமாக	
திருப்பாணாழ்வார்	உறையூர்	கார்த்திகை-ரோஹிணி
	ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாக	
திருமங்கையாழ்வார்	திருநகரி	கார்த்திகை - கிருத்திகை
	திருமாலின் சார்ங்கமென்னும் அம்சமாக	
நாதமுனிகள்	திருமாலின் படைத்தலைவரான விஷ்வக்சேனரின் கணங்களில் ஒருவராகிய கஜலதனரின் அம்சம்	
ஆளவந்தான்	திருமாலின் அரியணையின் அம்சம்	
இராமானுஜர்	திருமாலின் ஆதிசேஷன் அம்சம்	

Koviloor Digital Library

திருமால்

ஒன்றி நின்று நல்தவம்செய்து
ஊழி ஊழி தோறெலாம்
நின்று நின்று அவன்குணங்கள்
உள்ளி உள்ளி உள்ளம் தூயராய்
சென்று சென்று தேவ தேவர்
உம்பர் உம்பர் உம்பரால்
அன்றி எங்கள் செங்கண்மாலை
யாவர் காண வல்லாரே.

****

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றுந்தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

Koviloor Digital Library



ஓம் நமோ நாராயணாய நமஹ!
ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

108 ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய தேசங்கள் மற்றும் வைணவத் திருத்தலங்கள்

ஓர் அறிமுகம்

திருமால் பெருமை சொல்வதற்கு எளிதல்ல. திருமால் காப்புக் கடவுளாகக் கருதப்படுகிறார். அதர்மங்கள் தலை தூக்கியபோது இறைவனே எழுந்தருளிப் பல அற்புதச் செயல்களைச் செய்து மன்னுயிர்களைத் தளைக்கச் செய்கின்றான் என்பது பூவுலக மாந்தரது நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கு ஏற்ப இறைவன் எழில் நிறைந்த மச்சம், வராகம், கூர்மம் முதலான வடிவத்தில் அவதாரம் செய்தும் இராம பிரானாகவும், கண்ண பிரானாகவும் உலகில் வாழ்ந்தும் மக்களுக்கு அருள் புரிந்துள்ளார்கள். அதன் வெளிப்பாடே ஆங்காங்கு கோவில்களாக விளங்குகின்றன.

இந்திய நாட்டில் பல ஆயிரக்கணக்கான வைணவத் தலங்கள் இருப்பினும் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற புண்ணிய ஆன்மாக்கள், ஆழ்வார்களாகவும் ஆச்சாரியர்களாகவும் தோன்றி மக்கள் நற்கதி பெறும் வகையில் மங்களாசாசனம் செய்யப் பெற்ற கோயில்களும் இறைவனும் மட்டுமே திவ்விய தேசம் என வைணவ முறையில் அறியப்படுகின்றன.

அவ்வாறு அறியப்படும் திவ்யதேசங்கள் மொத்தம் 108.

சோனாட்டில் நாற்பதும் பாண்டி நாட்டில் பதினெட்டும்
மலைநாடெனும் கேரளத்தில் பதிமூன்றும் நடுநாடிரண்டும்
தொண்டை நாட்டில் இருபத்தியிரண்டும் வடநாட்டுப் பன்னிரெண்டும்
திருநாட்டுப் பரமபதமெனும் வைகுந்தமும் நூற்றெட்டு திவ்ய தேசங்களாம்.

சோழ நாட்டுத் திவ்யதேசங்கள் பெரும்பாலானவை அரங்கத்தின் அண்மையிலும், திருநாங்கூர் பகுதியிலும், குடந்தை அருகிலும் அமைந்துள்ளன. பாண்டி நாட்டு திவ்ய தேசங்களில் பாதி தாமிரபரணி ஆற்றின் கரைகளில்

Koviloor Digital Library

திருவைகுண்டச்சுற்றில் அமைந்துள்ளன. தொண்டை நாட்டுத் திவ்ய தேசங்களில் பெரும்பாலானவை காஞ்சியிலேயே அமையப் பெற்றுள்ளன. மலைநாட்டுத் திவ்ய தேசங்கள் செங்குன்னுருக்கு அருகாமையில் அமைந்துள்ளன. வடநாட்டு திவ்ய தேசங்கள் ப்ரயாகைப் பகுதியில் அமையப் பெற்றுள்ளன.

108 திவ்ய தேசங்களின் மங்களா சாசன விபரங்கள் எல்லாம் பட்டியலிடப்பட்டு தரப்பட்டுள்ளன.

திருமாலின் திருக்கோலங்கள் நான்கு :

நின்ற கோலம், அமர்ந்த கோலம், கிடந்த கோலம், இயங்கு (நடந்த) கோலம்.

திருமாலின் 8 வகை சயனத் திருக்கோலங்கள்.

1. உத்தான சயனம்,
2. தர்ப்ப சயனம்,
3. புஜங்க சயனம்,
4. வடபத்ர சயனம்,
5. வீர சயனம்,
6. போக சயனம்,
7. மாணிக்க சயனம்,
8. தல சயனம்.

இந்த கோலங்கள் எந்தெந்த திவ்ய தேசங்களில் உள்ளன என்று பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நேத்ர தரிசனம்

ஒவ்வொரு வியாழனன்றும்
வேங்கடாசலபதி தரிசனம்
தருவது இப்படித்தான்.
இந்த நாளில்தான்
வேங்கடாசலபதியின்
கண்களைத் தரிசிக்க
இயலும் என்பதால், இந்த
தரிசனத்துக்கு 'நேத்ர தரிசனம்'
என்று பெயர்.
இந்த எளிய கோலத்தில்
பெருமாளைத் தரிசிக்க
ஏராளமானோர் ஆவலாய்
இருப்பதால்
வியாழக்கிழமைகளில்
திருமலையில் கூட்டம்
எக்கச்சக்கமாய் இருக்கும்.

Koviloor Digital Library

108 திவ்ய தேசங்கள் விவரம்

வ. எண்.	திவ்ய தேசம்	மங்களாசாசனம் செய்த ஆழ்வார்கள்		திருப் பாசுரங்கள்	பெருமாள் எழுந்தருளியுள்ள நிலை
I.	**சோழ நாட்டுத் திவ்ய தேசங்கள் - 40**				
1.	திருவரங்கம்	பெரியாழ்வார்	35	247	புஜங்க சயனம்
		ஆண்டாள்	10		
		குலசேகர ஆழ்வார்	31		
		திருமழிசை ஆழ்வார்	14		
		தொண்டரடிப்பொடியாழ்வார்	55		
		திருப்பாணாழ்வார்	10		
		திருமங்கையாழ்வார்	73		
		பொய்கையாழ்வார்	1		
		பூதத்தாழ்வார்	4		
		பேயாழ்வார்	2		
		நம்மாழ்வார்	12		
2.	திருக்கோழி (உறையூர்)	திருமங்கையாழ்வார்	1	2	நின்ற திருக்கோலம்
		குலசேகராழ்வார்	1		
3.	திருக்கரம்பனூர் (உத்தமர் திருக்கோயில்)	திருமங்கையாழ்வார்		1	புஜங்க சயனம்
4.	திருவெள்ளறை	பெரியாழ்வார்	12	24	நின்ற திருக்கோலம்
		திருமங்கையாழ்வார்	12		
5.	திருஅன்பில்	திருமழிசையாழ்வார்		1	புஜங்க சயனம்

Koviloor Digital Library

6.	திருப்பேர் நகர்	பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் திருமழிசை ஆழ்வார் நம்மாழ்வார்	2 19 1 11	33	புஜங்க சயனம்
7.	திருக்கண்டியூர்	திருமங்கையாழ்வார்		1	நின்ற திருக்கோலம்
8.	திருக்கூடலூர் (ஆடுதுறைப்பெருமாள் கோயில்)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
9.	திருக்கவித்தலம்	திருமழிசை ஆழ்வார்		1	புஜங்க சயனம்
10.	திருப்புள்ளம் பூதங்குடி	திருமங்கையாழ்வார்		10	புஜங்க சயனம்
11.	திருஆதனூர்	திருமங்கையாழ்வார்		1	புஜங்க சயனம்
12.	திருக்குடந்தை	பெரியாழ்வார் ஆண்டாள் திருமழிசை ஆழ்வார் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார்	3 1 7 25 2 2 11	51	உத்தான சயனம்
13.	திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன் திருக்கோயில்)	திருமங்கையாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார்	34 2 11	47	நின்ற திருக்கோலம்
14.	திருநறையூர் (நாச்சியார் திருக்கோயில்)	திருமங்கையாழ்வார்		110	நின்ற திருக்கோலம்

Koviloor Digital Library

15.	திருச்சேறை	திருமங்கையாழ்வார்		13	நின்ற திருக்கோலம்
16.	திருக்கண்ணமங்கை	திருமங்கையாழ்வார்		14	நின்ற திருக்கோலம்
17.	திருக்கண்ணபுரம்	பெரியாழ்வார்	1	128	நின்ற திருக்கோலம்
		ஆண்டாள்	1		
		குலசேகராழ்வார்	11		
		திருமங்கையாழ்வார்	104		
		நம்மாழ்வார்	11		
18.	திருக்கண்ணங்குடி	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
19.	திருநாகை (நாகப்பட்டினம்)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
20.	திருத்தஞ்சை (3 கோயில்கள்)	திருமங்கையாழ்வார்	3	5	நின்ற திருக்கோலம்
	i. மாமணிக்கோயில்	பூதத்தாழ்வார்	1		
	ii. மணிக்குன்றம்	நம்மாழ்வார்	1		
	iii. தஞ்சையாளிநகர்				
21.	நந்திபுரவிண்ணகரம்	திருமங்கையாழ்வார்		10	வீற்றிருந்த திருக்கோலம்
22.	திருவெள்ளியங்குடி	திருமங்கையாழ்வார்		10	புஜங்க சயனம்
23.	திருவழுந்தூர்	திருமங்கையாழ்வார்		45	நின்ற திருக்கோலம்
24.	திருச்சிறுபுலியூர்	திருமங்கையாழ்வார்		10	புஜங்க சயனம்
25.	திருத்தண்தலைச் சங்கநாள் மதியம் (தலைச் சங்காடு)	திருமங்கையாழ்வார்		2	நின்ற திருக்கோலம்

Koviloor Digital Library

26.	திருஇந்தளூர்	திருமங்கையாழ்வார்		11	வீர சயனம்
27.	திருக்காவளம்பாடி (திருநாங்கூர்-1)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
28.	திருக்காழிச் சீராம விண்ணகரம் (சீர்காழி)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
29.	திருஅரிமேயவிண்ணகரம் (திருநாங்கூர்-2)	திருமங்கையாழ்வார்		10	வீற்றிருந்த திருக்கோலம்
30.	திருவண்புருடோத்தமம் (திருநாங்கூர்-3)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
31.	திருச்செம்பொன் செய்கோயில் (திருநாங்கூர்-4)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
32.	திருமணிமாடக் கோயில் (திருநாங்கூர்-5)	திருமங்கையாழ்வார்		12	நின்ற திருக்கோலம்
33.	திருவைகுந்த விண்ணகரம் (திருநாங்கூர்-6)	திருமங்கையாழ்வார்		10	வீற்றிருந்த திருக்கோலம்
34.	திருவாலியும் திருநகரியும் i. திருவாலி ii. திருநகரி	குலசேகராழ்வார் திருமங்கையாழ்வார்	1 41	42	வீற்றிருந்த திருக்கோலம்
35.	திருத்தேவனார் தொகை (திருநாங்கூர்-7)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்

Koviloor Digital Library

36.	திருத்தெற்றியம்பலம் (திருநாங்கூர்-8)	திருமங்கையாழ்வார்		10	புஜங்க சயனம்
37.	திருமணிக்கூடம் (திருநாங்கூர்-9)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
38.	திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்) (திருநாங்கூர்-10)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
39.	திருப்பார்த்தன்பள்ளி (திருநாங்கூர்-11)	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
40.	திருச்சித்திரகூடம் (சிதம்பரம்)	குலசேகராழ்வார் திருமங்கையாழ்வார்	11 21	32	போக சயனம்
II.	**பாண்டிய நாட்டுத் திவ்ய தேசங்கள் - 18**				
41.	திருக்குறுங்குடி	பெரியாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார்	1 1 25 13	40	நின்ற திருக்கோலம்
42.	திருச்சிரீவரமங்கை	நம்மாழ்வார்		11	வீற்றிருந்த திருக்கோலம்
43.	திருவைகுண்டம் (நவதிருப்பதி-1)	நம்மாழ்வார்		11	நின்ற திருக்கோலம்
44.	திருவரகுணமங்கை (நவதிருப்பதி-2)	நம்மாழ்வார்		1	வீற்றிருந்த திருக்கோலம்

Koviloor Digital Library

45.	திருப்புளியங்குடி (நவதிருப்பதி-3)	நம்மாழ்வார்		12	புஜங்க சயனம்
46.	திருத்தொலைவில்லி மங்கலம்-இரட்டைத் திருப்பதி (நவதிருப்பதி 4, 5)	நம்மாழ்வார்		11	நின்ற திருக்கோலம்
	i. முதல் கோயில் தாமிரபரணி நதிக்கரையில் உள்ளது. ii. இரண்டாவது கோயில் வாய்க்கால் கரையில் உள்ளது.			-	வீற்றிருந்த திருக்கோலம்
47.	திருக்குளந்தை (நவதிருப்பதி-6)	நம்மாழ்வார்		1	நின்ற திருக்கோலம்
48.	திருக்கோளூர் (நவதிருப்பதி-7)	நம்மாழ்வார்		12	புஜங்க சயனம்
49.	திருப்பேரை (நவதிருப்பதி-8)	திருமங்கையாழ்வார்		11	வீற்றிருந்த திருக்கோலம்
50.	திருக்குருகூர் (நவதிருப்பதி-9) ஆழ்வார் திருநகரி	நம்மாழ்வார்		11	நின்ற திருக்கோலம்
51.	திருவில்லிபுத்தூர்	பெரியாழ்வார் ஆண்டாள்	1 1	2	புஜங்க சயனம்
52.	திருத்தன்கால்	திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	4 1	5	நின்ற திருக்கோலம்

Koviloor Digital Library

53.	திருக்கூடல் (மதுரை)	திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார்	1 1	2	வீற்றிருந்த திருக்கோலம்
54.	திருமாலிருஞ்சோலை (அழகர் கோவில்)	பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார்	34 11 33 3 1 46	128	நின்ற திருக்கோலம்
55.	திருக்கோட்டியூர்	பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார்	22 13 2 1 1	39	புஜங்க சயனம்
56.	திருமோகூர்	திருமங்கையாழ்வார் நம்மாழ்வார்	1 11	12	நின்ற திருக்கோலம்
57.	திருப்புல்லாணி மூலவர் திருப்புல்லாணி மூலவர்	திருமங்கையாழ்வார்		21	நின்ற திருக்கோலம் தர்ப்பசயனம்
58.	திருமெய்யம்	திருமங்கையாழ்வார்		9	நின்ற திருக்கோலம்
III.	**மலைநாட்டுத் திவ்ய தேசங்கள் - 13**				
59.	திருநாவாய்	திருமங்கையாழ்வார் நம்மாழ்வார்	2 11	13	நின்ற திருக்கோலம்
60.	திருவித்துவக்கோடு	குலசேகராழ்வார்		10	நின்ற திருக்கோலம்
61.	திருக்காட்கரை	நம்மாழ்வார்		11	நின்ற திருக்கோலம்

Koviloor Digital Library

62.	திருமூழிக்களம்	திருமங்கையாழ்வார் நம்மாழ்வார்	3 11	14	நின்ற திருக்கோலம்
63.	திருவல்லவாழ்	திருமங்கையாழ்வார் நம்மாழ்வார்	11 11	22	நின்ற திருக்கோலம்
64.	திருக்கடித்தானம்	நம்மாழ்வார்		11	நின்ற திருக்கோலம்
65.	திருச்செங்குன்றூர்	நம்மாழ்வார்		11	நின்ற திருக்கோலம்
66.	திருப்புலியூர் (குட்டநாடு)	நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்	11 1	12	நின்ற திருக்கோலம்
67.	திருவாறன்விளை	நம்மாழ்வார்		11	நின்ற திருக்கோலம்
68.	திருவண்வண்டூர்	நம்மாழ்வார்		11	நின்ற திருக்கோலம்
69.	திருவனந்தபுரம்	நம்மாழ்வார்		11	புஜங்க சயனம்
70.	திருவட்டாறு	நம்மாழ்வார்		11	புஜங்க சயனம்
71.	திருவண்பரிசாரம்	நம்மாழ்வார்		1	வீற்றிருந்த திருக்கோலம்
IV.	நடுநாட்டுத் திவ்ய தேசங்கள் - 2				
72.	திருவஹிந்திபுரம்	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
73.	திருக்கோவலூர்	திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார்	18 2 1	21	நின்ற திருக்கோலம்
V.	தொண்டை நாட்டுத் திவ்ய தேசங்கள் - 22				
74.	திருக்கச்சி அத்திகிரி (காஞ்சிபுரம்-1)	திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார்	4 2 1	7	நின்ற திருக்கோலம்

Koviloor Digital Library

75.	திருஅட்டபுயகரம் (காஞ்சிபுரம்-2)	திருமங்கையாழ்வார் பேயாழ்வார்	11 1	12	நின்ற திருக்கோலம்
76.	திருத்தண்காவிளக்கொளி பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்-3)	திருமங்கையாழ்வார்		2	நின்ற திருக்கோலம்
77.	திருவேளுக்கை அழகிய சிங்க பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்-4)	பேயாழ்வார் திருமங்கையாழ்வார்	3 1	4	நின்ற திருக்கோலம்
78.	திருநீரகம் (காஞ்சிபுரம்-5) உலகளந்தார் கோயில் உள்ளது.	திருமங்கையாழ்வார்		1	நின்ற திருக்கோலம்
79.	திருப்பாடகம் பாண்டவ பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்-6)	திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார்	2 2 1 1	6	வீற்றிருந்த திருக்கோலம்
80.	திருநிலாத்திங்கள் துண்டப்பெருமாள் (காஞ்சிபுரம்-7) திருவேகம்பநாதர் கோயிலுள்ளது.	திருமங்கையாழ்வார்		1	நின்ற திருக்கோலம்
81.	திருஊரகம் உலகளந்த பெருமாள் கோவில் ஆழ்வார் (காஞ்சிபுரம்-8)	திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார்	4 2	6	நின்ற திருக்கோலம்

Koviloor Digital Library

82.	திருவெஃகாயதோத்தாரிய பெருமாள் (காஞ்சிபுரம்-9)	திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் பொய்கையாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார்	3 6 1 4 1	15	புஜங்க சயனம்
83.	திருக்காரகம் உலகளந்தார் கோயில் (காஞ்சிபுரம்-10)	திருமங்கையாழ்வார்		1	நின்ற திருக்கோலம்
84.	திருக்கார்வானம் உலகளந்தார் கோயிலில் உள்ளது. (காஞ்சிபுரம்-11)	திருமங்கையாழ்வார்		1	நின்ற திருக்கோலம்
85.	திருக்கன்வனூர் காஞ்சி காமாட்சியம்மன் கோவிலுள் உள்ளது. (காஞ்சிபுரம்-12)	திருமங்கையாழ்வார்		1	நிற்றல், இருத்தல், கிடத்தல் ஆகிய மூன்று திருக்கோலம்
86.	திருப்பவளவண்ணம் (காஞ்சிபுரம்-13)	திருமங்கையாழ்வார்		1	நின்ற திருக்கோலம்
87.	திருப்பரமேச்சுர விண்ணகரம் (காஞ்சிபுரம்-14) (14 கோயில்கள் காஞ்சிபுரத்தில் உள்ளன.)	திருமங்கையாழ்வார்		10	வீற்றிருந்த திருக்கோலம்
88.	திருப்புட்குழி	திருமங்கையாழ்வார்		2	வீற்றிருந்த திருக்கோலம்

Koviloor Digital Library

89.	திருநின்றவூர்	திருமங்கையாழ்வார்		2	நின்ற திருக்கோலம்
90.	திருஎவ்வுள்ளூர் (திருவள்ளூர்)	திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார்	11 1	12	புஜங்க சயனம்
91.	திருவல்லிக்கேணி (சென்னை)	திருமங்கையாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார்	10 1 1	12	நின்ற திருக்கோலம்
92.	திருநீர்மலை i. மலையடிவாரம் ii. மலைமேல்கோயில் (சாந்தநரசிம்மன்) (ரங்கநாதன்)	திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	19 1	20	நின்ற திருக்கோலம் வீற்றிருந்த திருக்கோலம்
93.	திருவிடந்தை	திருமங்கையாழ்வார்		13	நின்ற திருக்கோலம்
94.	திருக்கடல்மல்லை (மகாபலிபுரம்)	திருமங்கையாழ்வார் பூதத்தாழ்வார்	26 1	27	புஜங்க சயனம்
95.	திருக்கடிகை (சோளங்கிபுரம்) மலைமேல்கோயில்	திருமங்கையாழ்வார் பேயாழ்வார்	3 1	4	வீற்றிருந்த திருக்கோலம்
VI.	வடநாட்டுத் திவ்ய தேசங்கள் - 11				
96.	திருஅயோத்தி	பெரியாழ்வார் குலசேகராழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார்	6 4 1 1 1	13	வீற்றிருந்த திருக்கோலம்

Koviloor Digital Library

97.	திருநைமிசாரண்யம்	திருமங்கையாழ்வார்		10	நின்ற திருக்கோலம்
98.	திருப்பிருதி	திருமங்கையாழ்வார்		10	புஜங்க சயனம்
99.	திருக்கண்டங்கடி நகர் (தேவப் பிரயாகை)	பெரியாழ்வார்		11	நின்ற திருக்கோலம்
100.	திருவதரியாசிரமம் (பத்ரிநாத்)	பெரியாழ்வார் திருமங்கையாழ்வார்	1 21	22	வீற்றிருந்த திருக்கோலம்
101.	திருச்சாளக் கிராமம்	பெரியாழ்வார் திருமங்கையாழ்வார்	2 10	12	நின்ற திருக்கோலம்
102.	திருவடமதுரை (பிருந்தாவனம் கோவர்த்தனம் அடங்கியது)	பெரியாழ்வார் ஆண்டாள் தொண்டரடிபொடியாழ்வார் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார்	16 19 1 4 10	50	நின்ற திருக்கோலம்
103.	திருவாய்ப்பாடி (கோகுலம்)	பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கை	10 5 7	22	நின்ற திருக்கோலம்
104.	திருத்துவாரகை	பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார்	5 4 2 1 1	13	நின்ற திருக்கோலம்
105.	திருச்சிங்கவேர்குன்றம் (அகோபிலம்) ஆந்திரா	திருமங்கையாழ்வார்		10	வீற்றிருந்த திருக்கோலம்

Koviloor Digital Library

106.	திருவேங்கடம் (திருமலை திருப்பதி)	பெரியாழ்வார்	7	202	நின்ற திருக்கோலம்
		ஆண்டாள்	16		
		குலசேகராழ்வார்	11		
		திருமழிசையாழ்வார்	15		
		திருப்பாணாழ்வார்	2		
		திருமங்கையாழ்வார்	61		
		பொய்கையாழ்வார்	10		
		பூதத்தாழ்வார்	9		
		பேயாழ்வார்	19		
		நம்மாழ்வார்	52		
VI.	**வடநாட்டுத் திவ்ய தேசங்கள் - 11**				
107.	திருப்பாற்கடல்	பெரியாழ்வார்	5	51	ஆதிசேஷ சயனம்
		ஆண்டாள்	3		
		குலசேகராழ்வார்	2		
		திருமழிசையாழ்வார்	13		
		தொண்டரடிப்பொடி	1		
		திருமங்கையாழ்வார்	11		
		பொய்கையாழ்வார்	1		
		பூதத்தாழ்வார்	2		
		பேயாழ்வார்	4		
		நம்மாழ்வார்	9		

Koviloor Digital Library

108.	திருப்பரமபதம் (வைகுண்டம்-திருநாடு)	பெரியாழ்வார் 4 ஆண்டாள் 1 திருமழிசையாழ்வார் 2 திருப்பாணாழ்வார் 1 திருமங்கையாழ்வார் 1 பொய்கையாழ்வார் 2 பேயாழ்வார் 1 நம்மாழ்வார் 24	36	வீற்றிருந்த திருக்கோலம்

ஆழ்வார் திருவடிகளே சரணம்

மண்டபம் என அழைக்கப்படும் திருப்பதிகள்

போக மண்டபம் : திருவரங்கம், புஷ்ப மண்டபம் : திருப்பதி

தியான மண்டபம் : காஞ்சிபுரம்

பஞ்சகிருஷ்ண க்ஷேத்திரங்கள்

திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை, திருக்கண்ணங்குடி, திருகவித்தலம் மற்றும் திருக்கோவிலூர்.

திருமால் மூன்று கோலங்களிலும் சேவை சாதிக்குமிடங்கள்

1. திருக்கோட்டியூர், 2. திருக்கூடல், 3. திருவல்லிக்கேணி, 4. திருநீர்மலை,
5. திருபரமேச்சுர விண்ணகரம் (காஞ்சி)

Koviloor Digital Library

மங்களா சாசனம் பெற்ற திருக்கோயில்கள்

I. சோழநாட்டுத் திவ்ய தேசங்கள் - 40

1. திருவரங்கம்

வைணவத்தின் மாதவம் திருவரங்கம் என்றால் அது மிகையாகாது. வைணவத்தில் கோயில் என்றால் அது ஸ்ரீரங்கத்தையே குறிக்கும். பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படும் இந்த திவ்ய தேசம் காவிரி கொள்ளிடம் நதிகளின் நடுவே அமைந்து திருச்சி-விழுப்புரம் கார்டு லைனில் உள்ள ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளது. திருச்சி-ஸ்ரீரங்கம் நகரப் பேருந்துகளில் சென்றால் கோவிலின் தெற்கு கோபுர வாசலிலேயே இறங்கலாம்.

மூலவர் : ஸ்ரீரங்கநாதர்
(பெரிய பெருமாள், நம்பெருமாள், அழகிய மணவாளன்)

இவர் இருக்கும் திருக்கோலத்தை,

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்
கடல் நிறக் கடவுள்.

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் வர்ணிக்கிறார்.

தாயார் : அரங்கநாயகி, தலமரம் : புன்னை

விமானம் : பிரணவாக்குருதி,

தீர்த்தம் : சந்திரபுஷ்கரணி

உற்சவர் : நம்பெருமாள். அவர் நின்ற திருக்கோலத்தில் உள்ளார்.

ப்ரத்யக்ஷம் : தர்மவர்மா, காவேரி, விபீஷணன் மற்றும் சந்திரன்.

விசேடங்கள் : இங்கு லக்ஷ்மி தினமும் வந்து பூஜிப்பதாக ஐதீகம். ஆண்டாளை மணந்த அரங்கன் வைணவம் காத்து வளர்த்த ஸ்வயம்வ்யக்த க்ஷேத்திரம். பூலோக வைகுண்டம் என்று போற்றப்படும் திவ்ய தேசம்.

தாழ்ந்த குலத்துதித்த நந்தனார் பெருமையை உணர்த்திய திருப்புங்கூர் போல திருப்பாணாழ்வாரின் பெருமையை உலகுக்கு காட்டிய தலம். அதைத் திருப்பாணாழ்வார்,

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணை
உண்டவாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணி அரங்கன் என் அமுதினை
கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே

என்று மங்களா சாசனம் செய்துள்ளார்.

Koviloor Digital Library

திருமங்கையாழ்வார் திருமதில் பணியும், தொண்டரடிப்பொடியாழ்வார் நந்தவனப் பணியும் செய்யப்பட்ட இடம். பட்டர் வடக்குத்திருவீதிப்பிள்ளை, பிள்ளை உலகாசிரியன், பெரிய நம்பி இவர்களின் அவதார ஸ்தலம்.

சிற்பங்கள் வடிவமைப்பு, வழிபாட்டு முறைகள் விழாக்கள், தொன்மையான நிர்வாகம் ஆகியவற்றைக் கொண்ட கலாச்சாரக் கருவூலம் திருவரங்கம் கோயில்.

ஆண்டாள், திருப்பாணாழ்வார், நாச்சியார் மற்றும் பலர் அரங்கனின் திருவடியை அடைந்துள்ளனர்.

செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் என்று ஆண்டாள் மங்களா சாசனம் செய்தபடியே என்றும் நீங்காத செங்கோலும், களையப்படாத கஸ்தூரி திலகமும் பரமபதநாதனின் கௌஸ்துபம் போன்று திருமார்பில் விளங்கும் ஒப்புயர்வற்ற அற்புத நீல நாயகமும் இந்த திவ்ய தேசத்தில் எழுந்தருளியுள்ள அழகிய மணவாளப்பெருமாளின் தனிச் சிறப்பாக உள்ளன.

இங்கு பல சன்னதிகள் உள்ளன. அவைகளில் குறிப்பாக சக்கரத்தாழ்வார் சன்னதி, தன்வந்தரி சந்நிதி, உடையவர் சந்நிதி ஆகியவைகளை குறிப்பிடலாம். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை ராக தாளத்தோடு இசைக்கும் அரையர் சேவை நடைபெறும் ஸ்தலம். நவக்கிரஹ மூர்த்திகளில் ஒருவரான சுக்கிரனால் பூஜிக்கப்பட்ட ஸ்தலமாகும்.

2. திருக்கோழி - உறையூர்

[நிகளாபுரி - உறந்தை]

இத்தலம் திருப்பாணாழ்வாரின் அவதார ஸ்தலம். இது திருச்சி மாநகராட்சி பகுதியிலேயே உள்ளது. டவுன், ஜங்ஷன், மெயின் கார்டு கேட் மார்க்கத்தில் உறையூர் அல்லது நாச்சியார் கோயில் என்ற இடத்தில் இறங்கலாம். திருச்சி ஜங்ஷனிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரம்.

பெருமாள் : **அழகிய மணவாளர்**, வடக்கே திருமுக மண்டலம்

தாயார் : **வாஸலக்ஷ்மி, உறையூர் வல்லி**
(தாயாருக்கு தனி ஸந்நிதி இல்லை) வீற்றிருந்த திருக்கோலம்.
வடக்கே திருமுக மண்டலம், திருமணத்தருண திருக்கோலம்.

விமானம் : கல்யாண விமானம்

தீர்த்தம் : கல்யாண தீர்த்தம், குடமுருட்டி நதி

ப்ரத்யக்ஷம் : ரவி, தர்மராஜன், 33 கோடி தேவர்கள்

விசேஷங்கள் : சோழ மன்னனின் திருமகளான கமலவல்லி நாச்சியார் ஸ்ரீரங்கநாதர்மீது காதல் கொண்டு விரதமிருக்க அழகிய மணவாளன் அந்தக் காதலை ஏற்று இங்கு வந்து மணம் புரிந்து கொண்டதாகக் கூறுகிறது ஸ்தல புராணம். இந்த கல்யாண உத்ஸவம் வருடந்தோறும் பங்குனி உத்திரத்திற்கு முதல் நாள் ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீரங்கநாதர் எழுந்தருளி வந்து நடைபெறுகிறது.

Koviloor Digital Library

3. திருக்கரம்பனூர்

[உத்தமர்கோவில்]

பெருமாள் : **புருஷோத்தமன்.** கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : **பூர்வாதேவி, பூர்ணவல்லி**

விமானம் : உத்யோக விமானம்

தீர்த்தம் : கதம்ப தீர்த்தம், ஸ்தல விருட்சம் : கதலி

ப்ரத்யக்ஷம் : கதம்ப மஹரிஷி, உபரிசர வஸு, திருமங்கையாழ்வார், ஸரத்குமாரர்கள். மஹாலக்ஷ்மி சிவனார்க்கு பிக்ஷையளித்த பதி, திருமால் கதம்ப மரமாகி அருளிய ஸ்தலம். சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியோருக்குத் தனித்தனி சன்னதி உள்ளது.

ஸ்ரீரங்கத்திலிருந்து 3/4 கி.மீ. தூரத்தில் உள்ள சிறிய ஸ்டேஷன். திருச்சியிலிருந்தும், ஸ்ரீரங்கத்திலிருந்தும் திருவெள்ளறை போகும் பஸ் வழியில், இங்கு இறங்கலாம்.

இந்த ஸ்தலத்தில் சிவபெருமான் பிக்ஷாடணமூர்த்தியாகத் தம் குடும்பத்தோடு இருப்பதால் இத்தலத்திற்கு பிக்ஷாண்டார் கோயில் என்ற பெயரும் வழங்கி வருகிறது. இது சங்கடம் தீர்க்கும் சப்தகுரு ஸ்தலமாகும். தேவகுரு பிரஹஸ்பதி, அசுரகுரு சுக்ராச்சாரியார், ஞானகுரு சுப்பிரமணியர், படைப்புக்குரு பிரம்மதேவன், விஷ்ணு குரு வரதராஜப் பெருமாள், சக்தி குரு சௌந்தரநாயகி, சிவகுரு தக்ஷிணாமூர்த்தி ஆகிய சப்த குருக்களும் ஒருங்கே அருள்பாலிக்கும் உத்தமர் கோயிலைத் தரிசித்தால் கோடி புண்ணியம் கிட்டும் என்பர். பிரம்மா இங்கு மிகவும் சக்தி வாய்ந்த குரு. ஆகவே இங்கு வியாழக்கிழமை மிக மிக விசேடம்.

4. திருவெள்ளறை

[வேதகிரி-ஸ்வேதகிரி]

மூலவர் : **புண்டரீகாக்ஷன் - செந்தாமரைக்கண்ணன்**
கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : செண்பகவல்லி, பங்கயச்செல்வி. தனிக்கோயில் நாச்சியார் சந்நிதி உண்டு.
உத்ஸவ தாயாருக்கு பங்கஜவல்லி என்ற திருநாமம்.

விமானம் : விமலாக்ருதி விமானம்

தீர்த்தம் : மதிலுக்குள்ளேயே 7 தீர்த்தங்கள் உள்ளன.
திவ்ய கந்த க்ஷீர புஷ்கரிணிகள், குச, சக்ர, புஷ்கல, பத்ம, வராஹ, மணிகர்ணிகா.

ப்ரத்யக்ஷம் : பெரிய திருவடி, சிபிச்சக்கரவர்த்தி, பூதேவி, மார்க்கண்டேயர், லக்ஷ்மி, ப்ரமருத்ராதிகள்.

Koviloor Digital Library

இங்கு உத்தராயண, தக்ஷிணாயன வாசல்கள் உள்ளன. சிவத்தலம் ஆங்கூரில் சிவன் ஆயிரவர்களில் ஒருவரானதுபோலத் திருமால் 3,700 வைஷ்ணவரில் ஒருவரான தலம். உய்யக்கொண்டார் எங்காழ்வான் அவதார ஸ்தலம்.

இரவில் நேரங்கழித்து வந்த பெருமாளைத் தாயார் ஏன் இவ்வளவு நேரம் என்று கேட்டதைக் குறிக்கும் வகையில் நாழி கேட்டான் வாசல் என்று ஒரு வாசலுமுண்டு. ஸ்ரீதேவி, பூதேவி, ஸுர்ய சந்திரர்கள் ஆதிசேஷன் இவர்கள் மனித உருவில் பக்கத்தில் நின்று கைங்கர்யம் செய்வது இந்தச் சன்னிதியின் சிறப்பு. இங்கே சக்கரத்தாழ்வார்க்கு தனிச் சந்நிதி உள்ளது.

திருச்சி துறையூர் மார்க்கத்தில் திருச்சியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து பாதையிலிருந்து சுமார் 1/2 கி.மீ. தள்ளி உள்ளது.

5. அன்பில்

பெருமாள் : **வடிவழகிய நம்பி.**
தெற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **அழகியவல்லித் தாயார்**

விமானம் : தாரக விமானம்

தீர்த்தம் : மண்டூக புஷ்கரிணி, கொள்ளிடம்.

ப்ரத்யக்ஷம் : ப்ரஹ்மா, வால்மீகி.

திருச்சி - கல்லணை - கும்பகோணம் பஸ் மார்க்கத்தில், திருச்சிக்கு சமீபம் லால்குடிக்கு கிழக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. கொள்ளிடத்தின் அக்கரையில் உள்ள கோயிலடியிலிருந்தும் நதியைக் கடந்து வரலாம்.

6. திருப்பேர் நகர் [அப்பக்குடத்தான் (கோவிலடி)]

பெருமாள் : **அப்பக்குடத்தான்**
புஜங்க சயனம், மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : இந்திராதேவி கமலவல்லி

விமானம் : இந்திர விமானம்

தீர்த்தம் : திருக்காவேரி

ப்ரத்யக்ஷம் : உபமன்யு, பராசரர்

மங்களாசாசனம் : பெரியாழ்வார், திருமழிசை, கலியன், நம்மாழ்வார்
(33 பாசுரங்கள்)

தஞ்சை - திருக்காட்டுப்பள்ளி - கல்லணை மார்க்கத்தில் உள்ளது. அன்பில் தலத்திலிருந்து கொள்ளிடம் கடந்தும் வரலாம். திருச்சியிலிருந்து சுமார் 20 கி.மீ. தூரத்தில் உள்ளது. கல்லணைக்கு சுமார் 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருப்பேர் நகர் என்று கேட்டால் யாருக்கும் தெரியாது. கோயிலடி என்றே சொல்ல வேண்டும்.

Koviloor Digital Library

விசேடங்கள் : துர்வாசரின் சாபத்துக்கு ஆளான உபரிஸ்ரவஸ் மன்னன் சாபவிமோசனத்திற்காக இத்தலத்தில் பெரிய அளவில் அன்னதானம் செய்து வந்தான். ஒரு நாள் அன்னதான உணவு தீர்ந்து போன சமயம் திருமால் முதுமைக்கோலத்தில் வந்து உணவு வேண்டினார். உணவு சமைக்க நேரம் அதிகம் ஆகும் என்பதால் அன்னத்திற்கு பதிலாக அப்பம் வேண்டுமென்றார். மன்னனும் அப்பத்தைத் தயாரித்து உணவாக அளிக்க பகவான் விரும்பி உண்டார். மன்னன் சாபம் நீக்கப் பெற்றான். இறைவனுக்கு அப்பக்குடத்தான் என்றும் திருப்பெயர் உண்டாயிற்று. நம்மாழ்வார் இத்தலத்திலிருந்து திருநாட்டுக்குச் சென்றதாக ஐதீகம்.

7. திருக்கண்டியூர் [கண்டியூர்]

பெருமாள் : **ஹரசாபவிமோசனப் பெருமாள்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **கமலவல்லி**

விமானம் : கமலாக்ருதி விமானம்

தீர்த்தம் : கபாலமோசன புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : அகஸ்தியர், ருத்ரன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (1 பாசுரம்)

தஞ்சை - திருவையாறு சாலை மார்க்கத்தில் தஞ்சையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்தலம் இது. இத்தலத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகிய மூவரும் இருத்தலால் இத்தலம் மும்மூர்த்தி தலம் எனப்படுகிறது. சிவனுக்கு ஏற்படவிருந்த பிரமஹத்தி தோஷம் நீங்கிய ஸ்தலம்.

8. திருக்கூடலூர் [ஆடுதுறைப்பெருமாள் கோவில்]

பெருமாள் : **வையங்காத்த பெருமாள்** - ஜகத்ரக்ஷகன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **பத்மாஸநவல்லி**

விமானம் : சுந்தரஸத்வ விமானம்

தீர்த்தம் : சக்ர தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : நந்தகமாமுனி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

தஞ்சை - திருவையாறு - கும்பகோணம் பேருந்து மார்க்கத்தில் திருவையாறிலிருந்து 11 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்தலம். இங்கு பலரும் நீராடி அவர்கள் பாவத்தால் தனது எழில் குன்றிய காவிரியன்னை பெருமாளைக் குறித்துத் தவம் செய்து பாப விமோசனம் அடைந்து ஒளி பெற்ற தலம். இதைக் கேள்விபட்ட தேவர்களும், நந்தக முனிவரும் கூட்டமாக வந்து பெருமாளைச் சேவித்ததால் இத்தலம் கூடலூர் என்று பெயர் பெற்றது.

Koviloor Digital Library

9. திருக்கவித்தலம் [கபிஸ்தலம்]

பெருமாள் : **கஜேந்திரவரதர்**
புஜங்க சயனம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **ரமாமணிவல்லி - பொற்றாமரையாள்**

விமானம் : ககனாக்ருதி விமானம்

தீர்த்தம் : கஜேந்திர புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : கஜேந்திரன், ஆஞ்சனேயர்

மங்களாசாசனம் : திருமழிசையாழ்வார் (1 பாசுரம்)

தஞ்சாவூர் - திருவையாறு - கும்பகோணம் வழியில் உள்ள ஸ்தலம். கும்பகோணத்திலிருந்தும் பாபநாசத்திலிருந்தும் பேருந்து வசதி உள்ளது.

இது ஒரு பஞ்சகிருஷ்ணாரண்ய க்ஷேத்திரம்.

விசேடங்கள் : ஆதிமூலமே என்று அழைத்தபோது கஜேந்திரனுக்கு அபயம் அளித்த ஸ்தலம். இவருக்கு ஆற்றங்கரை கிடக்கும் கண்ணன் என்ற பெயரும் உண்டு.

முக்கிய குறிப்பு : அர்ச்சகர் வரும் நேரம் தெரிந்து முன் ஏற்பாட்டுடன் செல்வது நல்லது.

கூற்றமும் சாரா கொடு வினையும் சாரா தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன் - ஆற்றங்
கரைக் கிடக்கும் கண்ணன் கடல் கிடக்கும் மாயன்
உரைக் கிடக்கும் உள்ளத்து எனக்கு.

- *திருமழிசையாழ்வார்*

10. திருப்புள்ளம் பூதங்குடி

பெருமாள் : **வல்வில் ராமன்**
புஜங்க சயனம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **பொற்றாமரையாள்**

விமானம் : சோபன விமானம்

தீர்த்தம் : ஜடாயு தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : இராமன், ஜடாயு

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

நான்கு கரங்களுடன் ராமன் சயன கோலத்தில் காட்சியளிக்கும் ஸ்தலம். தொண்டரடிப்பொடியாழ்வாரின் அவதாரஸ்தலமான மண்டங்குடி இதனருகே உள்ளது.

கும்பகோணத்திற்கு அருகே சுவாமிமலை - திருவைகாவூர் மார்க்கத்தில் ஸ்வாமி மலையிலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்தத்தலத்தில் சடாயு என்னும் புள்ளுக்குச் செய்ய வேண்டிய சடங்கை இராமபிரான் செய்தமையால்

Koviloor Digital Library

புள்ளம் பூதங்குடியாயிற்று. நான்கு கரங்களுடன் இராமபிரான் சங்கு சக்கரத்தோடு உள்ள திருத்தலம் இதுவேயாகும். மேலும் இங்கு இராமர் சயணகோலத்தில் இருப்பது ஒரு சிறப்பு. அன்பர்கள் இராமபிரானைத் தொழுது சுகங்கள் எல்லாம் பெறுவார்களாக.

11. திருஆதனூர்

பெருமாள்	:	**ஆண்டளக்கும் ஐயன்** புஜங்க சயனம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**ஸ்ரீரங்கநாயகியார்**
உற்சவர்	:	அழகிய மணவாளன்
விமானம்	:	ப்ரணவ விமானம்
தீர்த்தம்	:	சூர்ய புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம்	:	காமதேனு, திருமங்கையாழ்வார்
மங்களாசாசனம்	:	திருமங்கையாழ்வார் (1 பாசுரம்)

குடந்தை அருகே சுவாமி மலையிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

விசேஷம் : பெருமாளின் பாதாரவிந்தங்களை பற்றிக் கொண்டு திருமங்கையாழ்வாரும் காமதேனுவும் உள்ளனர். இப்பெருமாளை ஆதனூர் ஆண்டளுக்கும் ஐயன் என்கின்றனர். பில்லி சூனியம் கோளாறுகள் நீக்கும் தலம். பிரிந்த தம்பதியர்களை கூட்டுவிக்கும் தலம் இது.

முன்னவனை முழிக்களத்து விளக்கினை
அன்னவனை ஆதனூர் ஆண்டு அளக்கும் ஐயனை
நென்னலை இன்றினை, நாளையை

- திருமங்கையாழ்வார்

12. திருக்குடந்தை [கும்பகோணம்]

பெருமாள்	:	சாரங்கபாணி - ஆராவமுதன் உத்யோக சயனம். தெற்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**கோமளவல்லி**
விமானம்	:	வேதவேத விமானம்
தீர்த்தம்	:	ஹேமபுஷ்கரிணி
ப்ரத்யக்ஷம்	:	ஹேமமஹரிஷி
மங்களாசாசனம்	:	பொய்கை, மதுரகவி, குலசேகரர், திருப்பாணன், தொண்டரடிப்பொடி தவிர ஏனைய ஆழ்வார்கள் (51 பாசுரங்கள்)

நாலாயிர திவ்யப்பிரபந்தத்தை நாதமுனிகள் தொகுப்பதற்கு காரணமாகியவர் இத்தலத்துப் பெருமாள்.

Koviloor Digital Library

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. பேருந்து வசதி மிக்க நகரம்.

சிறப்புகள் : மூலவர்போல உற்சவருக்கும் சகல வழிபாடு. உபயப்ரதான திவ்ய தேசமென்று போற்றப்படுகிற தலம். உத்தராயண மற்றும் தக்ஷிணாயன வாயில்கள் உள்ளன. தேர் வடிவக் கருவறை. காசிக்கு சமம். மகாமகக்குளம் இங்குள்ளது ஒரு சிறப்பு.

13. திருவிண்ணகர் [ஒப்பிலியப்பன் கோவில்]

மார்க்கண்டேயக்ஷேத்திரம்

பெருமாள் : **ஒப்பிலியப்பன்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **பூமிதேவி நாச்சியார்**

விமானம் : விஷ்ணு, சுத்தானந்த விமானம்

தீர்த்தம் : அஹோராத்ர புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : மார்க்கண்டேயர், கருடன், காவேரி, தருமதேவதை

மங்களாசாசனம் : பொய்கையார், பேயார், நம்மாழ்வார்,
திருமங்கையாழ்வார் (47 பாசுரங்கள்)

கும்பகோணத்திலிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ள பேருந்து வசதி மிக்க ஸ்தலம். உப்பில்லா நிவேத்தியத்தால் உப்பிலியப்பன். திருப்பதியில் செய்ய விரும்பிய சேவைகளை இங்கேயே சமர்ப்பிக்கலாம். நம்மாழ்வாரை தன்னுடன் இருத்திக் கொள்வதற்காக பெருமாள் அவருக்கு பல்வேறு திவ்ய தேசங்களின் காட்சியளித்த பதி. இறைவனுக்கு திருவிண்ணகரப்பன், பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன், என்னப்பன் என்று பல பெயர்கள் உண்டு. மகாவிஷ்ணு தன்மனையாளுக்கு சாபம் கொடுத்து பிரிந்து விட்டார். அவர் பூலோகம் வந்து மார்க்கண்டேயருக்கு மகளாய் பிறந்தார். பிரிவுத்துயர் தாளாமல் தவித்த பெருமாள் தன் கோபத்தையும், வைராக்கியத்தையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு பூலோகம் வந்து மனையாளைச் சேர்ந்த தலம். பிரிந்தவர்கள் இங்கு வந்து வேண்டி திரும்பவும் சேர்ந்து பரவசம் எய்துகிறார்கள் என்பது இத்தலத்தின் மற்றொரு சிறப்பு.

14. திருநறையூர் [நாச்சியார் கோவில்]

பெருமாள் : **நறையூர் நம்பி**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **நம்பிக்கை நாச்சியார்** - வஞ்சுளவல்லி

விமானம் : ஸ்ரீநிவாஸ விமானம் (ஹேம விமானம்)

தீர்த்தம் : மணிமுக்தா நதி

ப்ரத்யக்ஷம் : ப்ரஹ்மா, மேதாவி ரிஷி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (110 பாசுரங்கள்)

Koviloor Digital Library

திருமங்கையார் பெருமாளிடமிருந்து பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்ற இடம். இங்குள்ள கல்கருட வாகனம் தனிச்சிறப்பு கொண்டது. கும்பகோணத்திலிருந்து குடவாசல் வழியாக திருவாரூர் செல்லும் சாலை வழியில் கும்பகோணத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் உள்ளது. ஒப்பிலியப்பன் கோயிலிலிருந்தும் செல்லலாம். இக்கோயில் கருவறையில் தாயார் மற்றும் சங்கர்ஷணன், அதிருத்தன் பிரத்தியும்னன், புருக்ஷோத்தமன், நான்முகன் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். 108 திவ்ய தேசங்களின் வைணவமூர்த்திகளை இங்கு ஒரே இடத்தில் காணலாம். மோதகப்பிரியனான கல்கருடன் இங்கு விசேஷமானவர். வஞ்சுனம் என்னும் மரத்தின் அடியில் குழந்தையாக இருந்த வஞ்சுள வல்லி என்னும் நீளாதேவியை மேதாவி முனிவர் வளர்க்க, விஷ்ணு 5 உருவங்களில் மணந்த தலம். இத்தலத்தில் வஞ்சுளவல்லித் தாயாருக்கு முதலிடமானதால் நாச்சியார் கோயில் என்றும் திருப்பெயர் பெற்றது. இது சிறந்த பிரார்த்தனை ஸ்தலம். இங்கு திருநறையூர் சித்தீசம் என்னும் சிவாலயமும் உள்ளது.

கலங்க முந்நீர் கடைந்து அமுதம் கொண்டு இமையோர்
துலங்கள் தீரநல்கு சோதிச்சுடராய்
வலங்கையாழி இடங்கைச் சங்கம் உடையானூர்
நலங்கொள்வாய்மை அந்தணர் வாழும் நறையூரே.

- திருமங்கையாழ்வார்

15. திருச்சேறை [பஞ்சஸார க்ஷேத்ரம்]

பெருமாள் : **ஸாரநாதன்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார் : ஸாரநாயகி - பஞ்ச லக்ஷ்மி
விமானம் : ஸார விமானம்
தீர்த்தம் : ஸார புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம் : காவேரி, மார்க்கண்டேயன்
மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (13 பாசுரங்கள்)

கும்பகோணம் - குடவாசல் - திருவாரூர் மார்க்கத்தில் கும்பகோணத்திலிருந்து 14 கி.மீ. தூரத்தில் உள்ளது. நாச்சியார் கோவிலிலிருந்து 5 கி.மீ. தொலைவு. சாரநாதன் கோயில் காவேரிக்கு அருளியதால் காவேரியம்மனுக்கு குளக்கரையில் சந்நிதி. இங்கு பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி, மகாலட்சுமி, சாரநாயகி ஆகிய 5 தாயார்களுடன் தேரில் வருவது கண் கொள்ளாக் காட்சி. வண்டிக்கு ஒரு கல்லாக இறக்கி கோயில் பணி செய்த நாகபூபாலனைக் காப்பதற்காக பெருமாள் மன்னார்குடி ராஜகோபாலனாக காட்சியளித்த திருத்தலம். இங்கு சிறப்புடைய சிவ ஸ்தலம் ஒன்றும் உள்ளது. இதில் பெருமாள், தாயார், விமானம், தீர்த்தம், தலம் என்னும் ஐந்தும் சாரமுள்ளவையாய் இருப்பதால் இது பஞ்ச ஸார க்ஷேத்திரம்.

Koviloor Digital Library

தாராளும் வரைமார்பன் தன்சேறை
எம்பெருமான் உம்பர் ஆளும
பேராளனைப் போற்றிப் பணிந்து
வாழ்வில் உய்வோமாக. *- திருமங்கையாழ்வார்*

16. திருக்கண்ணமங்கை

பெருமாள் : பக்தவத்ஸலப்பெருமாள் - பத்தராவிப் பெருமாள்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : அபிஷேகவல்லித்தாயார்

விமானம் : உத்பல விமானம்

தீர்த்தம் : தர்சன புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : வருணன், ரோமசமுனி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (14 பாசுரங்கள்)

விமானம், வனம், மண்டபம், தீர்த்தம், க்ஷேத்ரம், நதி, நகரம் ஆகிய ஏழு அங்கங்களும் அமுதமயமாக உள்ளதால் ஸ்ப்தாம்ருத க்ஷேத்ரம் என்ற ப்ரஸித்தி, லக்ஷ்மி வனம் என்ற பெயரும் இத்தலத்திற்கு உண்டு.

கும்பகோணம் - திருவாரூர் மார்க்கத்தில் கும்பகோணத்திலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவாரூரில் இருந்தும், கும்பகோணத்தில் இருந்தும் பேருந்து வசதி உள்ளது. இங்கு ஒரு நாள் தங்கியிருந்தால் முக்தி நிச்சயம். சித்தாமூரில் சித்தர்கள்போல், தேவர்கள் தேனீக்களாக மாறி நித்ய சேவை செய்யும் தலம். தாயார் சன்னதியில் தேன்கூடு பூஜை தினமும் நடக்கிறது. கரூரில் சித்தர் சிவஜோதியில் கலந்ததுபோல ஆண்டான் என்ற பக்தர் மூலவரோடு ஜோதி வடிவில் ஐக்கியமான பதி. திருமங்கையாழ்வாரின் பாசுரத்தை ரசித்துக் கேட்டிட பெருமாள் பெரியவாச்சான் பிள்ளையாக அவதரித்த பதி. லட்சுமி தவம் செய்ததால் லட்சுமி வனம் எனவும், திருமணம் நிகழ்ததால் கிருஷ்ணமங்கள க்ஷேத்திரம் எனவும் பெயர் பெற்றது. விஷ்வக்சேனர் இத்தலத்தில் இரண்டு கரங்களுடன் காட்சி தருகிறார்.

17. திருக்கண்ணபுரம்

பெருமாள் : சௌரிராஜன், நீலமேகப் பெருமாள்
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உற்சவர் : சௌரிராஜப் பெருமாள்

தாயார் : கண்ணபுரநாயகி - தனிச்சந்நிதி

விமானம் : உத்பலர் விமானம்

தீர்த்தம் : நித்ய புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : கண்வர் கருடன், தண்டக மஹரிஷி

மங்களாசாசனம் : பட்டர்பிரான், கோதை, கலியன், குலசேகரர், நம்மாழ்வார், (128 பாசுரங்கள்)

Koviloor Digital Library

எட்டெழுத்து மந்திரத்தின் எழுத்துக்களின் உருவமாக கோலம் தரும் பெருமாள் உறையும் ஸ்தலம். நாகப்பட்டிணம் - நன்னிலம் சாலை வழியில் உள்ள திருப்புகலூரிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்தலம். திருவாரூரிலிருந்து பஸ் நேரடியாகச் செல்கிறது. மாயவரத்திலிருந்தும் திருப்புகலூர் வரலாம். இது பஞ்சகிருஷ்ண தலங்களில் ஒன்று. மற்றவை திருக்கோவலூர், திருக்கண்ணங்குடி திருகவித்தலம், திருக்கண்ணமங்கை. திருவரங்கத்தை மேலை வீடு எனவும் இத்தலத்தை கீழை வீடு எனவும் கூறுவர். பெருமாளுக்கு சூட்டிய மாலையொன்றை அர்ச்சகர் அரசனுக்கு கொடுக்க அதில் நீண்ட தலைமயிர் ஒட்டி இருந்தது. அதை உறுதிப்படுத்த பெருமாள் நீண்ட தலைமயிர் விளங்குமாறு தோன்றியதால் **சௌரிராஜன்** என்னும் பெயர் பெற்றார்.

திருமங்கையாழ்வாருக்கு பெருமாளே மந்திர உபதேசம் செய்த பதி. அர்த்தசாம பூஜை முடிந்து விட்டாலும் பக்தர் முனையதரையர் அளித்த பொங்கலை மானசீகமாக ஏற்றதால் அர்த்த சாம நிவேதனம் முனியோதரப்பொங்கல் எனப்படுகிறது. வைகாசி பிரம்மோத்ஸவத்தில் பெருமாள் சிவனாக, பிரமனாக, மாலாகக் காட்சி கொடுப்பது சிறப்பு. அபயஹஸ்தத்திற்கு பதிலாக வரதஹஸ்தம் விளங்குகின்றது. ஸ்ரீமன் நாராயணன் எல்லா அக்ஷரங்களிலும் இந்த க்ஷேத்திரத்தில் ஸாந்நித்யம் செய்கிறபடியால் இது ஸ்ரீமதஷ்டாக்ஷர மஹா மந்திர சித்தி க்ஷேத்திரமாகும்.

18. திருக்கண்ணங்குடி

பெருமாள்	:	**ச்யாமளமேனிப் பெருமாள்** நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**அரவிந்தவல்லி நாச்சியார்**
விமானம்	:	உத்பல விமானம்
தீர்த்தம்	:	சரவண புஷ்கரிணி, தலவிருட்சம்: மகிழமரம் எட்டு தீர்த்த கிணறுகளும் உள்ளன
ப்ரத்யக்ஷம்	:	ப்ருகு சைத்யர், கௌதம முனி, திருமங்கை
மங்களாசாசனம்	:	திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

நாகப்பட்டினத்திலிருந்து திருவாரூர் செல்லும் சாலை வழியில் ஆழியூர் என்ற இடத்திலிருந்து தெற்கே 1 கி.மீ. தூரத்தில் உள்ள ஸ்தலம். திருவாரூர் - நாகை இருப்புப்பாதையில் கீழ்வேளூர் இரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரம்.

காயாமகிழ், உறங்காப்புளி, தேறா வழக்கு ஊறாக்கிணறு திருகண்ணங்குடி என்பது வழக்கு மொழி. தாயார் சந்நிதியில் மூலவரும் உற்சவரும் ஒரே முகச்சாடையிலிருப்பது இங்கு விசேஷம். வசிஷ்ட முனிவரின் பக்திக்கு கட்டுப்பட்டு அவரால் வெண்ணையால் சிருஷ்டிக்கப்பட்ட கண்ணன் இங்கு குடியிருக்கிறான். பஞ்சபத்ரா க்ஷேத்திரம். பஞ்சகிருஷ்ண தலமும்கூட. சிவத்தலம் நல்லூரில் சடாரி சேவிப்பதுபோல் இங்கு திருநீறணி விழாவில் விபூதி பிரசாதமாக வழங்கப்படுகிறது.

Koviloor Digital Library

19. திருநாகை [நாகப்பட்டினம்]

பெருமாள் : **ஸௌந்தர்யராஜன் - நீலமேகப்பெருமாள்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார் : **ஸௌந்தர்யவல்லி**
விமானம் : ஸௌந்தர்ய விமானம்
தீர்த்தம் : ஸாரபுஷ்கரிணி
ப்ரத்யக்ஷம் : நாகராஜன், கலியன், ப்ரம்ஹாதிகள்
மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

நாகப்பட்டினம் ரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. மாயவரத்திலிருந்து பேருந்துகள் கோயில் அருகிலேயே செல்கிறது. அபூர்வமான அஷ்டபுஜ நரசிம்மர். தசாவதாரத்தை விவரிக்கும் மாலை உள்ளது. துருவனும், ஆதிசேஷனும் பணிந்த தலம்.

20. தஞ்சை மாமணிக்கோவில்
[வெண்ணாத்தங்கரை பெருமாள்]

பெருமாள் (1) : **நீலமேகப்பெருமாள்**
வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார் : **செங்கமலவல்லி**
விமானம் : ஸௌந்தர்ய விமானம்
தீர்த்தம் : அம்ருத நதி, கன்னிகா புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம் : பராசரமுனி

பெருமாள் (2) : **மணிக்குன்றப்பெருமாள்**
வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார் : **அம்புஜவல்லி**
விமானம் : மணிக்கூட விமானம்
தீர்த்தம் : ஸ்ரீராம தீர்த்தம்
ப்ரத்யக்ஷம் : மார்க்கண்டேயர்

பெருமாள் (3) : **நரசிம்மர் (தஞ்சையாளி)**
வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார் : **தஞ்சைநாயகி**
விமானம் : வேதஸுந்தர விமானம்
தீர்த்தம் : சூரிய புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம் : மார்க்கண்டேயர்
மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார்
(5 பாசுரங்கள்)

Koviloor Digital Library

தஞ்சாவூர் - கும்பகோணம் மார்க்கத்தில் தஞ்சையிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் ஒரே திவ்ய தேசமாக கருதப்படும் மூன்று கோயில்களும் வெண்ணாற்றங்கரையில் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளன. பஸ் வசதி உள்ள இடம். மூன்று கோவில்களிலும் உற்சவர் பெயர் ஸ்ரீமந் நாராயணன் தஞ்சையைப் பார்த்தபடி விக்ரஹங்கள் அமைந்திருப்பதால் தஞ்சையைக் காத்தருளும் தெய்வம் என வழங்கப்படுகிறது.

21. நந்திபுர விண்ணகரம்
[நாதன் கோயில்]

பெருமாள் : **விண்ணகரப் பெருமாள்**, ஜகந்நாதர், நாகநாதன்
வீற்றிருந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **செண்பகவல்லி**

விமானம் : மந்த்ர விமானம்

தீர்த்தம் : நந்தி தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : நந்தி, சிபி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

கும்பகோணத்திலிருந்து தெற்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்தலம். நகர் பேருந்தில் கொற்கை என்னுமிடம் சென்று அங்கிருந்து இத்தலத்தை அடையலாம். தக்ஷிண ஜகந்நாதம் என்று இத்தலத்தை அழைப்பார்கள். நந்தி சாப விமோசனம் பெற்ற தலம். கிழக்கு நோக்கியிருந்த பெருமாள் சிபிச்சக்கரவர்த்தியின் தியாகத்தைக் காண மேற்கே திரும்பிய ஸ்தலம். நந்தி எம்பெருமான் இத்தலத்தில் எப்பெருமாளை நோக்கித் தவமிருந்து அருள் பெற்றதால் நந்தி விண்ணகரம் எனப் பெயர் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. நாரதர் சபித்ததால் செண்பக மலர் பூஜைக்கு உகந்ததல்ல என்ற போதிலும் இத்தலத்து தாயார் செண்பகவல்லித் தாயாராக பேர் பெற்றிருக்கிறார்.

22. திருவெள்ளியங்குடி

பெருமாள் : **கோலவில்லிராமன்**
புஜங்க சயனம். கிழக்கே திருமுக மண்டலம்.

உற்சவர் : சிருங்கார சுந்தரன்

தாயார் : **மரகதவல்லி நாச்சியார்**

விமானம் : புஷ்கலாவர்த்தக விமானம்; தல விருட்சம் : கதலி.

தீர்த்தம் : சுக்ர புஷ்கரிணி, ப்ரம்ஹ தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : சுக்ரன், பிரமன், பராசரர், இந்திரன், மயன், மார்க்கண்டேயன், பூமிதேவி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

Koviloor Digital Library

கும்பகோணத்திலிருந்து அணைக்கரை போகும் பேருந்தில் பெரிய வாச்சான் பிள்ளையின் அவதார ஸ்தலமான சேங்கானூரில் இறங்கி 1 கி.மீ. தூரம் நடக்க வேண்டும். முட்டக்குடியிருந்தும் செல்லலாம். இங்குள்ள கருடருக்கு நாலு புஜம் அவர் கையில் சங்கு சக்கரங்கள் உண்டு. வைணவ மரபில சுக்ர ஸ்தலம் 108 திவ்விய தேச தரிசன பலனைத் தருவது. பார்கவபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. வழியில் உள்ள சேங்கானூர்தான் பெரிய வாச்சான் பிள்ளையின் அவதார ஸ்தலம். வெள்ளியார் (சுக்கிரன்) வணங்க இத்தலத்துப் பெருமாள் அருள் செய்ததால் இது வெள்ளியங்குடி என்ற பெயர் பெற்றது.

23. திருவழுந்தூர் [தேரழுந்தூர்]

பெருமாள் : **ஆமருவியப்பன்** (தேவாதிராஜன்)
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
இடது புறம் கருடாழ்வார் வலது புறம் பிரஹலாத ஆழ்வார்

தாயார் : **செங்கமலவல்லி**

விமானம் : கருட விமானம்

தீர்த்தம் : தர்சன புஷ்கரிணி, காவேரி

ப்ரத்யக்ஷம் : காவேரி, தர்மதேவதை, அகஸ்தியர், கருடன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (45 பாசுரங்கள்)
கவிச்சக்கரவர்த்தி கம்பன் பிறந்த ஊர்.

மாயூரம் - குத்தாலம் - கோமலம் வழியில் மாயவரத்திலிருந்து 21 கி. மீ. இங்கு அஹோபில மடம் உண்டு. கோபுரத்தின் உட்புறம் கம்பரும் அவர் மனைவியும் சிலை வடிவில் நிற்கிறார்கள். கம்பர் அவதார ஸ்தலம். தென்மேற்கே கம்பன் மேடு என்ற இடம் உள்ளது. வருடந்தோறும் கம்பன் விழா நடைபெறுகிறது.

24. திருச்சிறுபுலியூர்

பெருமாள் : **அருமாகடல்** (சலசயனப்பெருமாள்)
புஜங்க சயனம். தெற்கே திருமுக மண்டலம்.

உற்சவர் : க்ருபா ஸமுத்ர பெருமாள்

தாயார் : **திருமாமகள் நாச்சியார்** - தயாநாயகி

விமானம் : நந்தவர்த்தன விமானம்

தீர்த்தம் : மானச புஷ்கரிணி, அனந்தஸரஸ்

ப்ரத்யக்ஷம் : வ்யாசமுனி, பாலவியாக்ரமுனி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

மிகவும் சிறிய திருவுருவிலான புஜங்கசயனம் பெருமாளின் கோலம். வ்யாக்ரபாதர் மோக்ஷம் பெற்ற ஸ்தலம். மாயவரம் - பேரளம் பாதையில் கொல்லுமாங்குடியிலிருந்து கிழக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. புஜங்க

Koviloor Digital Library

சயனத்திலேயே மிகச் சிறிய திருவுருவம் இது. இதைப் பற்றி ஆழ்வார் குறைப்பட, தமது பெரிய திருவுருவை திருக்கண்ணமங்கையில் காணுமாறு பெருமாள் அருளிச்செய்ததாக ஒரு வரலாறு. அனந்தனுக்கு (ஆதிசேஷன்) கருடனிடமிருந்து அபயமளித்த திருத்தலம்.

வியாக்ரபாதர் புலிக்கால்களையும் கைகளையும் கண்களையும் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து பெற்று சிவன் ஆக்ஞைபடி இவ்விடத்தில் பெருமாளைப் பூஜித்து வைகுண்டம் அடைந்ததால் இத்தலம் “சிறுபுலியூர்” என்று பெயர் பெற்றதாக வரலாறு. அவருடைய பிம்பத்தை பெருமாளின் திருவடிக்கீழ் பிரதிஷ்டை செய்து பூஜிக்கும் வழக்கம் இங்கே உள்ளது.

25. தலைச்சங்க நாண்மதியம் [தலச்சங்காடு]

பெருமாள்	:	**நாண்மதியப்பெருமாள்** - வெண்சுடர்ப் பெருமாள் நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
உற்சவர்	:	வியாம ஜோதிப்பிரான், வெஞ்சுடர்பிரான், லோகநாதன்
தாயார்	:	**தலைச்சங்க நாச்சியார்** - செங்கமலவல்லி (உத்ஸவர்)
விமானம்	:	சந்திர விமானம்
தீர்த்தம்	:	சந்திர புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம்	:	சந்திரன், தேவர்கள், நித்யஸூரிகள்
மங்களா சாசனம்	:	திருமங்கையாழ்வார் (2 பாசுரங்கள்)

மாயூரம் - ஆக்கூர் - சீர்காழி சாலை மார்க்கத்தில் ஆக்கூரிலிருந்து 3 கி. மீ. தொலைவில் உள்ளது. தலைச்சங்காடு பேருந்து நிலையத்திலிருந்து 1/2 கி.மீ. தொலைவில் வயலின் நடுவே ஸ்தலம் அமைந்துள்ளது. இங்குள்ள பெருமாள் கையில் உள்ள சங்கு மிக அழகு. திருஸுந்தர ராமானுஜதாஸரின் முயற்சியால் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டு தாயார் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஆண்டாளின் விக்ரகம் மிக அழகு வாய்ந்த சிறிய திருமேனி உடையது. அருகில் சங்கருணாகேஸ்வரர் சிவன் கோயில் உள்ளது.

26. திருஇந்தளூர் [மாயவரம் திருவிழுந்தூர்]

பெருமாள்	:	**சுகந்தவநநாதன்** - பரிமளரங்கன் வீரசயனம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**பரிமளரங்கநாயகி, சந்திரசாபவிமோசநவல்லி - புண்டரீகவல்லி**
விமானம்	:	வேதசக்ர விமானம்
தீர்த்தம்	:	இந்து புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம்	:	சந்திரன்
மங்களாசாசனம்	:	திருமங்கையாழ்வார் (11 பாசுரங்கள்)

Koviloor Digital Library

மாயவரம் நகரிலேயே ஒரு பிரிவு. நகரப் பேருந்தும் செல்கிறது. தலைமாட்டில் காவேரி தாயும், கால்மாட்டில் கங்கைத் தாயாரும் அமர்ந்திருக்க வீரசயனத் திருக்கோலத்தில் நான்கு புஜங்களுடன் பெருமாள் காட்சி தருகிறார். ஐப்பசி மாதம் முழுவதும் விழாக் கோலம். முடவன் முழுக்கு ஸ்நான கட்டம் இங்குள்ளது. குழந்தைப் பேறுக்கு பிரார்த்தனை ஸ்தலமாக பிரபலமாகியிருக்கிறது. இவ்வூரில் மயூரநாதர் கோவிலும், அருகில் மூவலூர், திருவிளநகர், குற்றாலம், திருவாவடுதுறை முதலிய கோயில்கள் உள்ளன.

27. திருக்காவளம்பாடி

பெருமாள் : **கோபாலகிருஷ்ணன்** - ராஜகோபாலன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார் : **செங்கமல நாச்சியார்** - மடவரல் மங்கை
தாயாருக்கு சந்நிதி இல்லை
விமானம் : சுயம்பு விமானம் (வேதாமோதவிமானம்)
தீர்த்தம் : தடமலர்ப்பொய்கை தீர்த்தம்
ப்ரத்யக்ஷம் : சேனைத்தலைவர், ருத்ரன்
மங்களா சாசனம்: திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

திருமங்கையாழ்வார் அன்னதான கைங்கர்யம் செய்த மங்கை மடமும் அவரது அவதார ஸ்தலமான திருக்குறையலூரும் அருகே உள்ளது. சீர்காழியிலிருந்து பூம்புகார் செல்லும் பாதையில் திருவெண்காட்டிற்கு அருகில் உள்ளது. திருநாங்கூரிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருநகரிலிருந்தும் செல்லலாம். வைதீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்திலிருந்து 8 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. துவாரகைக்குச் சமமானது. சத்தியபாமாவுக்கு இந்திரலோகத்து பாரிஜாதமலரை கண்ணன் அளித்த தலம். நாங்கூர் 11 திருப்பதிகளில் இதுவும் ஒன்று. தை அமாவாசைக்கு மறுநாள் திருநாங்கூரில் நடக்கும் கருடசேவையில் இந்த ஊர் பெருமாளும் கருடவாஹனத்தில் எழுந்தருளுவார்.

28. திருக்காழிச்சீராம விண்ணகரம்

[சீர்காழி தாடாளன் கோவில்]

பெருமாள் : **தாடாளன்** - திருவிக்கிரமமூர்த்தி, உலகளந்த திருவுருவம்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
உற்சவர் : திருவிக்ரம் நாராயணர்
தாயார் : **மட்டவிழுங்குழலி** - லோகநாயகி
விமானம் : புஷ்கலாவர்த்தக விமானம்
தீர்த்தம் : சக்ர தீர்த்தம், சங்க புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம் : அஷ்டகோண மஹரிஷி
மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

Koviloor Digital Library

சீர்காழி இரயில் நிலையத்திலிருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. சிதம்பரத்திலிருந்து சீர்காழி செல்லும் பேருந்துகளில் சென்று கோயில் வாசலில் இறங்கிக் கொள்ளலாம். சிதம்பரத்திலிருந்து 17 கி.மீ.

பெருமாள் இடது காலைத்தூக்கி விண்ணை அளக்கிறார். இவ்வூரில் திருமங்கையாழ்வார், திருஞானசம்பந்தரை வாதில் வென்று அவருடைய வெற்றிவேலைப் பரிசாக பெற்றதுடன் "கடியுண்ட நெடுவாளை" என்ற ஓர் பாடலாலும் பெருமை பெற்றார். இவருக்கு நாலுகவிப் பெருமாள் என்ற விருதும் அளிக்கப்பட்டது. இந்த வாதத்தில் வைணவரும் சைவரும் சத்ருவல்ல, சகோதரரே என்று நிலைப்படுத்தப்பட்டது. செல்வ தெய்வ நாயகன் சந்நிதி இங்கே உள்ளது சிறப்பு. ரோமச முனிவர், பிரம்மாவின் ஆயுளும், தன் ஒரு ரோமமும் சமம் என்று சொல்லி பிரம்மாவுக்கு அவர் ஆயுள் பற்றி ஏற்பட்ட கர்வத்தை அடக்கிய ஸ்தலம். தாடாளன், மணவாள மாமுனிவராலும் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளார். நாங்கூர் 11 திவ்ய தேசங்கள் தவிர மற்ற அருகில் உள்ள முக்கிய க்ஷேத்திரங்கள் : வைத்தீஸ்வரன் கோவில், திருவெண்காடு, (புதன்கிரஹம்) கீழப்பெரும்பள்ளம் (கேது ஸ்தலம்) பட்டிணத்தடிகள் பிறந்த பல்லவனம், பூம்புகார் பத்தினிக் கோட்டம் முதலியன.

29. அரிமேய விண்ணகரம்

[திருநாங்கூர் குடமாடுகூத்தர் கோயில்]

பெருமாள்	:	குடமாடு கூத்தர் வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
உற்சவர்	:	சதுர்புஜ கோபாலன்
தாயார்	:	அம்ருதகடவல்லி
விமானம்	:	உச்சச்ருங்க விமானம்
தீர்த்தம்	:	கோடி அமுத தீர்த்தம்
ப்ரத்யக்ஷம்	:	உதங்க மஹரிஷி
மங்களாசாசனம்	:	திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள திருநாங்கூரில் உள்ள ஸ்தலம். கூடமாடு கூத்தர் கோயில் என்று அழைக்கப்படும் ஸ்தலம். திருநாங்கூர் திருப்பதிகள் 11ல் இதுவும் ஒன்று. திருநாங்கூர் கீழ வீதியில் அமைந்துள்ளது. தை மாதம் அமாவாசைக்கு மறுநாள் கருட சேவை மிக விசேடம். கோவர்த்தனகிரிக்கு சமமான ஸ்தலம்.

Koviloor Digital Library

30. திருவண்புருடோத்தமம் [திருநாங்கூர்]

பெருமாள் : **புருஷோத்தமர்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார் : **புருஷோத்தம நாயகி**
விமானம் : ஸஞ்ஜீவி விக்ரஹ விமானம்
தீர்த்தம் : திருப்பாற்கடல் தீர்த்தம்
ப்ரத்யக்ஷம் : உபமன்யு
மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

மணவாளமாமுனிகள், பிரதிவாதி பயங்கரம் அண்ணன் மங்களாசாசனம் செய்த ஸ்தலம். திருநாங்கூரிலேயே உள்ளது. சீர்காழியிலிருந்து 8 கி.மீ. அயோத்திக்கு சமானம். சீர்காழியில் ஞானசம்பந்தருக்கு அம்பிகைபால் அளித்ததுபோல் வியாக்ர பாதமுனிவரின் குழந்தை அபிமன்யுவுக்கு பாற்கடலை ஈந்த பிரான் இத்தலத்துப் பெருமாள். உத்ஸவபெருமாளின் திருவுருவம் மிக அழகு.

குறிப்பு : அரிமேய விண்ணகரம், திருவண்புருடோத்தமம், திருமணிமாடக் கோயில், திருநெற்றியம்பலம் இந்நான்கும் திருநாங்கூரில் ஒரே தெருவில் பக்கத்தில் பக்கத்தில் அமைந்துள்ளன.

31. செம்பொன் செய்கோயில்

பெருமாள் : **பேரருளாளன் - செம்பொன்னரங்கர்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
உற்சவர் : செம்பொன்அரங்கர், ஹேமரங்கர்
தாயார் : **அல்லிமாமலர் நாச்சியார்**
விமானம் : கநக விமானம்
தீர்த்தம் : நித்ய புஷ்கரிணி, கநக தீர்த்தம்
ப்ரத்யக்ஷம் : ருத்ரன், த்ருடநேத்ர முனி
மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

திருநாங்கூரிலேயே உள்ள ஸ்தலம். கீழ வீதியில் உள்ளது. இராமபிரான் தானம் செய்த தங்கப்பசுவைக் கொண்டு ஒரு அந்தணனால் எழுப்பப்பட்ட கோயில். திருச்சியில் உள்ள உறையூர் கோயிலுக்கு நிகராகக் கருதப்படுகிறது. 32,000 முறை நாராயணமந்திரத்தைச் செபிக்க செல்வத்தை விரைந்து அளிக்கும் தலம் என்று கூறப்படுகிறது.

Koviloor Digital Library

32. திருமணிமாடக்கோயில் [திருநாங்கூர்]

பெருமாள்	:	**நந்தாவிளக்குப்பெருமாள்** - நாராயணன் வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
உத்ஸவர்	:	நாராயணர், அனந்தற்கரியன்
தாயார்	:	**புண்டரீகவல்லி**
விமானம்	:	ப்ரணவ விமானம்
தீர்த்தம்	:	இந்திர, ருத்ர, புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம்	:	ருத்ரர்கள், இந்திரன், மதங்கர்
மங்களாசாசனம்	:	திருமங்கையாழ்வார் (12 பாசுரங்கள்)

தை அமாவாசைக்கு அடுத்த நாள் 11 பெருமாள்களின் திருநாங்கூர் கருடசேவை இத்தலத்தில்தான் நடைபெறுகிறது. சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் நகரப்பேருந்து வசதியுள்ள ஸ்தலம். திருநாராயணப்பெருமாள் கோவில் என்று அழைக்கப்படுகிறது. பத்ரிக்கு சமானமான பதி. இங்குதான் 11 ஊர் பெருமாளும் கூடி திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்யும் விழா நடக்கிறது. தை அமாவாசைக்கு மறுநாள் நாராயணப்பெருமாள் கோவில் வாசலில் 11 திவ்ய தேசப் பெருமாள்களும் கருடவாஹனத்தில் எழுந்தருளி ஒவ்வொரு பெருமாளையும் ஆழ்வார் பிரதக்ஷணமாக வந்து மாலை மரியாதைகள் நடந்து பிறகு வீதி புறப்பாடு மிகவும் கண் கொள்ளாக் காட்சி. இக்கோவிலில் திருக்கோட்டியூர் நம்பி எழுந்தருளியிருக்கிறார். அருகில் திருவெண்காடு சிவன் கோவில் பிரசித்தம். ஸ்ரீராமர் கரன் என்ற ராட்சதனை வதம் செய்த இடம்.

33. வைகுந்த விண்ணகரம் [திருநாங்கூர்]

பெருமாள்	:	**வைகுந்தநாதன்** - தாமரைக்கண்ணன் வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம். உத்ஸவர்களும் அதே திருக்கோலத்தில் உள்ளனர்.
தாயார்	:	**வைகுந்தவல்லி** - தனிக்கோயில் இல்லை.
விமானம்	:	அனந்தஸத்யவர்த்தக விமானம்
தீர்த்தம்	:	லட்சுமி, உதங்க புஷ்கரிணி, விரஜா தீர்த்தம்
ப்ரத்யக்ஷம்	:	உதங்க மஹரிஷி உபரிச்ரவஸு
மங்களாசாசனம்	:	திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள திருநாங்கூரிலேயே உள்ள ஸ்தலம். திருநாங்கூர் வடக்கு வீதியில் உள்ளது. பரமபதத்துக்கு சமமான ஸ்தலம். ஏகாதச ருத்ரராக தாண்டவமாடிய சிவபெருமான் ஒரே உருவமாய் மாறி 11 கருட சேவை கண்டுகளித்த திருத்தலம். திருநாங்கூர் 11 திருப்பதிகளில் ஒன்று.

பகவான் வைகுந்தத்தில் உள்ளதுபோன்று இங்கு இருத்தலால் வைகுந்த விண்ணகரம் என்று இத்தலம் பெயர் பெற்றது.

Koviloor Digital Library

34. திருவாலி(யும்)

பெருமாள் : லக்ஷ்மி நரஸிம்ஹன் - வயலாளி மணவாளன்
வீற்றிருந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.
உத்ஸவர் : ஆவிநகராளன்
தாயார் : அம்ருதகடவல்லி
விமானம் : அஷ்டாக்ஷர விமானம்
தீர்த்தம் : இலாக்ஷணி புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம் : கலியன், அலாதி நிகஞ்சம பிரஜாபதி

சீர்காழி - திருவெண்காடு பேருந்து பாதையில் சீர்காழியிலிருந்து தென்கிழக்கே 8 கி.மீ. தூரத்திலும் உள்ளது.

திருநகரி(யும்)

பெருமாள் : வேதராஜன்
வீற்றிருந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.
உத்ஸவர் : கல்யாண ரங்கநாதன்
தாயார் : அமிர்தவல்லி
விமானம் : அஷ்டாக்ஷர விமானம்
தீர்த்தம் : இலாக்ஷணி புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம் : கலியன், அலாதி நிகஞ்சம பிரஜாபதி
மங்களாசாசனம் : குலசேகராழ்வார், கலியன் (42 பாசுரங்கள்)

திருமங்கையாழ்வார் அவதாரத்தலமான திருக்குறையலூர் இதன் அருகில் உள்ளது. சீர்காழி-பூம்புகார் சாலையில் பேருந்து வசதி உள்ள ஸ்தலம். திருவாலியிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ளது.

திருவலஞ்சுழியும் கொட்டையூரும் இணைந்து பாடப்பட்டதுபோல் திருவாலி லக்ஷ்மி நரசிம்ஹரும் திருநகரி வேதராஜனும் சேர்ந்தே போற்றப்பட்டுள்ளனர். நாங்கூர் 11 திருப்பதிகளில் இதுவும் அடங்கும். குடந்தையருகே சத்திமுத்தத்தில் (சிவத்தலம்) சிவனும் அம்பிகையும் அணைந்திருப்பதுபோல் பிராட்டியும் பெருமாளும் ஆலிங்கன கோலத்தில் காட்சி தரும் தலம். நாங்கூர் பகுதி பஞ்ச நரசிம்மத் தலத்துள் ஒன்று. திருமங்கை தன்னைப்போலவே பிம்பம் செய்து அதனுள் தன் சக்தியைப் புகுத்திய திருமேனி உள்ள ஸ்தலம். பெருமாளும் பிராட்டியும் தம்பதியராக அவரைத் தடுத்தாட்கொண்டு அஷ்டாக்ஷர உபதேசம் செய்வித்த பதி.

திருமங்கையாழ்வாருக்குத் தனி சந்நிதி உள்ளது. இங்கு ஆழ்வார் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளதால் ஆழ்வார் கோயில் என்று உள்ளூரில் அறியப்படுகிறது. அந்த சந்நிதியில் ஆழ்வார் வேடன் வேஷத்தில் காட்சி தருகிறார். இங்கிருந்து சுமார் 1 கி.மீ. தூரமுள்ள வேதராஜபுரம் என்ற இடத்தில்தான் திருமங்கையாழ்வார் பெருமாளை வழிப்பறி செய்ய, பெருமாள்

Koviloor Digital Library

இவருக்குத் திருமந்திர உபதேசம் செய்தது. இச்செய்தியை உணர்த்தும் **வேடுபறி** உத்சவம் இங்கே நடக்கிறது.

தடை பெறும் கல்யாணங்கள் இங்கே பிரார்த்தித்தால் தடை நீங்கி நடைபெறுவதாக நம்பிக்கை. ஸ்ரீமணவாள மாமுனிகள் பலமுறை எழுந்தருளி மங்களாசாசனம் செய்த திருத்தலம்.

பஞ்ச நரசிம்மஸ்தலங்கள் : திருக்குறையலூர் : உக்கிர நரசிம்ஹர், மங்கைமடம் : வீரநரசிம்ஹர், திருநகரி : யோக நரசிம்ஹர், திருநகரி : ஹிரண்யநரசிம்ஹர், திருவாலி : லட்சுமி நரசிம்மர், .

35. திருத்தேவனார்த்தொகை (கீழச்சாலை மாதவப் பெருமாள்) [திருநாங்கூர்]

பெருமாள் : **தெய்வநாயகப்பெருமாள்** - மாதவன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : மாதவப்பெருமாள்

தாயார் : **கடல்மகள் நாச்சியார்** - உற்சவர் : மாதவ நாயகி

விமானம் : சோபன விமானம்

தீர்த்தம் : சோபன, தேவஸபா புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : வசிஷ்டர்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

இத்தலத்தைக் கீழச்சாலை மாதவப்பெருமாள் கோயில் என்று அழைப்பர். திருநாங்கூர் திவ்ய தேசங்களில் ஒன்று. சீர்காழி - திருவெண்காடு பேருந்து வழியில் திருவாலியிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளது.

அத்தனை தேவர்களும் கூடிப் பணிந்த தலம். மன்னியாற்றின் தென்கரையில் உள்ளது. திருவிடந்தைக்கு சமமான ஸ்தலம். தேவர்கள் கூடிய இடமாததால் திருத்தேவனார் தொகை என்று பெயர் பெற்றதாக வரலாறு மாதவப்பெருமாள் கோயில் என்றும், இந்த ஊர் அழைக்கப்படுகிறது.

36. திருத்தெற்றியம்பலம் [திருநாங்கூர்] (பள்ளிகொண்ட பெருமாள் கோவில்)

பெருமாள் : **செங்கண்மால்** - ரங்கநாதர்
புஜங்க சயனம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **செங்கமலவல்லி**

விமானம் : வேத விமானம்

தீர்த்தம் : சூர்ய புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : செங்கமல நாச்சியார், அனந்தன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

Koviloor Digital Library

சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தூரத்திலிலுள்ள திருநாங்கூரிலியே அமைந்துள்ள ஸ்தலம். பள்ளிகொண்ட பெருமாள் கோயில் என்று தெரியப்பெறும் ஸ்தலம்.

பள்ளிகொண்ட பெருமாள் என்ற பெயரே பிரஸித்தம். கீழ வீதியிலிருந்து மேற்கே செல்லும் சாலையில் உள்ளது. ஸ்ரீரங்கத்திற்கு இணை.

37. திருமணிக்கூடம் (திருநாங்கூர்)

பெருமாள் : **மணிக்கூட நாயகன்** - வரதராஜன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **திருமகள் நாச்சியார்**, ஸ்ரீதேவி, பூதேவி

விமானம் : கநக விமானம் (ப்ரஸந்த விமானம்)

தீர்த்தம் : சந்திர புஷ்கரிணி, ப்ரமஹ தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : பெரிய திருவடி, சந்திரன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தூரத்திலிலுள்ள திருநாங்கூரிலிருந்து கிழக்கே 1 கி.மீ. தூரத்தில் உள்ளது.

11 பெருமாள் கருட சேவையில் இப்பெருமாளும் கலந்து கொண்டு திருக்காட்சியளிக்கிறார். காஞ்சி வரதராஜர்தான் இங்குள்ள பெருமாள் என்றும் வரம் கொடுப்பதில் காஞ்சி வரதருக்கு ஈடானவர் என்றும் சொல்லப்படுகிறார். இந்திரன், கருடன், சந்திரன் ஆகியோர் வழிபட்டு உய்ந்தனர் என்பது ஒரு செய்தி.

38. திருவெள்ளக்குளம்
[திருநாங்கூர் - அண்ணன் கோவில்]

பெருமாள் : **கண்ணன் நாராயணன்** - சீனிவாசன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **பூவார் திருமகள்** - பத்மாவதி

விமானம் : தத்வரசித விமானம்

தீர்த்தம் : வெள்ளக்குள் தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : ருத்ரர், ஸ்வேதராஜன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

சீர்காழி தரங்கம்பாடி சாலையில் சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இதைத் தென் திருப்பதி என்பர். குறிக்கோளிலாது கெட்ட நீலன் என்ற தளபதியை திருமங்கை ஆழ்வாராக மாற்றிய குமுதவல்லித் தாயார் திருஅவதாரம் செய்த தலம். குழந்தையும், நீண்ட ஆயுளும் அளிக்கும் பிரார்த்தனை தலம். இங்கு வழிபாடுகள் எல்லாம் திருமலை திருப்பதி வேங்கடவன் கோவில் போன்றே நடைபெறுகிறது. மணவாள மாமுனிகளுக்குப் பெருமாள் காட்சி கொடுத்த ஸ்தலம்.

Koviloor Digital Library

39. திருப்பார்த்தன்பள்ளி

பெருமாள் : **தாமரையாள் கேள்வன்**
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

உற்சவர் : பார்த்தசாரதி

தாயார் : **தாமரை நாயகி**

விமானம் : நாராயண விமானம்

தீர்த்தம் : ஸங்கரஸரஸ் (கங்கா தீர்த்தம்)

ப்ரத்யக்ஷம் : பார்த்தன், 11 ருத்திரர்கள், வருணன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

மணவாள மாமுனிகளுக்குப் பெருமாள் காட்சி கொடுத்த ஸ்தலம். சீர்காழியிலிருந்து 12 கி.மீ. தூரத்திலும் திருவெண்காட்டிலிருந்து 2 கி.மீ. தூரத்திலும் உள்ளது. மூலவர், உற்சவர் ஆகிய இருவருக்கும் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்ற மூன்று தேவிகள் உண்டு. இது இங்கு மட்டுமே. கோலவல்லி ராமன் என்று மற்றொரு அழகிய உற்சவரும் உள்ளார். இவர் சங்கு சக்ரதாரியாய் கதையுடன் நிற்கும் இவருக்கு வில்லும் அம்பும் சார்த்தப்பட்டுள்ளது. இங்கே பார்த்தனுக்கு (அர்ஜுனனுக்கு) தனிச்சந்நிதி. தை மாதம் புஷ்யநக்ஷத்திர தீர்த்தவாரி சிறப்பானது. சரம சுலோகார்த்தம் விளக்கிய இடம். வருணனுக்காக பெருமாள் பார்த்தசாரதியாக காட்சி கொடுத்த தலம். காவிரிக்கரையில் அகத்தியருக்காக அமைந்துள்ள கோவில்களில் இதுவே கடைசி. குருக்ஷேத்திரத்திற்கு இணையான தலம்.

40. திருச்சித்திரக்கூடம் [சிதம்பரம்]

பெருமாள் : **கோவிந்தராஜர்**
போக சயனம். மேற்கே திருமுக மண்டலம்.

உற்சவர் : தேவாதி தேவன், பார்த்தசாரதி

தாயார் : **புண்டரீகவல்லி** (தனிச்சந்நிதி)

விமானம் : ஸாத்விக விமானம்

தீர்த்தம் : புண்டரீகஸரஸூ புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : சிவன் தில்லை மூவராயிரவர், வ்யாக்ரபாதர், கண்வர்

மங்களாசாசனம் : குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் (32 பாசுரங்கள்)

சென்னை - மாயவரம் பாதையில் சிதம்பரம் இரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. நடராஜர் கோயிலில் ஒரு தனிக்கோயிலாக உள்ளது. மாப்பிள்ளை சிவனின் நடனத்தை மச்சினன் விஷ்ணு ரசித்த இடம். காளிக்கும் சிவனுக்கும் நடந்த உக்ரதாண்டவத்திற்கு தீர்ப்பளிக்க வந்த பெருமாள். சிவனும் பெருமாளும் ஒரே வளாகத்துள் அருளும் தலம். சித்திரகூடத்துள்ளான் என்று ஒரு உற்சவர் உபய நாச்சியாருடன் ஸேவை சாதிக்கிறார். இது தென்புலியூர், தில்லைவனம் கோயில், பெரும்பற்றபுலியூர், புலீச்சரம் திருச்சிற்றம்பலம் என பல பெயர்களாக வழங்கப்படுகிறது. சிவாலயத்தில் பெருமாளும், தாயாரும் தனிச்சந்நிதியில் இருக்கிறார்கள்.

Koviloor Digital Library

41. திருவஹீந்திரபுரம்

பெருமாள் : தெய்வநாயகன் - தேவநாதன்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : வைகுண்டவல்லி - ஹேமாம்புஜவல்லி

விமானம் : சுத்தஸத்வ விமானம்

தீர்த்தம் : சேக்ஷ தீர்த்தம், கருட நதி, சேஷ தீர்த்தம் (கிணறு)
தலமரம் : வில்வம்

ப்ரத்யக்ஷம் : சந்திரன், கருடன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

இராமேஸ்வரம் - திருச்சி - சென்னை மெயின் லைனில் திருபாதிரிப்புலியூர் ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. கடலூர் பஸ் நிலையத்திலிருந்து நகரப் பேருந்து வசதி உள்ளது. இப் பதியில் வடகலை ஆச்சாரியார் ஸ்ரீசுவாமி தேசிகன் 40 ஆண்டுகள் வாழ்ந்தது ஒரு சிறப்பாகும். ஆதிசேடன் அமைத்தது. தேசிகரே கட்டிய கிணறு இன்றும் போற்றப்படுகிறது. அருகில் ஔஷதகிரி மலையில் ஹயக்ரீவர் சன்னதி உள்ளது. 74 படிகள் ஏறி மேலே செல்ல வேண்டும். லக்ஷ்மி ஹயக்ரீவர் தெற்கு நோக்கி காட்சியளிக்கிறார். மூலவர் எழுந்தருளியுள்ள விமானத்தில் கிழக்கில் பெருமாளும், தெற்கில் ஆலமர்கடவுளும், மேற்கில் நரசிம்ஹமூர்த்தியும், வடக்கில் பிரமனும் எழுந்தருளியுள்ளனர். மூலவர் இறைவன் நின்ற திருக்கோலத்தில் சங்கு சக்கரத்துடனும், வலக்கரத்தில் தாமரை மலரோடும், நான்கு முகவடிவமான நெற்றிக்கண், ஹரியும், அரனும் நான்முகனாய் விளங்குவது மூவரும் ஒருவரே என்னும் விளக்கமும் கொண்டதாகும். இங்குள்ள சேஷ தீர்த்தம் பிணி தீர்க்கும் மருந்தாகவும் பிரார்த்தனைக்கு உரிய இடமாகவும் கருதப்படுகிறது. பாதிரிப்பூலியூர் அரணே என்று திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற திருப்பாதிரிப்புலியூர் அருகே உள்ள சிவ ஸ்தலமாகும்.

42. திருக்கோவலூர்

பெருமாள் : த்ரிவிக்ரமன்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

உற்சவர் : கோபாலன் ஸ்ரீதேவி, பூதேவியுடன் காட்சி தருகிறார்.

தாயார் : பூங்கோவல் நாச்சியார் - தனி சந்நிதி

விமானம் : ஸ்ரீகர விமானம்

தீர்த்தம் : கிருஷ்ண தீர்த்தம், பெண்ணையாறு, சக்கரத் தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : மிருகண்டு முனி, மஹாபலி சக்ரவர்த்தி

மங்களாசாசனம் : பொய்கையார், பூதத்தார், திருமங்கையாழ்வார்
(21 பாசுரங்கள்)

மூன்று திருவந்தாதிகள் உருவான ஸ்தலம்.

Koviloor Digital Library

விழுப்புரம் - காட்பாடி இரயில் மார்க்கத்தில் திருக்கோவிலூர் ரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருவண்ணாமலை விழுப்புரம் சாலை மார்க்கத்தில் 36 கி.மீ. தூரத்தில் உள்ள ஸ்தலம். இத்தலத்தில்தான் முதல் மூன்று ஆழ்வார்களும் சந்தித்துக் கொண்டதாக வரலாறு கூறுகிறது. (பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்). இங்கு வாமனர், லட்சுமி நாராயணர், ஆண்டாள், உடையவர் சேனை முதலியார், மணவாளமாமுனி, சக்கரத்தாழ்வார், இராமர், வரதராஜர், வேணுகோபாலன், லட்சுமி நரசிம்மர் முதலிய சந்நிதிகள் உள்ளன. மூலவர் திருக்கரத்தில் இடப்பக்கம் சக்கரம், வலப்பக்கம் சங்கு என மாறியுள்ளது. இது மேலூர் பகுதியில் உள்ள ஸ்தலம். கீழூர் பகுதியில் ஔவையார் வழிபட்ட வீரட்டானத்தலம் உள்ளது. மாவலியின் கர்வம் அடக்கப்பட்ட ஸ்தலம். இது ஒரு பஞ்சகிருஷ்ணாரண்ய க்ஷேத்திரம்.

43. திருக்கச்சி [காஞ்சீபுரம்] [அத்திகிரி]

பெருமாள்	:	**வரதராஜப்பெருமாள்** - பேரருளாளன், அத்திவரதன் நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**பெருந்தேவித் தாயார்**
விமானம்	:	புண்யகோடி விமானம்
தீர்த்தம்	:	சேக்ஷ, வராஹ, பத்ம, அக்னி தீர்த்தங்கள், வேகவதி
ப்ரத்யக்ஷம்	:	ப்ரம்ஹா, கஜேந்திரன், ஆதிசேக்ஷன், ப்ருகு, நாரதர்
மங்களாசாசனம்	:	பூதத்தார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார் (7 பாசுரங்கள்)

சென்னை - பெங்களூர் சாலை மார்க்கத்தில் சென்னையிலிருந்து 70 கி.மீ. தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து இரயில் வசதி உள்ளது.

திருமாலுக்கு ஆலயங்கள் பல்லாயிரக்கணக்கிலிருந்தாலும் வைணவத்தில் பெருமாள் கோயில் என்றால் காஞ்சி அத்திகிரியையே குறிக்கும். ஆலய தீர்த்தத்தில் இருக்கும் அத்திமரத்தாலான வரதரை 40 வருடங்களுக்கு ஒரு முறை வெளியே எடுத்து 10 நாள் சிறப்புச் சேவை சாதிக்கப்படுகிறது. பெருமாள் பல்லிகளுக்கும் பரமபதம் அளித்ததை நினைவுபடுத்துவதாக இரண்டு பல்லி உரு உள்ளன. இக்கோயில் சின்ன காஞ்சிபுரம் பகுதியில் அமைந்துள்ளது. முக்தி தரும் ஏழு தலங்களில் ஒன்று. ஏனையவை மதுரா, மாயா (ஹரித்துவார்) அயோத்தி, அவந்தி, காசி மற்றும் துவாரகை. காஞ்சியில் மட்டும் 14 திவ்ய தேசங்கள் உள்ளன. இக்கோயிலில் ஆண்டாள், மணவாள நாச்சியார், கண்ணன், சக்கரத்தாழ்வார், கரிய மாணிக்கப்பெருமாள், இராமர், பன்னிரு ஆழ்வார்கள், தேசிகர் வராகப் பெருமாள், உடையவர் முதலிய சந்நிதிகள் உள்ளன. ஐராவதம் மலையுருவில் எம்பெருமானைத் தாக்கியதால் அத்திகிரி எனப்பட்டது. அனந்தசரஸ் தீர்த்த கரையின் கிழக்கே ஒரு பக்கம் சக்கரத்தாழ்வாரும், மற்றொரு பக்கம் நரசிம்ம மூர்த்தியும் சந்நிதி கொண்டுள்ளனர். அத்திகிரிமலைக்கு நேர் கீழே உள்ள குகையில் நரசிம்மர் எழுந்தருளியுள்ளார். மேலே பெருமாள் சன்னதிக்கு செல்ல தேவசிற்பியால் தீர்மானிக்கப்பட்ட 24 படிகள் உள்ளன. காஞ்சியில் உள்ள திருவேகம்படு, கச்சபேசம் முதலிய சிவாலயங்களும் காஞ்சி காமாட்சி அம்மன்

Koviloor Digital Library

கோவிலும் பிரசித்தி பெற்றவை. சிறப்பு பெற்ற ஞானபிரகாச மடமும், காஞ்சி காமகோடி பீடம் சங்கர மடமும் உள்ளன.

44. அட்டபுயகரம் [காஞ்சீபுரம்]

பெருமாள் : **ஆதிகேசவப் பெருமாள்** - சக்ரதரன்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **அலர்மேல் மங்கை** - பத்மாஸனி கிழக்கு நோக்கிய சந்நிதி

விமானம் : சுக்ராக்ருதி விமானம்

தீர்த்தம் : கஜேந்திர புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : கஜேந்திரன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார், பேயாழ்வார் (12 பாசுரங்கள்)

காஞ்சிபுரத்தில் திவ்யதேசம் 43 திருக்கச்சிலிருந்து மேற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. பெருமாள் திருக்கைகளில் சக்கரம், கத்தி, மலர், அம்பு, சங்கு, வில், கேடயம், கதை ஆகிய எட்டு வகை ஆயுதங்களைக் கொண்டு ஸேவை சாதிக்கிறார். மற்றும் பூவராகர் ஆண்டாள், பேயாழ்வார், கருடன், அநுமன் சந்நிதிகள் உள்ளன. திருமால் எட்டுக்கைகளில் ஆயுதம் ஏந்தி பிரம்மாவுக்கு சரஸ்வதியால் ஏற்பட்ட பகையை அழித்ததால் அஷ்டபுயக்கரன் என்னும் பெயர் உண்டாயிற்று. முதலையால் பிடிப்பட்ட கஜேந்திரன் என்ற யானைக்கும் முதலைக்கும் முக்தி அளித்த ஸ்தலம். தேசிகன், மணவாள மாமுனிகள் மங்களா சாசனம் செய்திருப்பது மற்றுமொரு சிறப்பு. கல்யாணம்,வியாபாரம் கைகூட இங்கே வேண்டினால் நிச்சயம் கைகூடும் என்ற அசாத்திய நம்பிக்கை.

45. திருத்தண்கா [தூப்புல் - காஞ்சீபுரம்]

பெருமாள் : **தீபப்ரகாசர்** - விளக்கொளி பெருமாள்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **மரகதவல்லி**

விமானம் : ஸ்ரீகர விமானம்

தீர்த்தம் : சரசுவதி தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : சரசுவதி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (2 பாசுரங்கள்)

ஸ்வாமி தேசிகன் அவதார ஸ்தலம். திவ்யதேசம் 44 அட்டபுயகரத்தில் இருந்து மேற்கே அரை கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு தேசிகனுக்கு சந்நிதி உள்ளது. பிரகாரத்தில் வேதாந்த தேசிகன் வைபவம் முழுவதும் சித்திரமாக வரையப்பட்டுள்ளது. பிரம்மா செய்யும் யாகத்தைக் கெடுக்க வந்த அசுரர்கள் உலகம் முழுவதையும் இருட்டாக்கிவிட எம்பெருமான் ஒரு பேரொளியாய்த் தோன்றி இருட்டை போக்கி ஒளி வீச செய்த தலம். ஆகவே இந்த சிறப்புமிக்க

Koviloor Digital Library

செயலுக்காகப் பெருமாளுக்கு தீபப்பிரகாசர் என்றும், விளக்கொளி என்றும், திருநாமம் ஏற்பட்டதாக ஸ்தல புராணம் கூறுகிறது. புரட்டாசி ச்ரவண உத்ஸவம் மிகவும் விசேஷமாகக் கருதப்படுகிறது.

46. திருவேளுக்கை [காஞ்சீபுரம்]

பெருமாள் : முகுந்தநாயகன் - அழகிய சிங்கர்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **வேளுக்கைவல்லி**

விமானம் : கனக விமானம்

தீர்த்தம் : கனகஸரஸ், ஹேமஸரஸ்

ப்ரத்யக்ஷம் : ப்ருகு முனி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார், பேயாழ்வார் (4 பாசுரங்கள்)

காஞ்சிபுரத்தில் திவ்யதேசம் 45 திருக்கண்காவிலிருந்து தென்மேற்கே 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. மேற்கு திசையில் அசுரர்கள் வராதபடி தடுத்தபின் தானே விரும்பி (வேள்) பெருமாள் யோகநரசிம்மராக தங்கிவிட்ட தலம்.

விண்ணகரம் வெஃகா விரி திரைநீர் வேங்கடம்
மண்ணகரம் மாமாட வேளுக்கை - மண்ண சுத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி
தன் குடங்கை நீரேற்றான் தாழ்வு.

- பேயாழ்வார்

47. திருநீரகம் [காஞ்சீபுரம்]

பெருமாள் : **ஜகதீசப் பெருமாள்**
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **நிலமங்கை வல்லி**

விமானம் : ஜகதீச்வர விமானம்

தீர்த்தம் : அக்ரூர தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : அக்ரூரர்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (1 பாசுரம்)

பெரிய காஞ்சீபுரத்தில் திவ்யதேசம் 50 ஊரகம் என்று அழைக்கப்பெறும் உலகளந்த பெருமாள் கோயிலில் உட்சன்னதியாக உள்ளது. உலகளந்த பெருமாள் கோவிலில் 2ம் வடக்கு சுற்றில் 16 கால் மண்டபத்தில் உத்ஸவர் ஜகதீஸ்வரர் மட்டுமே உள்ளார். பிரளய காலத்தில் தான் நீராக இருப்பதைக் காட்டுவித்த ஸ்தலம். அக்ரூவருக்கு பெருமாள் காட்சி கொடுத்த திவ்ய தேசம்.

Koviloor Digital Library

48. திருப்பாடகம் (பாண்டவதூதர்)

பெருமாள் : பாண்டவதூதர்
வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : ருக்மணி, சத்யபாமா

விமானம் : பத்ர விமானம்

தீர்த்தம் : மத்ஸ்ய தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : ஹரிதமுனி, ஜனமே ஜயன்

மங்களாசாசனம் : பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், பேயாழ்வார் (6 பாசுரங்கள்)

அருளாளப்பெருமாள் எம்பெருமானார் வாழ்ந்த இடம். பெரிய காஞ்சிபுரத்தில் குமரகோட்டம் எதிர்புறப் பிரிவுச்சாலையில் உள்ளது. ஜனமே ஜயமஹாராஜன் செய்த அசுவமேத யாகத்திலிருந்து பகவான் பாண்டவதூத வேஷத்துடன் ஆவிர்பவித்ததாக புராண வரலாறு. கோகுலாஷ்டமி, தீபாவளி, முக்கோட்டி ஏகாதசி ஆகிய நாட்களில் விசேஷ உற்சவங்கள் (மற்றவை தவிர) நடக்கின்றன. இங்கு ஸ்ரீவைஷ்ண சம்பிரதாயத்திற்கு முக்கியமான சில கிரந்தங்களை இயற்றியுள்ள அருளாளப்பெருமாள் எம்பெருமானார் எழுந்தருளியிருக்கிறார். மணவாளமாமுனிகள் மங்களாசாஸனம் செய்திருப்பது மற்றொரு சிறப்பு.

49. நிலாத்திங்கள் துண்டம் [காஞ்சீபுரம்]

பெருமாள் : நிலாத்திங்கள் துண்டத்தான்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : நேரொருவரில்லா வல்லி

விமானம் : புருஷஸூக்த விமானம்

தீர்த்தம் : சந்திர புஷ்கரிணி (இப்போது இல்லை)

ப்ரத்யக்ஷம் : சிவன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (1 பாசுரம்)

பெரிய காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோவிலில் உட்சன்னதியாக உள்ளது. சந்நிதி மிகச் சிறியது. பார்வதியின் தவத்தைச் சோதிக்க சிவன் மாமரத்தை எரிக்க, சகோதரியின் சங்கடத்தை விஷ்ணு குளிர்ந்த சந்திர கிரணங்களால் போக்கிய திருத்தலம். சிவாச்சாரியாரே பூஜை செய்து தீர்த்தம் கொடுக்கும் ஒரே திவ்ய தேசம். பார்வதியின் தாபத்தை சந்திர கிரணங்களைக் கொண்டு துண்டித்த தலமாதலால் நிலாத்திங்கள் துண்டம் என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பெருமாள் அலங்காரப்பிரியர்.

Koviloor Digital Library

50. திருவூரகம் [காஞ்சீபுரம்]

பெருமாள் : ஊரகத்தான் - உலகளந்த பெருமாள் - திரிவிக்ரமன் நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : பேரகத்தான்

தாயார் : அமுதவல்லி நாச்சியார்

விமானம் : ஸார ஸ்ரீகர விமானம்

தீர்த்தம் : சேக்ஷ தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : ஆதிசேஷன்

மங்களாசாசனம் : திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் (6 பாசுரங்கள்)

பெரிய காஞ்சீபுரத்தில் பஸ் நிலையத்திற்கு அருகில் காமாட்சி கோயிலுக்கு எதிர்புறச் சாலையின் கடைசியில் உலகளந்த பெருமாள் கோவில் என்று அறியப்படும் ஸ்தலம். இங்கு ஊரகம் (பேரகம்) தவிர நீரகம் (47), காரகம் (52), கார்வானம் (53) ஆக மூன்று திவ்ய தேசபெருமாள்கள் எழுந்தருளி இருக்கின்றனர். பலிச்சக்ரவர்த்தி திருவிக்ரம கோலத்தைச் ஸேவிக்க வேண்டுமென பிரார்த்தித்ததால் அந்த அவதாரத்தை எடுத்துக் காண்பித்ததாக உலகளந்த பெருமாள் கோயில் வரலாறு கூறுகிறது. உலகளந்த பெருமாள், ஊரகம் இரண்டும் சேர்ந்து ஒரே திவ்ய தேசமாக கருதப்படுகிறது. உலகளந்த பெருமாள் சந்நிதிக்கு பக்கத்தில் ஒரு சிறிய சந்நிதியில் (பேரகம்) எம்பெருமான் ஆதிசேஷனாய் அழகுற திருக்கோலம் பூண்டு ஸேவை சாதிக்கிறார்.

51. திருவெஃகா [யதோத்தகாரீ பெருமாள்]

பெருமாள் : சொன்னவண்ணம் செய்த பெருமாள், வேகா சேது புஜங்க சயனம், மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : கோமளவல்லித் தாயார்

விமானம் : வேதஸார விமானம்

தீர்த்தம் : பொய்கை புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : பொய்கையார், பூதத்தார், கணிகண்ணன், பிரஹ்மா

மங்களாசாசனம் : திருமழிசையாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார், கலியன், நம்மாழ்வார் (15 பாசுரங்கள்)

பொய்கையாழ்வார் அவதார ஸ்தலம். காஞ்சீபுரத்தில் அஷ்டபுயகர திவ்ய தேசத்திற்கு அருகாமையில் உள்ளது. யதோத்தகாரி கோயில் என்று விசாரித்தால் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

விசேடங்கள் : கணிகண்ணன் என்ற சீடனுக்காக ஊரை விட்டே புறப்பட்ட திருமழிசையாழ்வார் பகவானை அழைக்க பாம்பணையைச் சுருட்டிக்கொண்டு



Koviloor Digital Library

புறப்பட்டு பிறகு அவர் கிடக்கச் சொல்லி வேண்டியபோது பாம்பணையை விரித்துப்படுத்ததால் இவருக்கு சொல்லியவண்ணம் செய்த பெருமாள் (வடமொழியில் யதோத்தகாரி) என்று பெயர். மற்ற திவ்யதேசங்களிலிருந்து மாறுபட்டு இங்கு பெருமாள் வலமிருந்து இடமாகச் சயனித்துள்ளார்.

ஸத்யவிரதக்ஷேத்திரத்தில் பிரம்மா எம்பெருமான் தரிசனத்திற்காக சரஸ்வதி இல்லாமல் வேள்வி செய்ய ஆரம்பிக்க சரஸ்வதி வேகவதியாக வந்து வேள்வியை அழிக்க ஓடி வந்ததாகவும் இவ்வெள்ளத்தைத் தடுக்க பெருமாள் அணை (ஸேது) யென குறுக்கே சயனித்த தலமாதலால் பெருமாளுக்கு வேகா ஸேது என்ற பெயர் ஏற்பட்டதோடு, வேகவதியணை வெஃகணை, வெஃகா என்று மருவி இத்தலம் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது. பெரும் புகழ் பெற்ற பிள்ளை லோகாச்சாரியார் இங்கு எழுந்தருளியிருக்கிறார். மணவாள மாமுனிகள், இத்தலத்தில் ஓராண்டு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ஸாதித்துள்ளார். இங்கு விசேஷமாக உபதேசமுத்திரையுடன் ஸ்வாமி எழுந்தருளியுள்ளார்.

52. திருக்காரகம் [காஞ்சீபுரம்]

பெருமாள் : கருணாகரப் பெருமாள்
நின்ற திருக்கோலம். தெற்கே திருமுக மண்டலம்.

தாயார் : பத்மாமணி நாச்சியார்

விமானம் : வாமன விமானம், ரம்ய விமானம்

தீர்த்தம் : அக்ராய தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : மேகநிகேதன ரிஷி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (1 பாசுரம்)

திவ்யதேசம் 50 ஊரகத்தில் உட்சன்னிதியாக உள்ளது. (உலகளந்த பெருமாள் கோவில்) இந்த திவ்ய தேசம் முன்பு இருந்த இடம் தீர்த்தம் இருக்கும் இடம் முதலிய செய்திகள் ஒன்றும் தெரியவில்லை.

53. திருக்கார்வானம் [காஞ்சீபுரம்]

பெருமாள் : கள்வர் பெருமாள் - கார்வானர்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : கமலவல்லி நாச்சியார்

விமானம் : புஷ்கல விமானம்

தீர்த்தம் : கௌரி தடாகம்

ப்ரத்யக்ஷம் : கௌரி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (1 பாசுரம்)

ஊரகம் திவ்யதேசக் கோயிலின் திருச்சுற்றில் உள்ளது (உலகளந்த பெருமாள் கோவில்). இத் திவ்யதேசம் ஏற்கனவே இருந்த இடம், தீர்த்தம் முதலிய விபரங்கள் ஏதும் தெரியவில்லை.

Koviloor Digital Library

54. திருக்கள்வனூர் [காஞ்சீபுரம்]

பெருமாள் : **ஆதிவராஹப் பெருமாள்**
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **அஞ்சிலைவல்லி நாச்சியார்**

விமானம் : வாமன விமானம்

தீர்த்தம் : நித்ய புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : அச்வத்த நாராயணன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (1 பாசுரம்)

...VILOOR AN...
A. No. 12032
...TRARY. KOVILOOR

பெரிய காஞ்சீபுரம் காமாக்ஷி அம்மன் சன்னதியில் அமைந்துள்ளது. பார்வதி ஒற்றைக்காலில் தவம் செய்து சிவனையடைய முயன்றபோது நாராயணன் உதவியதாக வரலாறு. இங்கு மூர்த்தி சிறிய உருவத்திலிருந்தாலும் கீர்த்தி பெரிது. இங்கு வைச சிவாச்சாரியார் ஒருவர்தான் பூசை செய்கிறார். ஸ்ரீமன் நாராயணன் காமகோஷ்டத்தில் பஞ்ச தீர்த்தத்தின் கரையில் லக்ஷ்மி பார்வதியுடன் ஸல்லாபம் செய்வதை ஒளிந்து கேட்டபடியால் பார்வதி பெருமாளுக்கு கள்வன் என்ற பெயர் சூட்டியதாக வரலாறு. பார்வதியின் பிரார்த்தனைக்கிணங்க பகவான் பூதத்தின்மேல் நின்றும், மறுபடி இருந்தும் மறுபடி கிடந்தபடியால் நின்றான், இருந்தான், கிடந்தான் சன்னதிகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பு : திருநெடுதாண்டகத்தில் காரகத்தாய் கார்வாளத்துள்ளாய் "கள்வர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை தவிர பண்டைய நிலவரங்கள் குறித்த தகவல் ஏதுமில்லை. காமாக்ஷி அம்மன் திருக்குளத்தின் வடகிழக்கு மூலையில் ஒரு ஸந்நிதியில் மூன்று அடுக்குகளில் நின்றான், இருந்தான் கோலங்கள் உள்ளன. இதற்கும் மங்களாசாசனம் செய்யப்பட்ட விபரத்திற்கும் சம்பந்தம் உள்ளதா என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது.

55. திருப்பவளவண்ணம் [காஞ்சீபுரம்]

பெருமாள் : **பவளவண்ணப் பெருமாள்**
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **பவளவல்லி நாச்சியார்**

விமானம் : ப்ரவாள விமானம்

தீர்த்தம் : சக்ர தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : அச்விநி தேவதைகள், பார்வதி, பிருகு மஹரிஷி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (1 பாசுரம்)

எம்பெருமான் நிறத்தைக் கொண்டு மங்களாசாசனம் செய்யப்பட்ட ஸ்தலம் இது. காஞ்சீபுரம் இரயில் நிலையத்திற்கு அருகே ஏகாம்பர நாதர் கோயிலுக்குக் கிழக்கே 2 கி.மீ. தூரத்தில் காலாண்டார் தெருவில் உள்ளது. இந்த சன்னதிக்கு எதிரே உள்ள பச்சை வண்ணர் சன்னதியையும் இதே திவ்ய தேசமாக கூறுகின்றனர். பவளவண்ணன், எதிரே உள்ள பச்சை வண்ணன் (மங்களாசாசனம் செய்யப்படாத தலம்) இரண்டையும் ஒரே திவ்ய தேசமாக

Koviloor Digital Library

சேர்த்தே ஸேவிப்பது வழக்கமாயிருக்கிறது. இந்த ஸந்நிதிகள் கங்கை கொண்டான் மண்டபத்திலிருந்து கிழக்காகச் செல்லும் செங்கழுநீர் ஓடைத்தெருவின் இடையில் வலது புறம் செல்லும் சாலையில் எதிர் எதிராக உள்ளன. பச்சை வண்ணன் ஆதிசேஷன்மீது வீற்றிருந்த திருக்கோலத்தில் பரமபதநாதனாக எழுந்தருளி உள்ளார்.

56. திருப்பரமேச்சுர விண்ணகரம்

[காஞ்சீபுரம் - வைகுந்தப் பெருமாள் கோவில்]

பெருமாள் : **பரமபத நாதன் - வைகுந்தநாதன்**
வீற்றிருந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **வைகுந்தவல்லி நாச்சியார்**

விமானம் : முகுந்த விமானம்

தீர்த்தம் : ஐரம்மரத தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : பல்லவராஜன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

காஞ்சீபுரம் பஸ் நிலையத்திற்கு அருகே கீழராஜ வீதியில் ஒரு வலப்புறப் பிரிவுச் சாலையில் உள்ளது. மதுரை கூடலழகர் கோயிலில் போல 3 அடுக்கு விமானத்தில் நின்று இருந்து கிடந்த கோலங்கள். பல்லவர் கால சிற்பச் சிறப்புடையது.

57. திருப்புட்குழி

பெருமாள் : **விஜயராகவப் பெருமாள்**
வீற்றிருந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **மரகதவல்லி நாச்சியார்**

விமானம் : விஜய (வீர) கோடி விமானம்

தீர்த்தம் : ஜடாயு தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : ஜடாயு

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (2 பாசுரங்கள்)

சென்னை - வேலூர் சாலை மார்க்கத்தில் 80 கிலோ மீட்டர் தூரத்தில் பாலு செட்டிச் சத்திரம் என்ற நிறுத்தத்திலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ள இத்தலத்திற்குப் பேருந்து வசதி உள்ளது. காஞ்சீபுரத்திலிருந்து மேற்கே 11 கி.மீ. கடந்தும் இத்தலத்தை அடையலாம். ஜடாயுவுக்கு தர்ப்பணம் செய்ய ராமன் ஏற்படுத்திய தீர்த்தம். குழந்தை வேண்டுவோர் மடப்பள்ளியில் வறுத்து நனைந்த பயறை மடியில் கட்டிக்கொள்வது வழக்கம். அசையும் உறுப்புகள் உடைய அபூர்வ குதிரை வாகனமுள்ளது. ஸ்ரீராமானுஜரும் மணவாள மாமுனிகளும் அடிக்கடி மங்களாசாசனம் செய்த பதி. நிகமாந்த தேசிகனுக்கும் மணவாள மாமுனிக்கும் தனித்தனி சந்நிதிகள் உள்ளன.

Koviloor Digital Library

57. திருநின்றவூர் [திண்ணனூர்]

பெருமாள் : **பக்தவத்ஸலர் - பத்தராவிப் பெருமாள்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **என்னைப் பெற்ற தாயார் - ஸுதாவல்லி**

விமானம் : ஸ்ரீநிவாஸ (உத்பல) விமானம்

தீர்த்தம் : வருண புஷ்கரிணி, வருத்த க்ஷீர நதி

ப்ரத்யக்ஷம் : வருணன்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (2 பாசுரங்கள்)

சென்னை - அரக்கோணம் இரயில் பாதையில் திருநின்றவூர் இரயில் நிலையததிலிருந்து தெற்கே 2 கி.மீ. தூரத்திலுள்ள இக்கோயிலுக்கு சென்னையிலிருந்து பஸ் வசதி உள்ளது. ஸ்ரீமந் நாராயணன் முன் ஒரு காலத்தில் யோக நித்திரையில் இருந்தபோது "திரு" வான மஹாலக்ஷிமி தேவஸ்தீரிகளுடன் (பாதுகாவலாக சக்கரத்தாழ்வார் ஆதிசேஷன் உடன் வர) இந்நகருக்கு எழுந்தருளி அவள் கடாக்ஷத்தினால் இவ்வூரில் எல்லா செல்வங்களும் நிரம்ப "திருநின்றவூர்" என்றாயிற்று. இதுவே திண்ணனூராக மருவியிருக்கிறதென்கின்றனர். பக்கத்தில் ஏரி காத்த ராமர் கோயில் உள்ளது. இது ஒருவராக க்ஷேத்திரம். நீடுரில் சிவனார் தன்னை பாட மறுத்த சுந்தரரை வருவித்து பாடச் செய்ததுபோல் பாசுரம் பாட மறந்த திருமங்கை ஆழ்வாரை, பெருமாள் மகாபலிபுரம் சென்று நினைவுறுத்தி மங்களாசாசனம் செய்யப்பட்ட ஸ்தலம்.

குறிப்பு : இக்கோயில் ஸ்ரீமந் பரமஹம்ஸ திருமலை திருப்பதி பெரிய ஜீயர் ஆதினத்திற்கு உட்பட்டது.

59. திருஎவ்வுள் [திருவள்ளூர்]

பெருமாள் : **வீரராகவப் பெருமாள்**
புஜங்க சயனம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **கனகவல்லித் தாயார் - வஸுமதி**

விமானம் : விஜய கோடி விமானம்

தீர்த்தம் : ஹ்ருத்தாபநாசினி தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : சாலிஹோத்ர மஹரிஷி, சதுர்முகன், சங்கரன்

மங்களாசாசனம் : திருமழிசையார், கலியன் (12 பாசுரங்கள்)

சென்னை - அரக்கோணம் இரயில் பாதையில் திருவள்ளூர் இரயில் நிலையத்திலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ள இத்தலத்திற்கு டவுன் பஸ் வசதி உள்ளது. சென்னையிலிருந்தும் பேருந்துகள் நேரடியாகச் செல்கின்றன. கோவில் வாசல் முன் பஸ்கள் நின்று செல்கின்றன.

அகோபில மட நிர்வாகத்தில் உள்ள கோயில். மூலவர் சாலிஹோத்திர முனிவர்மீது வலக்கை வைத்து இடக்கை ஞானமுத்திரையால் பிரமனுக்கு உபதேசம் செய்யும் பாங்கு காணக் கிடைக்காத காட்சி. ஹ்ருத்தாயபுஷ்கரிணியில்

Koviloor Digital Library

அமாவாசைத் தீர்த்தமாடுவது சிறப்பாகக் கருதப்படுகிறது. காரில் திருப்பதி செல்பவர்கள் வழியில் இத்தலத்தையும் சேவிக்கும் வசதிகள் உள்ளன.

விசேடங்கள் : திருமால் சாலிஹோத்ர மஹரிஷிக்கு காட்சி தந்து "உரைதற்குரிய உள்எவ்வுள்" என வினவியதாகவும், அதனால் இத்தலம் எவ்வுள் என்று அழைக்கப்படுவதாகவும் கருத்து. இங்கு புஷ்கரிணியில் தீர்த்தமாடி வீரராகவனையும் விஜய கோடி விமானத்தையும் ஸேவிப்பதால் சகல நோய்களும் பூண்டோடு அழியுமாதலால் பகவானுக்கு வைத்ய வீரராகவன் என்ற திருநாமமும் உண்டு. ராமலிங்க அடிகளார் இப் பதியில் தரிசனம் செய்து வயிற்று வலி நீங்கப்பட்டதால் இப்பெருமானைப் போற்றி பஞ்சகம் பாடியுள்ளார். அருகில் ஸ்ரீநிவாசப்பெருமாள் ஸ்ரீவராகசாமி, காக்கவூர் ஆஞ்சநேயர் மற்றும் வடக்கு குளக்கரையில் தீர்த்த ஸ்வரசுவாமி கோயில்களும் உள்ளன.

60. திருவல்லிக்கேணி

பெருமாள் : பார்த்தசாரதி - வேங்கடகிருஷ்ணன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : பார்த்தசாரதி

தாயார் : ருக்மணி

விமானம் : ஆனந்த விமானம்

தீர்த்தம் : கைரவிணி புஷ்கரிணி (இந்த புஷ்கரிணியில் இந்திர, ஸோம, மீன, அக்னி, விஷ்ணு என்று 5 தீர்த்தங்கள் உள்ளதாக ஐதீகம்.

ப்ரத்யக்ஷம் : ருக்மணி, அநிருத்தர், பரத்யும்னர், பலராமன், ஸுமதிராஜன், தொண்டமான், அர்ஜுனன்

மங்களாசாசனம் : பேயாழ்வார், திருமழிசையார், திருமங்கையாழ்வார் (12 பாசுரங்கள்)

பார்த்தசாரதியுடன் ரங்கநாதர், ராமர், வரதர், நரசிம்மர் என 5 மூர்த்திகள் ஒருங்கே எழுந்தருளியுள்ள ஸ்தலம். சென்னை மாநகரின் ஒரு பிரிவாகத் திகழும் இத்தலத்திற்குச் சென்னையின் எல்லா இடங்களிலிருந்தும் டவுன் பஸ் உள்ளது. இது பார்த்தசாரதி கோயில் என்றே பிரசித்தம். சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் 3 மூலவர் இருப்பதுபோல் இங்கு 5 மூலவர் இருப்பது சிறப்பு.

1. வேங்கடகிருஷ்ணன் ருக்மணி பிராட்டியுடன் (பலராமன் ஸாத்யகி, அநிருத்ன், ப்ரத்யும்னர் இவர்களோடு நின்ற திருக்கோலம்) கிழக்கே திருமுக மண்டலம். உத்ஸவர் பார்த்தசாரதி

2. மூலவர் ரெங்கநாதர். மன்னாதன் புஜங்க சயனம் கிழக்கே திருமுக மண்டலம், வராகப்பிரானும் நரசிங்க பெருமானும் (மூலவர்) எழுந்தருளியுள்ளனர். தாயார் வேதவல்லி (தனிக்கோயில் நாச்சியார்)

3. மூலவர் சீதா, லக்ஷ்மண, பரத, சத்ருக்ன, ஹனுமாருடன் ஸ்ரீராமர் நின்ற திருக்கோலம் தெற்கே திருமுக மண்டலம்.

Koviloor Digital Library

4. வரதராஜன், தேவப்பெருமாள் கருடன் மீதமர்ந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

5. மூலவர் : தெள்ளிய சிங்கர் (நரசிம்ஹர்) வீற்றிருந்த திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம்.

வடமேற்கு பக்கம் தனி ஆண்டாள் சந்நிதி, விமானம் : ஆனந்த விமானம், ப்ரணவ விமானம், புஷ்பக விமானம், சேஷ விமானம் தைவிகவிமானம்.

ப்ரத்யக்ஷம் : ருக்மணி, தொண்டைமான் ஸுமதி ராஜன், அர்ஜுனன், ப்ரும்ம மஹரிஷி, மார்க்கண்டேயர், மதுமான் மஹரிஷி ஸப்தரோமா, அத்ரி மஹரிஷி, ஜாஸலி மஹரிஷி, அநிருத்தன், ப்ரத்யும்னன் மற்றும் பலராமன். மேற்கண்டபடி கண்ணன் குடும்ப சகிதமாக அருள்புரிவது இத்தலத்தில் மட்டுமே. திருப்பதி பெருமாள் ஸுமதி என்ற அரசனுக்கு இத்தலத்தில் வேங்கடகிருஷ்ணனாக சேவை ஸாதித்தருளியபடியால் இரண்டாவது திருப்பதி என்று அழைக்கிறார்கள். புரட்டாசி சனிக்கிழமை திருப்பதியைப்போல் இங்கும் விசேடமானது. கண்ணன் சாரதியாய் இருந்தபோது பீஷ்மர் விட்ட அம்புகளை அர்ச்சுனனுக்காக ஏற்றதைக் காண்பிக்க இன்றைக்கும் பார்த்தசாரதி திருமுக மண்டலத்தில் வடுக்களை காணலாம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திருப்பதியைப்போல் வேங்கடகிருஷ்ணனுக்கு திருமஞ்சனம் நடைபெறுகிறது. இங்கு ஐப்பசி திருமூலத்தில் நடைபெறும் கைத்தலஸேவை சிறப்பு வாய்ந்தது.

61. திருநீர்மலை

பெருமாள்	:	**நீர்வண்ணன்** - நீலமுகில் வண்ணன், ரங்கநாதன் நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**அணிமாமலர் மங்கை** - ரங்கநாயகி
விமானம்	:	தோயகிரி விமானம்
தீர்த்தம்	:	மணகர்ணிக தீர்த்தம்
ப்ரத்யக்ஷம்	:	தொண்டமான், ப்ருகு, மார்க்கண்டேயன்
மங்களாசாசனம்	:	திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார் (20 பாசுரங்கள்)

சென்னை - தாம்பரம் இரயில் பாதையில் பல்லாவரத்திலிருந்து தென்மேற்கே 6 கி.மீ. தொலைவில் உள்ளது. நகரப் பேருந்து வசதி உள்ளது.

பெருமாள் இங்கு கீழே ஒருவராகவும், மலை மேல் மூவராகவும் (நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் என்ற திருப்பெயர்களில்) நான்கு திருக்கோலங்களில் எழுந்தருளியிருக்கிறார். வால்மீகி மஹரிஷிக்கு பெருமாள் ஸ்ரீராமர் குடும்பராய் காட்சியளித்த திருத்தலம். மலையைச் சுற்றி நீர் இருந்ததால் திருமங்கையாழ்வார் 6 மாதம் காத்திருந்ததாக வரலாறு உடையது. ஆழ்வார் தங்கியிருந்த இடம் ஆழ்வார்புரம் என்று அழைக்கப்படுகிறது. அருகே 4 கி.மீ. மேற்கில் குன்றத்தூர் திருஊரகம் பெருமாள் கோயில் உள்ளது.

Koviloor Digital Library

அன்று ஆயர்குலக்கொடியோடு அணிமாமலர்
மங்கையொடு அன்புஅளவி அவுணர்க்கு
என்தானும் இரக்கம் இலாதவளுக்கு உறையும்
இடமாவது இடும் பொழில்சூழ்
நின்றாய புனல் நறையூர் திருவாலி
குடந்தைதடம் திகழ்கோவல் நகர்
நின்றான், இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு
இடம் மாமலையாவது நீர்மலையே.

62. திருவிடவெந்தை [திருவடந்தை]

பெருமாள் : நித்யகல்யாணர் - லக்ஷ்மிவராஹர்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **கோமளவல்லி நாச்சியார்**

விமானம் : கல்யாண விமானம்

தீர்த்தம் : கல்யாண தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : மார்க்கண்டேயர்

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (13 பாசுரங்கள்)

சென்னை - மகாபலிபுரம் கடலோர சாலை மார்க்கத்தில் சென்னையிலிருந்து 40 கி.மீ. தூரத்தில் உள்ளது.

சிறப்புக்கள் : காலவ மஹரிஷியின் 360 பெண்களையும் பகவான் ஒரே கன்னிகையாக்கி மடியில் வைத்துக் கொண்டு 360 கன்னிகைகளை 360 நாள் கல்யாணம் செய்து கொண்டதாக பாவிப்பதால் உத்ஸவருக்கு நித்ய கல்யாணன் என்று பெயர். நித்ய கல்யாணரை முறையாகச் சேவித்தால் தடைப்பட்டு வரும் திருமணம் சீக்கிரம் கைகூடும் என்பது அசாத்ய நம்பிக்கை. இத்தலத்திற்கு **கல்யாணபுரி** என்றும் பெயர்.

63. திருக்கடன்மல்லை [மஹாபலிபுரம்]

பெருமாள் : **ஸ்தலசயனப் பெருமாள்**
புஜங்க சயனம். கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : உலகுய்ய நின்ற பெருமாள்

தாயார் : **நிலமங்கை நாச்சியார்**, தனிக்கோயில் அமர்ந்த திருக்கோலம்

விமானம் : ககநாக்ருதி (ஆனந்த) விமானம்

தீர்த்தம் : புண்டரீக புஷ்கரிணி, கருடநதி

ப்ரத்யக்ஷம் : புண்டரீக ரிஷி

மங்களாசாசனம் : கலியன், பூதத்தாழ்வார் (27 பாசுரங்கள்)

சென்னை - மகாபலிபுரம் கடலோர சாலை மார்க்கத்தில் சென்னையிலிருந்து 40 கி.மீ. தூரத்தில் உள்ளது. பஸ் வசதி உள்ளது.

Koviloor Digital Library

சிறப்பு : வலது திருக்கரத்தை திருமார்பின்மீது உபதேச முத்திரையாக வைத்து ஞானத்தமிழ் புரிந்த "நான்" என்பதைக் காட்டுகிறார்.

பூதத்தாழ்வார் அவதரித்த ஸ்தலம். கலைச் சிற்பங்கள் நிறைந்த ஊர். பகீரதன் தவம், பாண்டவர் மண்டபம் கோவர்த்தன மண்டபம், அர்ச்சுனன் தவம், பஞ்ச பாண்டவர்கள் ரதம் ஆகியவற்றைக் குறிப்பாகச் சொல்லலாம். புண்டரீக மஹரிஷி க்ஷீராப்திநாதனைத் தொழ திருப்பாற்கடல் செல்ல முடியாமல் கடல் நீர் இருந்தபோது, முனிவர் அதைக் கையால் இறைக்க முயற்சிக்க, பெருமாள் அவர் கூடையிலிருந்த பூக்களை அணிந்து அருகிலேயே தரிசனம் அளித்த பதி. கோயிலிலும் எப்பெருமான் வெறும் தரையிலேயே சயனித்து திருவடியருகில் புண்டரீகரிஷி கைகூப்பியவண்ணம் ஸேவை தருகிறார்.

அயோத்தி வைகுண்டத்தின் பகுதிபோல மல்லையும் திருப்பாற்கடலே. இங்குள்ள பிராட்டி வலதுபுறம் இருப்பதால் இத்தலம் வலவெந்தை என்றும் அழைக்கப்படுகிறது.

64. திருக்கடிகை [சோளிங்கர்]

பெருமாள் : **யோக நரஸிம்ஹன் (அக்காரக்கனி)**
வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **அம்ருதவல்லி நாச்சியார்** (தனிக்கோயில்)

விமானம் : ஸிம்ஹகோஷ்டாக்ருதி விமானம், ஹேமகோடி விமானம்

தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம், தக்கான்குளம்

ப்ரத்யக்ஷம் : ஹனுமார்

மங்களாசாசனம் : பேயாழ்வார், கலியன் (4 பாசுரங்கள்)

சென்னை அரக்கோணத்திலிருந்து 28 கி.மீ. தொலைவு. சென்னை மற்றும் திருத்தணியிலிருந்து நேரடி பஸ் வசதி உள்ளது. சோளிங்கர் ரயில் நிலையத்திலிருந்து 12 கி.மீ. ஆனால் சிரமமானது.

1. கீழே உத்ஸவருக்கு ஒரு கோயில். மூலவர் இல்லை. உத்ஸவர் பக்தவத்ஸல பெருமாள் (தக்கான்)
2. பெரிய மலையில் (கடிகாசலம்) சுமார் 750 அடி உயரமுள்ளது. 1300 படிகள்
3. சிறிய மலை. 420 படிகள் உள்ள தனிமலை. நான்கு கையில் சங்கு சக்கரத்துடன் யோக ஆஞ்சநேயர்.

இவ்வூரில் ஒரு கடிகை (சுமார் 1/2 மணி) தங்கி இருந்தாலே மோக்ஷம் கிடைக்குமாதலால் திருக்கடிகை, கடிகாசலம் என்ற பெயர்கள் ஏற்பட்டனவாம்.

இது ஒரு விசேஷமான பிரார்த்தனை ஸ்தலம். பேய், பிசாசு, சூனியம் என்று சொல்லப்படும் அநேக வியாதிகள் தீர இங்கே நீராடி மலை மீது ஏறி பெருமாளை வலம் வந்து தங்கள் நோய்கள் தீரப்பெற்று மகிழ்ச்சியுடன் திரும்புகிறார்கள்.

அப்பருக்கு திருவையாற்றில் சிவபெருமான் கைலாச தரிசனம் அளித்ததுபோல் இங்கு தொட்டாச்சாரியார் என்ற மகானுக்கு பெருமாள் காஞ்சி கருட சேவை தரிதனம் அளித்தது விசேடம்.

Koviloor Digital Library

65. திருநாவாய்

பெருமாள் : நாராயணன் - நாவாய் முகுந்தன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : மலர்மங்கை நாச்சியார், சிறுதேவி

விமானம் : வேத விமானம்

தீர்த்தம் : கமல தடாகம்

ப்ரத்யக்ஷம் : லக்ஷ்மி, கஜேந்திரன், நவயோகிகள்

மங்களாசாசனம் : நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் (13 பாசுரங்கள்)

ஷோரனூர் - காலிகட் ரயில் மார்க்கத்தில் குட்டிபுரம் ரயில் நிலையத்திலிருந்து பேருந்தில் 7 கி.மீ. தூரம் பயணம் செய்து இத்தலத்தை அடையலாம். இக்கோவிலுக்கு எதிரில் பாரதப்புழையாற்றின் கரையில் சிவன் பிரம்மாவுக்கு கோவில்கள் அமைந்துள்ளன. ஆகவே இது மும்மூர்த்தி தலம். காசிக்கு ஒப்பானது. காசிக்கான பிரார்த்தனையை இங்கேயே செலுத்திடலாம். மலைநாட்டில் இலக்குமிக்கு தனிச்சந்நிதியுள்ள ஒரே திவ்ய தேசமிது. நவயோகிகள் யாகம் செய்ததால் இந்த ஸ்தலம் திருநவயோகி என்று பெயர் பெற்று நாளடைவில் மருவி திருநாவாய் என்றாயிற்று என்பது ஐதீகம்.

66. திருவித்துவக்கோடு [திருவிச்சிக்கோடு]

பெருமாள் : உய்யவந்த பெருமாள் - அபயப்ரதன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : வித்துவக்கோட்டுவல்லி நாச்சியார்

விமானம் : தத்வ காஞ்சன விமானம்

தீர்த்தம் : சக்ர தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : அம்பரீஷன்

மங்களாசாசனம் : குலசேகராழ்வார் (10 பாசுரங்கள்)

ஷோரனூர் - காலிகாட் இருப்புப்பாதை மார்க்கத்தில் பட்டாம்பி ரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. கோயிலில் நுழைந்ததும் எதிரே சிவன் ஸந்நிதியும் அதன் பின் பெருமாள் சந்நிதியும் உள்ளன.

சிறப்பு : பாண்டவர்கள் தவமிருந்து ஐவரும் சேர்ந்து ஸேவித்த ஸ்தலம். அம்பரீஷனுக்கு 4 கோலங்களைக் காட்டியதால் நாலு மூர்த்தி கோவில் என்ற பெயரும் உண்டு. அம்பரீஷன் முக்தியடைந்த ஸ்தலம்.

Koviloor Digital Library

67. திருக்காட்கரை (திருகாக்கரா)

பெருமாள் : **காட்கரையப்பன்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **வாத்ஸல்யவல்லி** - பெருஞ்செல்வநாயகி

விமானம் : புஷ்கல விமானம்

தீர்த்தம் : கபில தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : கபிலரிஷி

மங்களாசாசனம் : நம்மாழ்வார் (11 பாசுரங்கள்)

ஷோரனூர் - எர்ணாகுளம் இரயில் பாதையில் வழியிலுள்ள இடைப்பள்ளி இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. எர்ணாகுளம் - ஆலவாய் மார்க்கத்தில் எர்ணாகுளத்திலிருந்து 7 கி.மீ. தூரத்தில் ஒரு கிளைப்பாதையில் உள்ளது. பெருமாளை வாமனனாவே மக்கள் கருதுகிறார்கள். ஓணத்தன்று மிக விசேஷ வழிபாடு நடக்கிறது. பொன் வாழைக்குலை அர்ப்பணித்த ஒரு பக்தனின் வயலில் காய்க்கத் துவங்கிய பெரும் பெரும் வாழைக்குலைகளே நேந்திரம் வாழை எனப் புகழ் பெற்றது. வட்டவடிவக் கருவறையும், மிகப் பெரும் பலி பீடமும் சிறப்பானவை.

68. திருமூழிக்களம் [மூழிக்களம்]

பெருமாள் : **திருமூழிக்களத்தான்** - அப்பன் ஸ்ரீஸூக்திநாதப் பெருமாள்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **மதுரவேணி நாச்சியார்**

விமானம் : ஸுந்தர விமானம்

தீர்த்தம் : பெருங்குள தீர்த்தம், சங்க தீர்த்தம், சிற்றாறு

ப்ரத்யக்ஷம் : தேவரிஷிகள், ஹாரித மஹரிஷி

மங்களாசாசனம் : நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் (14 பாசுரங்கள்)

கேரளாவில் ஆல்வாயிலிருந்து பேருந்து வசதி உள்ளது. அங்கமாலி இரயில் நிலையத்திலிருந்தும் எர்ணாகுளத்திலிருந்தும் பேருந்து வசதி உள்ளது.

பாரதப்புழை ஆற்றின் கரையில் அமைந்துள்ள இந்த ஸ்தலம். ஹாரித மஹரிஷிக்கு பெருமாளே திருமொழியைப் புகட்டிய பதி. பரதனின் எண்ணமறியாமல் போரிட நினைத்த லக்ஷ்மணனுக்கு உண்மையை உணர்த்திய பதி. லக்ஷ்மணன் திருப்பணி செய்த இந்தப் பதி ஒரு காலத்தில் பெரிய கலாக்ஷேத்ரமாக விளங்கியதாக அறியப்படுகிறது.

Koviloor Digital Library

69. திருவல்லவாழ் [ஸ்ரீவல்லப க்ஷேத்ரம்)

பெருமாள் : **கோலப்பிரான்** - திருவாழ்மார்பன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **செல்வத் திருக்கொழுந்து நாச்சியார்**

விமானம் : சதுரங்க கோல விமானம்

தீர்த்தம் : கண்டாகர்ண தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : கண்டாகர்ணன்

மங்களாசாசனம் : நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் (22 பாசுரங்கள்)

எர்ணாகுளம் - கொல்லம் ரயில் மார்க்கத்தில் திருவல்லா ரயில் நிலையத்திலிந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ளது. பேருந்து வசதி மிக்க பெருநகரம். இக்கோயிலில் சுதர்சன சக்கரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. த்வஜஸ்தம்பம் பொன் தகடு வேயப்பட்டுள்ளது. பெண்கள் ஸந்நிதிக்கு வெளியிலிருந்தே சேவிக்க வேண்டும். ஏகாதசி விரதத்தின் மற்றும் துவாதசியில் பிரம்மசாரிக்கு அன்னமளிப்பதின் சிறப்பை வலியுறுத்தும் தலம். பல ஊற்றுக்களோடு தானாக உருவான திருக்குளமுடையது. பக்தர்களுக்கு சந்தனமும், விபூதியும் வழங்கப்படும் வைணவத்தலம். சனிக்கிழமை காலை 7 மணிப்பூஜை சிறப்புமிக்கது.

70. திருக்கடித்தானம்

பெருமாள் : **அற்புத நாராயணன்** - அம்ருத நாராயணன்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **கற்பகவல்லி நாச்சியார்**

விமானம் : புண்யகோடி விமானம்

தீர்த்தம் : ஸ்ரீபூமி தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : ருக்மாங்கதன்

மங்களாசாசனம் : நம்மாழ்வார் (11 பாசுரங்கள்)

திருவல்லா - கோட்டயம் சாலையில் செங்கணாஞ்சேரியிலிருந்து கிழக்கே 2 கி.மீ. தூரத்தில் உள்ள தலம். நகரப் பேருந்து வசதி உள்ளது.

விசேடங்கள் : இது சகாதேவன் திருப்பணி செய்த கோயில். பாரதத்திலேயே மிகச் சிறந்ததாகக் கருதப்படும் 15 கிருஷ்ணக்ஷேத்திரங்களில் இதுவும் ஒன்று. திருவண்ணாமலைபோல நினைக்க முக்தி தரும் திவ்ய தேசம்.

எல்லியும் காலையும் தன்னை நினைந்தெழ
நல்ல அருள்கள் நமக்கே தந்தருள் செய்வான்
அல்லியம் தண்ணந்துழாய்முடி யப்பன்ஊர்
செல்வர்கள் வாழும் திருக்கடித்தானமே

- நம்மாழ்வார்

Koviloor Digital Library

71. திருச்செங்குன்றூர் (செங்கனூர்) [திருச்சிற்றாறு]

பெருமாள் : **இமையவரப்பன்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **செங்கமலவல்லி**

விமானம் : ஜகஜ்ஜோதி விமானம்

தீர்த்தம் : சங்க தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : சிவன்

மங்களாசாசனம் : நம்மாழ்வார் (11 பாசுரங்கள்)

திருவனந்தபுரம் - கொல்லம் ரயில் மார்க்கத்தில் உள்ள இரயில் நிலையம் செங்கண்ணூர் பேருந்து வசதி மிக்க நகரம். திருவல்லாவிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. சிற்றாற்றங்கரையில் இந்த கோயில் அமைந்துள்ளது. தர்மபுத்திரர் திருப்பணி செய்த கோவில் என்று சொல்லப்படுகிறது. சூரனும் பத்மனும் சம்ஹாரமான ஸ்தலம். திருச்சுற்றில் ஒளிரும் தீப மங்கள ஜோதி அற்புதக் காட்சி.

72. திருப்புலியூர் [குட்டநாடு]

பெருமாள் : **மாயப்பிரான்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **பொற்கொடி நாச்சியார்**

விமானம் : புருஷஸூக்த விமானம்

தீர்த்தம் : ப்ரக்ஞாஸரஸு தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : சப்த ரிஷிகள்

மங்களாசாசனம் : நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் (12 பாசுரங்கள்)

புலியூர் என்று உள்ளூரில் அறியப்படும் இத்தலம் செங்கண்ணூரிலிருந்து மேற்கு திசையில் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. பேருந்து வசதி உள்ளது. பீமன் திருப்பணி செய்த ஸ்தலம். இங்கு சப்தரிஷிகள் பணிந்ததாக ஐதீகம். வட்டமான கருவறை பெரிய கொடி மரம். காஞ்சி கும்பகோணம் போல முன்பு இது தென்திசைத் திலகமாக விளங்கிய பதி.

73. திருவாறன்விளை [ஆரமுளா]

பெருமாள் : **திருக்குறளப்பன்**
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **பத்மாசனி**

விமானம் : வாமன விமானம்

தீர்த்தம் : வேத வ்யாஸ ஸரஸ் தீர்த்தம், தேவ புஷ்கரிணி, பம்பா தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : வேதவ்யாசர், ப்ரம்ஹா

மங்களாசாசனம் : நம்மாழ்வார் (11 பாசுரங்கள்)

Koviloor Digital Library

அர்ச்சுனன் பிரதிஷ்டை செய்த ஸ்தலம். செங்கனூரிலிருந்து கிழக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது. பஸ் வசதி உள்ளது. கர்ணன் மரணத்திற்கு வருந்தி அர்ஜுனன் திருப்பணி செய்த தலம். பிரமன் நன்மையடைந்த தலம். துலாபாரம் விசேடம். சபரிமலை ஐயப்பனின் திருஆபரணங்களை இங்குதான் பத்திரப்படுத்தி வைக்கிறார்கள். இத்தலத்திற்கு அர்ஜுனன் அம்பலம் என்றும் பெயர்.

74. திருவண்வண்டூர் [திருவமுண்டூர்]

பெருமாள் : **பாம்பணையப்பன்,** கமலநாதன்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **கமலவல்லி நாச்சியார்**

விமானம் : ஸகல வேத விமானம்

தீர்த்தம் : பம்பா தீர்த்தம், பாபநாச தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : நாரதர், மார்க்கண்டேயர்

மங்களாசாசனம் : நம்மாழ்வார் (11 பாசுரங்கள்)

செங்கண்ணூரிலிருந்து வடக்கே 6 கி.மீ. தொலைவில் பேருந்து மார்க்கத்தில் உள்ளது. இத்தலம் நகுலனால் பிரதிஷ்டை என்று அழைக்கப்படுகிறது. தத்துவ உபதேசம் செய்வதே தன் வாழ் பணியாகிட நாரதர் பூஜித்து அருள் பெற்ற தலம். காளிங்க நர்த்தன கண்ணனும் அவனைத் தாங்கும் 2 தூண்களில் தசாவதாரச் சிற்பமும் அற்புதக் காட்சி.

75. திருவனந்தபுரம்

பெருமாள் : அனந்த பத்மநாபன்
புஜங்க சயனம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : ஸ்ரீஹரிலக்ஷ்மி

விமானம் : ஹேமகூட விமானம்

தீர்த்தம் : மத்ஸ்ய, பத்ம, வராக தீர்த்தங்கள்

ப்ரத்யக்ஷம் : சிவன், இந்திரன், சந்திரன் ஏகாதச ருத்ரர்கள்

மங்களாசாசனம் : நம்மாழ்வார் (11 பாசுரங்கள்)

கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரம் இரயில் நிலையத்திலிருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. மூன்று வாயில்களிலிருந்தும் பார்த்தால்தான் புஜங்க சயனப் பெருமாளின் முழு தரிசனம் கிடைக்கும். இங்கு அனுமனுக்குச் சாற்றப்படும் வெண்ணை எக்காலத்தும் உருகுவதில்லை. கெடுவதுமில்லை. கட்டிடப் பணி சேரமான் பெருமாள் நாயனார் துவங்கியது. தற்போதுள்ள கோயில் 1729ல் ராஜமார்த்தாண்டவர்மா புதுப்பித்தது. அவர் யாவற்றையும் பத்மநாபனுக்குக் கொடுத்து விட்டு பத்மநாப தாசராகியபடியே அவர் பரம்பரையினரும் உள்ளனர்.

Koviloor Digital Library

76. திருவட்டாறு

பெருமாள் : **ஆதிகேசவப் பெருமாள்**
புஜங்க சயனம், மேற்கே திருமுக மண்டலம்.
இடது கை தொங்கவிட்டு வலது கை யோகமுத்திரை காட்டி தெற்கே தலையும், வடக்கே திருப்பாதமும் மேற்கு நோக்கிச் சேஷ சயனமாகக் காட்சி தருகிறார்.

தாயார் : **மரகதவல்லி நாச்சியார்**

விமானம் : அஷ்டாங்க விமானம்

தீர்த்தம் : ராம தீர்த்தம், வாட்டாறு

ப்ரத்யக்ஷம் : சந்திரன், பரசுராமன்

மங்களாசாசனம் : நம்மாழ்வார் (11 பாசுரங்கள்)

நாகர்கோவிலிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ளது. நாகர்கோவில் திருவனந்தபுரம் பேருந்து மார்க்கத்தில் தக்கலையிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ளது. தொடுவெட்டியிலிருந்தும் செல்லலாம். மூலவர் சந்நிதி திருவனந்தபுரத்தின் சரியான பிரதி (நகல்) என்று சொன்னால் மிகையாகாது. மூன்று வாயில்களிலிருந்து பார்த்தால்தான் பெருமாளை முழுவதுமாகத் தரிசிக்க இயலும். மாலை நேரத்தில் சூரிய ஒளி பெருமாள் முகத்தில் படும்படியாக அமைந்த கோவில். இது சேரநாட்டு ஸ்ரீரங்கம். சங்க காலத்து எழினிஆதன் திருஅவதாரம் செய்த ஊர். ஆன்மீக அமைதி தவழும் தலமென்றால் மிகையாகாது. இத்தலத்தைச் சுற்றி ஆறு வட்ட வடிவில் மாலைபோன்று செல்வதால் வட்டாறு எனப் பெயர் பெற்றது.

77. திருவண்பரிசாரம் [திருப்பதிசாரம்]

பெருமாள் : **திருக்குறளப்பன் - திருவாழ்மார்பன்**
வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **கமலவல்லி நாச்சியார்**

விமானம் : இந்த்ர கல்யாண விமானம்

தீர்த்தம் : லக்ஷ்மி தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : கருடன், காரி, உடைய நங்கை

மங்களாசாசனம் : நம்மாழ்வார் (1 பாசுரம்)

நாகர்கோவிலுக்கு வடக்கே 4 கி.மீ. தொலைவில் உள்ளது. நகரப்பேருந்து வசதி உள்ளது.

விசேடம் : இரண்யவதத்தின் பிறகு பெருமாளின் உக்ரம் தணிய இலக்குமி அவர் மார்பிலேயே அமர்ந்த ஸ்தலம். அதனால் பகவானுக்கு 'திருவாழ்மார்பன்' என்னும் பெயர். சரிய பதி சஞ்சரித்ததால் திருப்பதி சாரம் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் ஐதீகம். மூலவர் மூலிகையால் ஆனதால் திருமஞ்சனம் கிடையாது. லக்ஷ்மி தீர்த்த புஷ்கரிணியின் கரையில் அற்புத சக்தி வாய்ந்த அரசமரம் எம்பெருமான் அம்சம்

Koviloor Digital Library

கொண்டதாகவே கருதப்படுகிறது. விபீஷணன், இராமர், இலட்சுமணன், சீதையுடன் பட்டாபிஷேகக் கோலத்துடன் சந்நிதி உள்ளது. நம்மாழ்வார் தாயார் உடைய நங்கை அவதரித்த ஸ்தலம். திருமாளிகை, கோயிலுக்கு வாயு மூலையில் உள்ளது. நம்மாழ்வார் குழந்தையாகத் தவழ்வதுபோல் ஒரு அழகிய விக்ரகம் இருக்கிறது.

78. திருக்குறுங்குடி

பெருமாள்	:	**வைஷ்ணவ நம்பி - வாமனர்** நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	குறுங்குடி வல்லி நாச்சியார்
விமானம்	:	பஞ்சகேதக விமானம்
தீர்த்தம்	:	திருப்பாற்கடல், பஞ்சதுறை, சிந்து நதி
ப்ரத்யக்ஷம்	:	சிவன்
மங்களாசாசனம்	:	நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் (40 பாசுரங்கள்)

திருமங்கையாழ்வார் பரமபதம் பெற்ற நம்பி. குறுங்குடி நம்பி, நின்ற நம்பி, வடுக நம்பி, திருப்பாற்கடல் நம்பி, மலைமேல் நம்பி என்ற திருநாமங்களில் பெருமாள் விளங்கும் ஸ்தலம். நாங்குநேரியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்தலம். வள்ளியூர், களக்காடு ஆகிய இடங்களிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

விசேடங்கள் : நின்ற நம்பி - கிடந்த நம்பி சன்னதிகளுக்கு இடையில் சிவனாரும் பைரவரும் உள்ளனர். திருப்பாற்கடல் என்ற ஓடை நடுவில் பாறை மேல் உடையவர் சன்னதி உள்ளது. பல நம்பிகளாக அருளும் பெருமாள் தானே நம்மாழ்வாராக இத்தலத்தில் அவதரிக்கப் போவதை முன்னதாகவே அறிவித்த ஸ்தலம். ராமானுஜருக்கு இத்தலப் பெருமாளே பணிவிடை செய்ததாகக் கூறப்படுகிறது. ஆகவே "குறுங்குடி வைகுண்டபதம் கூப்பிடு தூரம்" என்பது வழக்கு. இதனைத் தக்ஷிண பத்ரி என்று கூறுவர். மூலவரான நம்பிகளின் அருகில் தலை மட்டும் தரைக்கு வெளியே தெரியுமாறு பூமிக்குள் மகாபலி அழுத்தப்பெற்ற நிலையில் உள்ளார். இக்கோயில் கோபுரத்தில் உள்ள கருங்கல்லில் அமைந்துள்ள சிலைகள் மிகவும் அற்புதவடிவுடன் உள்ளன. சிவக்கொழுந்தான நந்தனாருக்கு எப்படி திருப்புங்கூர் நந்தி விலகி ஈஸ்வர தரிசனம் அருளினாரோ அதுபோல் கொடிமரத்தை விலகச் செய்து தன் பக்தன் நம்பாடுவானுக்கு பெருமாள் தரிசனம் கொடுத்த ஸ்தலம்.

நின்ற வினையும் துயரும் கெடமாமலர் ஏந்தி
சென்று பணிமின் எழுமின், தொழுமின் தொண்டீர்கள்
என்று இரவும் பகலும் வரிவண்டு இசை பாட
குன்றின் முல்லை மன்றிடை நானும் குறுங்குடியே.

- திருமங்கையாழ்வார்

Koviloor Digital Library

79. திருச்சிரீவரமங்கை (வானமாமலை) [நாங்குநேரி]

பெருமாள்	:	**தெய்வநாயகன்** - தோதாத்ரி வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**சிரீவரமங்கை**
விமானம்	:	நந்தவர்த்தன விமானம்
தீர்த்தம்	:	இந்த்ர புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம்	:	இந்திரன், ப்ரம்ஹா, உரோசரிஷி, ப்ருகு
மங்களாசாசனம்	:	நம்மாழ்வார் (11 பாசுரங்கள்)

திருநெல்வேலி - நாகர்கோவில் மார்க்கத்தில் திருநெல்வேலியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள நான்குநேரி என்று அழைக்கப்படும் ஸ்தலம். வானமாமலை மடத்தின் தலைமைப் பீடம் அமைந்துள்ள ஸ்தலம். சுயம்பு க்ஷேத்ரம் பெருமாளுக்கு நித்ய தைல அபிஷேகம் செய்து பெரிய கிணற்றில் ஊற்றப்படுகிறது. இந்த எண்ணைப் பிரசாதம் வியாதிகளை நீக்கக்கூடியது என்பது அபரிமிதமான நம்பிக்கை. அதிசயமும்கூட. சாபத்தால் நாயாகிய அரசன் முக்தி பெற்ற பதி. சடாரியில் நம்மாழ்வார் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது இங்கு மட்டுமே. இது முக்தி தலங்களில் ஒன்று. மது-கைடபர்கள் என்னும் அசுரர்கள் அழிந்தபோது இரத்தம் பரவி துர்நாற்றம் வீசப் பூதேவியின் வேண்டுகோளுக்கு இணங்க சக்ராயுதத்தை ஏவி அமிர்த மழை பொழியச் செய்து அழுக்கும் நாற்றமும் போக்கப்பட்ட ஸ்தலம். பிரம்மா, இந்திரன், பிருகு முனிவர், மார்க்கண்டேயர் பெருமாளை வணங்கி பேறு பெற்ற தலம்.

ஆறு எனக்கு நின் பாதமே சரணாகத்
    தந்தொழிந்தாய் உனக்கோர் கைம்
மாறு நான் ஒன்றிடு லேன்
    எனது ஆவியும் உனதே
சேறுகோர் கரும்பும் பெருஞ் செந்நெல்லும்
    மலிதன் சிரிவரமங்கை
நாறு பூந்தண் துழாய் முடியால்
    தெய்வ நாயகனே.

- நம்மாழ்வார்



கணபதிபுரம் ஸ்ரீகோதண்டராமர்

Koviloor Digital Library

நவதிருப்பதியும், நவகைலாயமும்

நவதிருப்பதி

80. ஸ்ரீவைகுண்டம், 81. வரகுணமங்கை, 82. திருப்புளியங்குடி, 83. திருத்துலைவில்லி மங்கலம் I & II (இரட்டை திருப்பதி), 84. திருக்குளந்தை, 85. திருக்கோளூர், 86. திருப்பேரை, 87. திருக்குருகூர் ஆகிய திவ்ய தேசங்கள் பாண்டிய நாட்டில் நவதிருப்பதிகள் என அழைக்கப்படுகின்றன. தன்பொருநை என வழங்கப்படும் தாமிரபரணி ஆறு வேளாண் பயிருடன் தமிழ் பயிரையும், பக்தி பயிரையும் சேர்த்தே வளர்த்து வந்திருக்கிறது. இந்தப் பகுதிக்கு புகழ் சேர்த்த சிவாலயங்கள், வைணவத் திருப்பதிகள் பல. அவற்றுள் மேற்கூறப்பட்ட நவதிருப்பதிகள் நவக்கிரக பரிகார தலங்களாக அறியப்படுகின்றன. இதேபோல் சிவபெருமானுக்காகவே தனியாக அமைந்துள்ள ஒன்பது திருத்தலங்கள் பொருநை ஆற்றின் இருகரைகளிலும் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ளன. அவற்றுக்கு நவகைலாயங்கள் என்று பெயர். இந்த நவகைலாயங்களில் குடியிருக்கும் சிவபெருமான் அந்தந்த கிரகமாக இருந்து அருள்பாலிக்கிறார் என்பது மக்களின் துணிபு. நவகைலாயங்கள்: 1. பாபநாசம், 2. சேரன்மகாதேவி, 3. கோடகநல்லூர், 4. குன்னத்தூர், 5. முரப்பநாடு, 6. ஸ்ரீவைகுண்டம், 7. தென்திருப்பேரை, 8. ராஜபதி (மணத்தி), 9. சேர்ந்த பூமங்கலம். இந்த 9 இடங்களும் அகத்தியர் தனது சீடர் உரோமச முனிவர் சிவபெருமான் கடாட்சம் பெற்று முக்தி பெற சிவலிங்கத்தை வைத்து வழிபட இடங்களைத் தெரிந்து கொள்ள ஆற்றில் சங்கு முகத்தை நோக்கி விடப்பட்ட ஒன்பது மலர்கள் ஒதுங்கிய இடங்களாகும்.

80. ஸ்ரீவைகுண்டம்

பெருமாள்	:	**கள்ளர்பிரான் (வைகுந்தநாதன்)**
தாயார்	:	வைகுந்தவல்லி, கள்ளர்பிரான் நாச்சியார்
விமானம்	:	சந்திர விமானம்
தீர்த்தம்	:	தாமிரபரணி, ப்ருகுதீர்த்தம், கலச தீர்த்தம்
ப்ரத்யக்ஷம்	:	பிரம்மன், இந்திரன், ப்ருகு சக்ரவர்த்தி, நம்மாழ்வார்
இருப்பிடம்	:	திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் வழியில் 29 கி.மீ. தொலைவில் உள்ளது.

வரலாறு : ஆதிசேஷன் குடைபிடிக்க பெருமாள் நின்ற திருக்கோலத்தில் இருப்பது தனிச்சிறப்பு. காலதூஷகன் என்ற திருடன் தான் திருடிய பொருளில் பாதி வைகுண்டநாதனுக்கு கொடுத்தாகவும், ஒரு சமயம் அரண்மனையில் திருடுகையில் பிடிபட்டு, வைகுண்டநாதனை வேண்ட பகவான் திருடன் வேடம் பூண்டு, அரசனுக்கு தத்துவங்களை உபதேசித்து காலதூஷன் திருடன் அல்ல, யோகி என்று அரசன் நினைக்க பகவான் திருடனுக்கும், அரசனுக்கும் நட்புண்டாக்கி அரசனின் வேண்டுக்கோளுக்கிணங்க கள்ளர் பிரான் என்ற நாமம்

Koviloor Digital Library

பெற்றார். இங்கு பிரம்மா தவம் செய்து இழந்த சிருஷ்டி ஞானத்தைப் பெற்றதாக வரலாறு.

சிறப்பு : கள்ளர்பிரானுக்கு தினசரி முதலில் பாலாபிஷேகம் நடைபெறும். தினசரி அபிஷேகம் பிற வைணவ ஆலயங்களில் காண முடியாது. பாலாபிஷேகம் விரும்புவதால் இவரைப் பால்பாண்டியன் என அழைப்பர்.

81. வரகுணமங்கை (நத்தம்)

பெருமாள்	:	**விஜயாஸனப் பெருமாள்** வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**வரகுணவல்லித்தாயார், வரகுணமங்கைத்தாயார்**
விமானம்	:	விஜயகோடி, விமானம்
தீர்த்தம்	:	தேவபுஷ்கரிணி, அக்னி தீர்த்தம்
ப்ரத்யக்ஷம்	:	அக்னி பகவான், ரோமச முனிவர் சத்யவானுக்கு ப்ரத்யஷம்
இருப்பிடம்	:	ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 1 1/2 மைல் தூரத்தில் உள்ள ஒரு குக்கிராமம் நத்தம் என்று பெயர்.

வரலாறு : வேதவித் என்ற பிராமணன் இத்தலத்தில் விஷ்ணுவைக் குறித்துத் தவமிருந்து, பகவான் தோன்றியபோது அவன் பிரார்த்தித்தபடி "விஜயாசனர்" என்ற நாமம் பகவானுக்கு ஏற்பட்டதாக ஐதீகம்.

ஸ்ரீவைகுண்டத்தில் நின்ற பெருமாளுக்கு குடைபிடித்த ஆதிசேஷன் இங்கு அமர்ந்த பெருமாளுக்கு குடை பிடித்துள்ளார். நம்மாழ்வாரால் மட்டும் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

82. திருப்புளியங்குடி

பெருமாள்	:	**காய்சினவேந்தன் (காசினிவேன்தன்)** புஜங்க சயனம், கிழக்கு நோக்கிய திருக்கோலம்.
தாயார்	:	**மலர்மகள் நாச்சியார், பூமகள் நாச்சியார், புளியங்குடிவல்லி**
விமானம்	:	வேதசார விமானம் (ச்ருதிஸாரசேகரபிமானம்)
தீர்த்தம்	:	இந்திர தீர்த்தம், நிர்ருதி தீர்த்தம்
ப்ரத்யக்ஷம்	:	வருணனுக்கும், நரனுக்கும் தர்மராஜாவுக்கும் ப்ரத்யக்ஷம்
இருப்பிடம்	:	நத்தத்திலிருந்து முக்கால் மைல் தூரம் கிழக்கே வந்தால் இத்திருத்தலம் இருக்கிறது.

வரலாறு : பெருமாள் திருவயிற்றிலிருந்து தாமரைக்கொடி தனியாகக் கிளம்பிச் சென்று சுவற்றிலுள்ள பிரம்மாவின் தாமரை மலருடன் சேர்ந்து கொள்கிறது. பாதங்களை வெளிப்பிரகாரங்களிலிருந்து ஒரு ஜன்னல் வழியாகப் பார்க்க வேண்டும். உள்ளேயே ஊன்றிப் பார்த்தால் ஒரு பாதம் சேவையாகிறது. இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஷம் விடுபட்ட தலம். வசிஷ்ட புத்திரர்களால்

Koviloor Digital Library

ராக்ஷஸனாக சபிக்கப்பட்ட யக்ஞசர்மா என்ற பிராமணன் பகவானை வழிபட்டு சாபவிமோசனம் ஆனதாக ஸ்தல வரலாறு கூறும்.

83. பெருங்குளம் (திருக்குளந்தை)

பெருமாள் : **மாயக்கூத்தன்**
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **குளந்தைவல்லி, அலமேலுமங்கை**

விமானம் : ஆனந்தநிலையம்

தீர்த்தம் : பெருங்குளம்

ப்ரத்யக்ஷம் : பிரகஸ்பதி, வேதசாரனுக்கு ப்ரத்யஷம்

இருப்பிடம் : திருப்புளியங்குடியிலிருந்து அதே சாலையில் 6 மைல் தொலைவில் உள்ளது.

வரலாறு : கருடனும் உற்சவராகப் பெருமாள் பக்கத்தில் எழுந்தருளியிருக்கிறார். வேதசாரன் என்ற அந்தணனுக்கு கமலாவதி என்ற ஒரு கன்னிகை பிறந்து அவள் கடவுளையே கணவனாக அடைய தவம் புரிந்து, மகாவிஷ்ணு நேரில் தோன்றி தம் கௌஸ்துவ மணியுடன் அவளைச் சேர்த்து ஆலிங்கனம் செய்து திருமணம் செய்து கொண்டதாகவும், "பாலிகை வனம்" என்ற பெயர் உடையதாக ஸ்தல வரலாறு. இத்தலத்தில் அச்மசாரன் என்ற அசுரனை காலை பிடித்து தரையில் அடித்து அவன் மேல் நின்று நாட்டியம் ஆடினான். தேவர்கள் பிரார்த்தனைப்படி "மாயக்கூத்தன்" என்ற திருநாமம் பெற்றதாக வரலாறு.

84. இரட்டை திருப்பதி - 1

பெருமாள் : **ஸ்ரீனிவாசன்** (தேவர்பிரான்)
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **உபயநாச்சியார்கள்** (திருமார்புலட்சுமி)

விமானம் : குமுத விமானம்

தீர்த்தம் : தாமிரபரணி, வருண தீர்த்தம்

இருப்பிடம் : திருக்குளந்தையிலிருந்து, மங்கலகுறிச்சி வந்து, வடகால் என்ற வாய்க்காலில் இருந்து 2 மைல் தொலைவில் உள்ளது.

வரலாறு : அத்திரேய சுப்ரபர் என்கிற முனிவர் இத்தலத்தில் யாகசாலை அமைத்து ரித்விக்குகளுடன் யாகசாலையை சோதித்தபோது, மிகவும் பிரகாசித்த தராசையும், வில்லையும் கண்டார்கள். தராசு பெண்ணாகவும், வில் புருஷனாகவும் குபேர சாபத்திலிருந்து விடுபட்டதாகவும், இங்கே துலையும் (துலாக்கோல் - தராசு) தராசும், வில்லும் முக்தி அடைந்தபடியால் "துலைவில்லிமங்கலம்" என்ற பெயர் வந்ததாக ஸ்தல வரலாறு.

இரட்டை திருப்பதி நவதிருப்பதிகளில் இரண்டு திருப்பதியாக கருதப்படுகிறது.

இரட்டை திருப்பதி-2

பெருமாள் : அரவிந்தலோசனன் (செந்தாமரைக்கண்ணன்)

தாயார் : கருந்தடங்கண்ணி

விமானம் : குமுத விமானம்

தீர்த்தம் : அஸ்வனி, வருண தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : இந்திரன், வாயு, வருணன் ஆகியோர்களுக்கு ப்ரத்யஷம்

இருப்பிடம் : திருக்களந்தையிலிருந்து மங்கலகுறிச்சி வந்து வடகால் என்ற வாய்க்காலில் இருந்து 2 மைல் தொலைவில் உள்ளது.

வரலாறு : கங்கை நதிக்கரையில் வசித்து வந்த சத்தியசீலர் என்பவருக்கு வண்ணிசாரன், விபீதகன், சுவர்ணகேது என்னும் மூன்று புத்திரர்கள் இருந்தனர். விபீதகன் குஷ்ட நோயால் பாதிக்கப்பட்டு எவ்வித சிகிச்சையும் பலனளிக்காது துன்பற்று வந்தான். இவன் முற்பிறப்பில் தனது குருவின் பசுவைத் திருடினான். குருவின் சாபத்தால் குஷ்ட ரோகியானான். நாரதர் கூறியபடி விபீதகன் தாமிரபரணியின் வடகரையில் உள்ள அஷ்வினி தீர்த்தத்தில் நீராடி நோய் நீங்கப் பெற்றான். வெகுகாலம் இங்கு தங்கி இருந்து இரண்டு பெருமாளுக்கும் சேவை செய்து இறுதியில் மோட்சம் அடைந்தான்.

85. தென்திருப்பேரை

பெருமாள் : மகரநெடுங்குழைக்காதர்
நிகரில் முகில் வண்ணன் வீற்றிருந்த திருக்கோலம்,
கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : குழைக்காதவல்லி, திருப்பேரை நாச்சியார்

விமானம் : பத்ர விமானம்

தீர்த்தம் : சுக்ர புஷ்கரிணி, சங்க தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : சுக்ரனுக்கும், ஈசான்யருக்கும் ப்ரம்மாவுக்கும் ப்ரத்யஷம்

இருப்பிடம் : இரட்டை திருப்பதியிலிருந்து தாமிரபரணி நதியை கடந்து தென்கரைக்கு வந்தால் இத்தலத்திற்கு வரலாம்.

வரலாறு : பூதேவி துர்வாசர் உபதேசித்த அஷ்டாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டு தவம் இருந்து ஸ்ரீபேரை (லட்சுமியின் உடல்) என்னும் நாமத்தைத் தரித்து பங்குனி பூர்ணிமையில் தாமிரபரணி தீர்த்தத்தில் தர்ப்பணம் செய்ய முயன்றபோது மகரக்குழையான (மீன்போல் வடிவமுள்ள) இரண்டு குண்டலங்களைக் கண்டு பகவானுக்கு அணிவிக்க மகர நெடுங்குழைக்காதன் என்ற திருநாமம் பூண்டதாகவும், பூதேவி ஸ்ரீபேரை நாமத்தைத் தரித்ததனால் இத்தலத்திற்கு ஸ்ரீபேரை (திருப்பேரை) என்ற பெயர் ஏற்பட்டதாக ஸ்தல வரலாறு. இக்கோயிலில் மூலவருக்கு எதிரே கருடர் சன்னதி அமையவில்லை.

பங்குனி பூர்ணிமையில் பகவானுக்கு திருமஞ்சனம் செய்து, குருவை அவமானம் செய்த பாவத்திலிருந்து வருணன் விடுபட்டதாகவும், விதர்ப்ப

Koviloor Digital Library

தேசத்தில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் இங்கு பகவானை அவ்வூர் அரசன் வந்து வேண்ட அந்நாட்டில் மழை பெய்து பஞ்சம் நீங்கியதாக ஸ்தல வரலாறு.

86. திருக்கோளூர்

பெருமாள் : **நிக்ஷேபவித்தன்** (வைத்தமாநிதி)
புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : கோளூர் வல்லி நாச்சியார், குமுதவல்லி நாச்சியார்

விமானம் : ஸ்ரீகர விமானம்

தீர்த்தம் : குபேர தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : குபேரனுக்கு ப்ரத்யக்ஷம்

இருப்பிடம் : தென் திருப்பேரையிலிருந்து ஆழ்வார் திருநகரி வரும் வழியில் தெற்கு ஒரு கிளைப்பாதையில் இத்தலம் உள்ளது.

வரலாறு : பார்வதியின் சாபப்படி குபேரனை விட்டுப் பிரிந்த நவநிதிகள் பகவானை நாதனாக அடைய தவம் செய்து, நவநிதிகளின் வேண்டுதல்படி, நிஷேபவித்தன் (வைத்தமாநிதி) என்ற திருநாமம் பூண்டு நிதிகளைக் காத்து வருவதாக வரலாறு. குபேரனுக்கு சாபவிமோசனமான தலம். அதாவது அதர்மம் தர்மத்தோடு சமர் செய்து தோற்று ஓடி விட்டதால், "அதர்மபிசுனம்" என்ற பெயரும் உண்டு என்பது ஸ்தல வரலாறு. மதுரகவி ஆழ்வார் அவதார ஸ்தலம். குபேரனும் தர்மகுப்தனும் இழந்த செல்வத்தை பெற்றதால் இழந்த பொருளை மீட்டுத்தரும் சக்தி வாய்ந்த திருத்தலமாக கருதப்படுகிறது.

87. திருக்குருகூர் (ஆழ்வார்திருநகரி)

பெருமாள் : **ஆதிநாதன்**, ஆதிப்பிரான் பொலிந்து நின்ற பிரான்
கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்

தாயார் : **ஆதிநாதவல்லி**, குருகூர்வல்லி
(இரண்டு நாச்சியார்களுக்கும் தனித்தனி கோவில்கள்)

விமானம் : கோவிந்த விமானம்,

தீர்த்தம் : தாமிரபரணி தீர்த்தம், பிரம்ம தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : பிரம்மா, நம்மாழ்வார், சங்கன் சாந்தன் ரிஷிகள்,
மதுரகவியாழ்வாருக்கு ப்ரத்யஷம்

இருப்பிடம் : திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் வழி

வரலாறு : மாதா பிதாக்களை உபசரிக்காததால் ஏற்பட்ட சாபம் நீங்க, இந்திரன் ஆதிநாதனை வழிபட்டு சாப விமோசனம் பெற்றதாகவும், லெட்சுமணன் புளியமரமாக ஆவீர் பவித்ததாகவும், பகவான் பிரம்மச்சரிய யோகத்தில் இருப்பதால் லெட்சுமியை மகிழமாலையாக மார்பில் தரித்து சேவை சாதிப்பாக ஸ்தல வரலாறு கூறுகிறது. புளியமரம் (உறங்காபுளி) கோவிலின் தல விருட்சம். மரத்தின் இலைகள் இரவில் மூடிக் கொள்வதில்லை. இது நம்மாழ்வார் அவதரித்த ஸ்தலம்.

Koviloor Digital Library

எந்தெந்த ஸ்தலம் பெருமாள் என்ன கிரஹமாக அருள் பாலிக்கிறார் என்ற விபரம்

Sl. No. வ.எண்.	Name of Temple ஸ்தலப் பெயர்	Giraham கிரகம்	Moolavar மூலவர்
1.	Srivaikundam ஸ்ரீவைகுண்டம்	Suriyan சூரியன்	Vaikundanathan வைகுண்டநாதன்
2.	Sri Varagunamangai ஸ்ரீவரகுணமங்கை	Chandran சந்திரன்	Vijayasanar (Paramapathanathan) விஜயாஸனர் (பரமபதநாதன்)
3.	Thirupuliangudi திருப்புளியங்குடி	Budan புதன்	Boomibalagar பூமிபாலகர்
4.	Thirukulanthal (Perungulam) திருக்குழந்தை (பெருங்குளம்)	Sani சனி	Venkatavanan வேங்கடவாணன்
5.	Irattai Thirupathi -1 இரட்டை திருப்பதி - 1	Ragu ராகு	Srinivasan ஸ்ரீனிவாசன்
6.	Irattai Thirupathi -2 இரட்டை திருப்பதி - 2	Kethu கேது	Aravinthalosanar அரவிந்தலோசனர்
7.	Thenthiruperai தென்திருப்பேரை	Sukkiran சுக்கிரன்	Maharanedunkulaikathar மகரநெடுங்குழைக்காதர்
8.	Thirukoloor திருக்கோளூர்	Chevvai செவ்வாய்	Vaithamanithi வைத்தமாநிதி
9.	Alwar Thirunagari ஆழ்வார் திருநகரி	Viyazhan வியாழன்	Athinathan ஆதிநாதன்

Sl. No. வ. எண்.	Ursavar உற்சவர்	Thayar தாயார்
1.	Kallarpiran கள்ளர்பிரான்	Vaikundanathanayagi, Soranathanayagi வைகுண்டநாதநாயகி, சோரநாதநாயகி
2.	Emmidar, Kadivan எம்இடர், கடிவான்	Varagunamangai, Varagunavalli வரகுணமங்கை, வரகுணவல்லி
3.	Kaichinaventhan காய்சினவேந்தன்	Nilamaghal, Malarmaghai, Pulingudivalli நிலமகள், மலர்மகள், புளிங்குடிவல்லி
4.	Mayakoothar மாயகூத்தர்	Kamalavathithayar, Kulantahivallithayar கமலாவதித்தாயார், குழந்தைவல்லித்தாயார்
5.	Devarpiran தேவர்பிரான்	Alamelumangai, Padmavathi அலமேலுமங்கை, பத்மாவதி
6.	Chenthamarai Kannan செந்தாமரைக்கண்ணன்	Karunthadankanni கருந்தடங்கண்ணி
7.	Niharimukivannan நிகரில்முகில்வண்ணன்	Kulaikathuvalli, Thiruperainachiar குழைக்காதுவல்லி, திருப்பேரைநாச்சியார்
8.	Nichopavithan நிச்சோகவித்தன்	Kumuthavalli, Kollorvalli குமுதவல்லி, கோளூர்வல்லி
9.	Polinthunintrapiran பொலிந்துநின்ற பிரான்	Athinathanayagi, Thirugurukornayagi ஆதிநாதநாயகி, திருகுகூர்நாயகி

Koviloor Digital Library

பாண்டிநாட்டு நவதிருப்பதி நவக்கிரக ஸ்தலங்கள்

நவதிருப்பதிகள் என்றழைக்கப்படும் ஒன்பது வைணவ சேத்திரங்களும், நவக்கிரகங்களுடன் தொடர்புடையவை என கருதி வழிபடப்பட்டு வருகிறது. ஒன்பது திருப்பதிகளிலும் உள்ள பெருமாளே நவக்கிரகங்களாக கருதப்பட்டு வழிபடப்படுகிறது. எனவே சேவார்த்திகள் அவரவர்க்கு உள்ள கிரக தோஷங்கள் நீங்க நவதிருப்பதி வந்து வணங்கி வழிபட்டு கிரக தோஷம் நீங்கி நல்வாழ்வு வாழ வேண்டுகிறோம்.

நவதிருப்பதி ஆலயங்களின் நடைதிறப்பு நேரத்தை கருத்தில் கொண்டு ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து காலை 7-30 மணிக்கு தொடங்கி ஆழ்வார்திருநகரி, திருக்கோளூர், தென்திருப்பேரை, பெருங்குளம், இரட்டைத்திருப்பதி, திருப்புளியங்குடி நத்தம் என்ற முறையில் சேவித்து பயனடையலாம்.

நவகைலாயம்

1. பாவநாசம்

திங்கள் முடிசூடுமலை
தென்றல் விளையாடு மலை,
தங்கு முகில் சூடுமலை
தமிழ் முனியன் வாழு மலை

என்று புகழ்ந்து பாடப்பெற்ற தமிழ் மலையாம் பொதிகைமலை அடிவாரத்தில் அமைந்துள்ள திருத்தலம். இந்தப்பழம்பதி விக்கிரமசிங்கபுரத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இதை யோக பீடமாக மக்கள் கருதுகின்றனர்.

லிங்கம் : வயிராசலிங்கம் – ரிக், யஜுர், சாம வேதங்கள் மூன்று களா மரங்களாக நின்றதாலும், அதர்வணவேதம் வாயுவாக சுவாமியை வலம் வந்ததாலும்

மூர்த்தி : முக்களாமூர்த்தி என்று பெயர் பெற்றது.
பழமறைநாதர் என்ற பெயரும் உண்டு.

இங்கு இறைவன் சூரிய கிரகமாக வீற்றிருக்கிறார். அவருக்கு பாவநாசர் என்ற பெயர்.

அம்பாள் : உலகாம்பிகை

தலவிருட்சம் : முக்களா மரம்

பலிபீடம், நந்தி, கொடிமரம் ஆகியவை உள்ளன.

நெல்லைக்கு மேற்கே முக்கூடல் வழி சேரன் மகாதேவி வழியாக 45 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இந்த கைலாயம் சூரிய பரிஹாரத்தலம்.

Koviloor Digital Library

2. சேரன் மகாதேவி

சேர்மாதேவி என்று வழக்கத்தில் உள்ள இவ்வூர் திருநெல்வேலி-செங்கோட்டை செல்லும் வழியில் நெல்லைக்கும்-அம்பாசமுத்திரத்திற்கும் நடுவில் உள்ளது. ரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் இந்தக் கைலாயம் அமைந்துள்ளது. இங்கு சிவபெருமான் சந்திர கிரகமாக எழுந்தருளியிருக்கிறார்.

இறைவன் பெயர் : அம்மநாதர் சுவாமி என்ற கைலாயநாதர்

அம்பாள் : ஆவுடைநாயகி

தல விருட்சம் : ஆலமரம்

வடக்குப்பக்கம் அம்மைநாதர் திருவாயில், தெற்குப்பகுதி ஆவுடையம்மாள் திருவாயில், யாச முனிவருக்கு அருள்பாலித்த யாச தீர்த்தம் இந்தக் கோயிலுக்கு அருகில் உள்ளது. கோயிலுக்கும் யாச தீர்த்தத்துக்கும் நடுவில் ஒரு பாறை உள்ளது. அதற்கு ரணவிமோசனம் பாறை என்று பெயர். இந்தத் தீர்த்தத்தில் நாற்பத்தோரு நாட்கள் தொடர்ந்து நீராடினால் எல்லாவித நோய்களும் தீருமாம்.

விசேடங்கள் : ஐப்பசி மாதத்தில் திருக்கல்யாண உற்சவம் மற்றும் திருவாதிரைத் திருநாளும் சிவராத்திரி விழாவும் சிறப்பானதாகும். இது சந்திர கிரக பரிகாரத்தலம்.

3. கோடகநல்லூர்

இந்த ஊர் சேரன் மகாதேவி முக்கூடல் செல்லும் சாலையில் உள்ள நடுக்கநல்லூர் என்னும் ஊரிலிருந்து தெற்கே ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. பரீட்சித்து மன்னரையும், நளனையும் தீண்டிய கார்கோடக பாம்புக்கு மகாவிஷ்ணு முக்தியளித்த தலம் இது என்பதால் கார்கோடக நல்லூர், கார்கோடக க்ஷேத்திரம் என்றும் பெயர்கள் உண்டு. நாளடைவில் மருவி கோடகநல்லூர் என்றாயிற்று என்கின்றனர். மூன்றாவது கைலாயமான இங்கு சிவபெருமான் செவ்வாய் வடிவில் அருள்பாலிக்கிறார்.

சுவாமியின் பெயர் : ஸ்ரீகைலாசநாதர்

அம்பாளின் பெயர் : சிவகாமி அம்மன்

சுவாமி கிழக்கு நோக்கியும், அம்பாள் தெற்கு நோக்கியும் அருள்பாலிக்கின்றனர். கோவிலில் கோபுரமோ, கொடிமரமோ இல்லை. இது செவ்வாய் கிரக பரிகார கைலாயம்.

4. குன்னத்தூர்

இங்கு ராகு பகவான் வடிவாக கீழத்திருவேங்கடபுரத்தில் எழுந்தருளியிருக்கிறார் சிவபெருமான். இது நாலாவது (நவ) கைலாயம்.

இறைவனின் பெயர் : கோதைபரமேஸ்வரர்

அம்பாளின் பெயர் : சுந்தரி

சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. பொருநை ஆறும் பச்சையாறும் இங்கு சங்கமிக்கின்றன. ஆகவே இத்தலம் சங்காணி எனவும் பெயர் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

திருநெல்வேலி நகருக்கு சுமார் நான்கு கிலோமீட்டர் தூரத்தில் பொருநை ஆற்றின் வடகரையில் ஆற்றிலிருந்து சுமார் இருநூறு மீட்டர் தொலைவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது இந்தக் கைலாயம்.

முதலாம் மண்டபத்தில் அம்பாளும், இரண்டாம் மண்டபத்தில் காசி விஸ்வநாதர் நடராஜர் ஆகியோரும் உள்ளனர். மூன்றாம் மண்டபம் சிறியது. கருவறையே நான்காம் மண்டபம். இங்குதான் லிங்கவடிவில் கோதை பரமேஸ்வரர் எழுந்தருளியுள்ளார். இது ராகு பரிகார ஸ்தலம்.

5. முரப்பநாடு

இது நவகைலாயத்தில் 5வது கைலாயம். இங்கு சிவபெருமான் குருபகவான் வடிவில் கைலாசநாதர் என்ற திருப்பெயரில் அருள்புரிகிறார். இது பாளையங்கோட்டை - தூத்துக்குடி சாலையில் சுமார் பதினெட்டு கிலோமீட்டர் தொலைவில் அமையப்பெற்றுள்ளது.

சிறப்பு : இந்தப் பகுதியில் தாமிரபரணி ஆறு (காசியில் கங்கை நதி, வடக்கிலிருந்து தெற்குநோக்கி பாய்வதுபோல்) வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்கிறது. அதனால் இங்கு பொருநை நதியைத் தக்ஷிணகங்கை என்றும், அதில் இங்கு நீராடுவது கங்கையில் நீராடுவதற்கு சமம் என்று மக்கள் நம்புகிறார்கள். ஆற்றின் மேற்கு கரையில் கோயில் உள்ளது. கிழக்கில் ஆற்றுக்குள் ஒரே கல்லில் பத்து உருவங்கள் பொறிக்கப்பட்ட சிலைகள் தசாவதாரக் கட்டம் என்று சொல்லப்படுகிறது. இங்கு காசிக் கட்டமும் சவரி தீர்த்தமும் உள்ளது. குரு பரிகார கைலாசம்.

6. திருவைகுண்டம்

தாமிரபரணி ஆற்றின் வடகரையில் இத்தலம் உள்ளது. இது நவதிருப்பதிகளிலும் ஒன்று. ஆகவே குமரகுருபரர் இத்தலத்தை தென்வைகுந்தக்கயிலை என்று சிறப்பித்துக் கூறுகிறார். நவதிருப்பதிநாயகரின் பெயர் வைகுண்டபதி சூரிய வடிவாக அருள்புரிகின்றார். அதேசமயம் நவகைலாயப்பிரானின் பெயர் கைலாசநாதர்.

சனிபகவான் இங்கு கைலாச நாதராக அருள்புரிகிறார். அம்பாளின் பெயர் சிவகாமி அம்மன். சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. கைலாசநாதர் சுயம்புலிங்கம்.

இங்கு கைலாச நாதர், சிவகாமி அம்மை, விஸ்வநாதர், விசாலாட்சி அம்பிகை ஆகியோரின் கருவறைகளில் அழகான விமானங்கள் உள்ளன.

கோயில் சந்தன சபாபதி மண்டபத்தில் யாளித் தூண்கள் உள்ளன. யாளியின் வாயில் உருளும் உருண்டை கற்கள் உள்ளன. திருநெல்வேலி, திருச்செந்தூர் சாலையில் 30 கி.மீ. தூரத்தில் உள்ளது.

Koviloor Digital Library

7. தென்திருப்பேரை

இந்த ஊரும் நவதிருப்பதி வரிசையில் வருகிறபடியால் இது பூலோக கயிலாயமும், பூலோக வைகுந்தமுமாகும்.

புதன் பகவானின் வடிவமாக எழுந்தருளியிருக்கும் சுவாமியின் திருப்பெயர் கைலாசநாதர். அம்பாளின் பெயர் சிவகாமி அம்மன் எனும் பொன்னம்மாள், கைலாசநாதர் லிங்கவடிவில் தாமரை மலரில் காட்சியளிக்கிறார். இத்தலத்தில் மகாவிஷ்ணு மகரநெடுங்குழைகாதர் சுக்கிர மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.

இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு கதை

ஒரு முறை இந்த கோவிலுக்கு வந்த அந்தக் காலத்து ஆங்கிலேய கலெக்டர் கோயில் தென்னை மரத்திலிருந்து இளநீர் பறித்து கொண்டு வர உத்தரவிட்டாராம். "சிவன் சொத்து குல நாசம்". ஆகவே பறிக்கக்கூடாது என்று ஊர் மக்கள் கூறினார்களாம். அதற்கு அவர் கோயில் இளநீருக்கு கொம்பா முளைத்திருக்கிறது, சும்மா பறித்துக் கொண்டு வா என்று சேவகனுக்குக் கட்டளை இட்டாராம். அவனும் அவ்வாறே பறித்துப் போட, இதை எடுத்துப்பார்த்த "கலெக்டர்" அந்த இளநீரில் மூன்று கொம்புகள் இருப்பதை பார்த்துப் பதறி கோயிலுக்குள் சென்று இறைவனிடம் மன்னிப்புக் கேட்டாராம். பொதுமக்கள் தொட்டுப்பார்க்க இரண்டு கொம்புகள் ஒடிந்து விழுந்துவிட இப்போது ஒரு கொம்பு மட்டுமே உள்ளது. அந்த ஒற்றைக்கொம்பு தேங்காய் இன்றும் அம்பாள் சந்நிதி முன் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கிறது. என்னே ஈசன் செயல்.

புதன் பகவான் பரிகார கைலாயம் திருநெல்வேலி-திருச்செந்தூர் சாலையில் ஆழ்வார் திருநகரியிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ளது.

8. ராஜபதி

இப்போது காணமுடியாத திருத்தலம் இது. அந்தக் கோயில் இருந்த இடத்தில் இப்போது எஞ்சியுள்ளது ஒரு கல் மட்டும்தான். தென்திருப்பேரை அருகில் மணத்தி என்ற கிராமத்திலிருந்து வடக்கில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் ராஜபதி உள்ளது. வெள்ளத்தால் அங்கிருந்த கோயில் அழிந்து விட்டதாகக் கூறப்படுகிறது. இங்கு **கேது பகவான்** கைலாசநாதர் வடிவில் அருள்புரிந்ததாகக் கூறப்படுகிறது. அம்பாள் பெயர் **பொன்னம்மை அம்மன்** என்று சொல்லப்படுகிறது.

தென்திருப்பேரை வருவாய் கிராமத்தின் எல்லைக்கு அருகில் உள்ள மணத்தி கிராமத்தில் குட்டித்தோட்டம் உடைமரக்காட்டில் இடிபாடான கோவில், தென்திருப்பேரை கைலாசநாதரின் கோவிலில் மறுபதிப்புபோல இருப்பதால் இதுவே எட்டாவது கைலாயம் என ஒரு சிலர் கருதுகின்றனர்.

எனினும் ராஜபதியில் மிஞ்சியுள்ள கல்லையே எட்டாவது கைலாயமாக பலரும் தொழுது வருகின்றனர். **கேது பரிகார கைலாயம்.**

Koviloor Digital Library

9. சேர்ந்த பூமங்கலம்

திருச்செந்தூரிலிருந்து வடக்கில் சுமார் பன்னிரெண்டு கி.மீ. தூரத்தில் ஆத்தூர் புன்னக்காயல் சாலையில் உள்ளது. அகத்தியர் தனது சீடர் உரோமச முனிவருக்காகத் தாமிரபரணி ஆற்றில் விட்ட ஒன்பதாவது மலர் சேர்ந்த இடமாததால் இதற்கு சேர்ந்த பூமங்கலம் என்ற பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள்.

நவக்கிரகங்களில் ஒன்றான சுக்கிர பகவான் இங்கே கைலாச நாதர் வடிவில் காட்சியளிக்கிறார். சுவாமி பெயர் கைலாச நாதர், அம்மன் பெயர் சௌந்தரநாயகி. கோயிலுக்கு கோபுரம் கிடையாது. ஆனால் கொடிமரமுண்டு.

★★★★

நவகைலாயங்களுக்குச் சென்று வழிபட்டால் நவக்கிரக தலங்களுக்கு சென்று வழிபட்ட பலன் உண்டு. வாழ்வில் வளமும் புகழும் பெற்று வாழலாம்.

ஓம் நமசிவாய

சிவாய நம ஓம்

★★★★

ஸ்ரீஅனந்தபத்மநாப சுவாமி

Koviloor Digital Library

88. ஸ்ரீவில்லிபுத்தூர்

பெருமாள் : வடபத்ர சயனார் - ரங்கமன்னார்
வடபத்ர சயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : ஆண்டாள் - கோதை நாச்சியார்

விமானம் : ஸம்சன விமானம் (ஸௌம்ய விமானம்)

தீர்த்தம் : திருமுக்குள தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : மண்டூக மஹரிஷி, பெரியாழ்வார்

மங்களாசாசனம் : பெரியாழ்வார், ஆண்டாள் (2 பாசுரங்கள்)

பெரியாழ்வார் - ஆண்டாள் அவதாரத்தலம்.

மதுரையிலிருந்து ராஜபாளையம் - தென்காசி செல்லும் வழித்தடத்தில் 87 கி.மீ.ல் உள்ள ஸ்தலம். தென்காசி விருதுநகர் ரயில் பாதையில் உள்ள ரயில் நிலையம் அருகில் திருவண்ணாமலை மலைமீது ஸ்ரீனிவாசர் கோயில். இத்தலம் விருதுநகர் மாவட்டத்தில் உள்ளது. பெருமாளுடன் கருடனும் சேர்ந்து நிற்பது தனிச்சிறப்பு. கண்ணப்பன் ருசித்த உணவு உகந்ததே என்று கூறிய காளத்திநாதனைப்போல ஆண்டாள் சூடிக் கொடுத்த பூமாலையை விரும்பி ஏற்ற பெருமாள் ஆண்டாளின் ஆசைப்படி அவளை மணந்தவர். ஸ்ரீரங்கம்போல இங்கும் அரையர்சேவை உண்டு. ரங்க மன்னாருக்கு வலதுபுறம் ஆண்டாளும் இடதுபுறம் கருடாழ்வாரும் உள்ளனர். இது இத்தலத்தின் சிறப்பு. இத்தலத்திற்கு புதுவை மல்லிநாடு, புத்தூர், சண்பகாரண்யம் வராக க்ஷேத்திரம் என்னும் பெயர்கள் உள்ளன. கர்ப்பக்கிரஹத்தில் விமலாக்ருதி விமானத்தின்கீழ் வடவிருட்சத்தின் அடியில் அரவணைப்பள்ளியில் சீதேவி, பூதேவியோடு பெருமாள் சயனத்திருக்கோலத்தில் காட்சி தருகிறார். ஆடிப்பூரத் தேர்த் திருவிழா தனிச் சிறப்புடையது.

89. திருத்தண்கால் (திருத்தங்கல்)

பெருமாள் : நின்ற நாராயணர்
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உற்சவர் : திருத்தண்கால், அப்பன் நின்ற திருக்கோலம்

தாயார் : செங்கமலத்தாயார், அன்னநாயகி - அநந்த நாயகி, அம்ருத நாயகி, ஜாம்பவதி என்னும் நால்வர் நாச்சிமார்கள்

விமானம் : தேவசந்திர விமானம்,

தீர்த்தம் : பாபவிநாச தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : சல்ய பாண்ட்ய மஹாராஜா, ஸ்ரீவல்லபன், புலி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார் (5 பாசுரங்கள்)

சிவகாசியிலிருந்து விருதுநகர் செல்லும் மார்க்கத்தில் சிவகாசியிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. நகரப்பேருந்து வசதியும் உள்ளது. விருதுநகர் - தென்காசி இரயில் மார்க்கத்தில் திருத்தண்கால் ஒரு ரயில் நிலையம்.

Koviloor Digital Library

செங்கமலத்தாயார் தனிக்கோயில். நாச்சியார் கோயில் குன்றின்மேல் உள்ளது. நின்ற நாராயணன் ஸந்நிதியில் வலதுபுறம் ஸ்ரீதேவி (அன்னநாயகி) நீளாதேவி (அனந்தநாயகி) இடதுபுறம் பூதேவி (அம்ருதநாயகி) ஜாம்பவதி உள்ளனர். எல்லாத் திருமேனிகளும் வர்ணம் பூசப்பெற்ற ஸுதையால் ஆனவை. எனவே திருமஞ்சனம் கிடையாது. கீழே கிடந்த திருக்கோலப் பெருமாளும் அப்படியே. செங்கமலவல்லித் தாயாருக்கு மட்டும் நித்தம் எண்ணைக்காப்பு திருமஞ்சனம் உண்டு. இங்கு கருடாழ்வார் ஒரு கையில் அமுத கலசமும், மறுகையில் நாகத்தையும் தாங்குவது இங்கு மட்டுமே உள்ளது. முருகன் இங்கு தங்கியதால் திருத்தங்கல் என்ற பெயர் ஏற்பட்டதாக கூறுகிறார்கள். இங்கு தாயாருக்கு (9 கெஜம்) புடவை சாத்தினால் கன்னிகைகளுக்கு திருமணப்பிராப்தி ஆவதாக நம்பிக்கை. இது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில்.

90. திருக்கூடல் (தென் மதுரை)

பெருமாள்	:	**கூடலழகர்** ஆதிகேஷன் கீழே வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**மதுரவல்லி** - மரகதவல்லி, வரகுணவல்லி
விமானம்	:	அஷ்டாங்க விமானம்
தீர்த்தம்	:	ஹேம புஷ்கரிணி, சக்ர தீர்த்தம், வைகை நதி
ப்ரத்யக்ஷம்	:	ப்ருகு மஹரிஷி, சௌனகாதிகள், பெரியாழ்வார்கள்
மங்களாசாசனம்	:	திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் (2 பாசுரங்கள்) பெரியாழ்வார் பல்லாண்டு பாடிய தலம். தலமரம் : கடம்பமரம்.

மதுரை மாநகரிலேயே மையப்பகுதியில் மதுரை இரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கில் 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. தொன்மை முதலே நவக்கிரஹங்கள் சந்நிதியுடைய விஷ்ணு தலம். பக்தனுக்காக பகவான் குளத்தில் மீனாக மாறி அருளிய பதி. அதன் பிறகே பாண்டிய அரசருக்கு மீன் கொடி ஏற்பட்டது. மூன்று அடுக்கு விமானத்தில் முக்கோணத்தில் அருளும் பெருமாள் அடித்தளத்தில் வீற்றிருந்த கோலத்தில் வியூகசுந்தர்ராஜன் (2) முதல் மாடித்தளத்தில் ரங்கநாதர் புஜங்கசயனம். இரண்டாவது மாடியில் சூரிய நாராயணப் பெருமாள் நின்ற திருக்கோலம்.

இத்திருக்கோயில் பிரகாரத்தில் இருக்கும் சுவர்களில் 108 திவ்ய தேசத்து பெருமாள்களின் சித்திரங்கள் அந்தந்த திவ்யதேசத்தில் ஸேவை சாதிக்கும்படியே வரையப்பட்டிருப்பது ஒரு சிறப்பு.

Koviloor Digital Library

91. திருமாலிருஞ்சோலை அழகர் கோவில்

பெருமாள் : அழகர் - கள்ளழகர், மாலாங்காரர்
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.
பஞ்சாயுதங்களுடன் காட்சி

தாயார் : ஸுந்தரவல்லி நாச்சியார்

விமானம் : ஸோமஸுந்தர விமானம்

தீர்த்தம் : சிலம்பாறு எனப்படும் நூபுரகங்கை

தலவிருட்சம் : விருஷ்பசிரா - சந்தனவிருக்ஷம்

ப்ரத்யக்ஷம் : தர்மதேவதை, மலையத்வஜ பாண்டியன்

மங்களாசாசனம் : பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார் (128 பாசுரங்கள்)

மதுரையிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. அழகர்கோயில் என்று பிரசித்தம். மதுரையிலிருந்து பேருந்து வசதி உள்ளது. திருமாலிருஞ்சோலை, அழகர்கோவில், கள்ளழகர் சந்நிதி என்று வழங்கப் பெறும். மரம் செடி நீர் ஊற்றுக்கள் நிறைந்த அழகிய இயற்கைச் சூழல் நிரம்பிய மலையின் அடிவாரத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. இது இடபம் போலவும் சுற்றியுள்ள மலைகள் பசுக்கள் போலவும் காட்சியளிப்பதால் ரிஷபாத்திரி என்றும் வழங்கப்படுகிறது. உற்சவர் அழகர், சுந்தரராஜன், சோலைமலைக்கழகரசர் கள்ளழகர் பஞ்சாயுதங்களுடன் காட்சி தருகிறார். இவர் முழுவதும் தங்கத்தால் ஆனவர் என்று சொல்லப்படுகிறது.

இத்தலத்தில் ஆண்டாள் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார் மற்றும் விநாயகர், கருடன், ஆழ்வார்கள், சுதர்சனர், யோக நரசிம்மர், சரஸ்வதி, இராமர், கிருஷ்ணர் முதலானவர்களுக்கு சந்நிதிகள் உள்ளன.

பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய பண்டை தமிழ் நூல்கள் இதன் சிறப்பினைச் சாற்றுகின்றன.

இத்தலத்தில் துவாதசி ஸ்நானம் விசேடம். இடைக்காட சித்தர் மருத்துவத்தை வளர்த்த ஸ்தலம். சித்திரையில் பெருமாள் பல்லூருக்கு வருவது தமிழகத்து முக்கிய திருவிழாக்களில் ஒன்று. அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

18-ஆம் படி கருப்பு சுவாமி காவல் புரிவதால் பிரதான வாசல் திறக்கப்படுவதில்லை வடகிழக்கு வழியாக ஆலயம் செல்வதே வழக்கம். இங்கே க்ஷேத்ரபாலகர் ஒரு சந்நிதியில் இருக்கிறார். அர்ச்சகர்கள் கோவில் சாவியை இரவில் இவரிடம் ஒப்படைத்துப் போவதாக ஐதீகம். இத்தலத்தை தக்ஷிண திருப்பதி என்று அழைக்கின்றனர். ஒன்றே தெய்வம் என்ற கோட்பாட்டின்படி இத்தலத்தில் விபூதியே பிரசாதமாக வழங்கப்படுகிறது. தினமும் தவறாமல் எமதர்மன் நள்ளிரவில் இங்கு வந்து வழிபடுவதாக ஐதீகம்.

Koviloor Digital Library

92. திருமோகூர்

பெருமாள் : காளமேகப் பெருமாள்
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : மேகவல்லி - மோகூர்வல்லி

விமானம் : கேதகி விமானம் (வேதாமோத விமானம்)

தீர்த்தம் : க்ஷீராப்தி புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : ப்ரம்ஹா, இந்திரர்களுக்கு, அஜருத்ரர்

மங்களாசாசனம் : நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் (12 பாசுரங்கள்)

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் சாலையில் ஒத்தக்கடை நிறுத்தத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. மதுரையிலிருந்து திருவாதவூர் செல்லும் நகரப் பேருந்துகள் திருமோகூருக்குச் செல்கின்றன.

இத்தலத்தில் உள்ள பெருமாள் மச்சாவதாரத்தில் பாதாளத்திலிருந்து வேதங்களை மீட்டவர். அதனால் பிரமன் பெருமாளை நோக்கி திருஆராதனை கைங்கரியம் செய்து வருவதாக மரபு. அண்மை காலத்தில் இத்திருத்தலப் பெருமாளும், சக்கரத்தாழ்வாரும் சந்நிதியும் மிகப் பிரபலமாகி மதுரைக்கு அருகில் ஒரு "திருமணஞ்சேரி" என்ற பெயர் பெற்றுள்ளது. இது மோஹன அவதாரத்தலம். அசுரர்களால் கவரப்பட்ட அமுதத்தை மீட்டுத் தேவர்க்கு வழங்கிய மூர்த்தி இத்தலத்தில் உள்ள காளமேகப் பெருமாள் வலது கையில் வரதஹஸ்தத்துடனும் இடது கையில் கதையுடன் காட்சியளிக்கிறார்.

உத்ஸவர் : திருமோகூர் ஆப்தன் பஞ்சாயுதங்களுடன் காட்சியளிக்கிறார். பள்ளி கொண்ட பெருமாள் ஸந்நிதி ஒன்றும் உள்ளது. ஆதிகேசவனுக்கு தங்கக் கவசங்கள் தினமும் சாத்தப்படுகின்றன. சனிக்கிழமை விசேடமானது. ஆனி மாதம் சக்கரத்தாழ்வார் திருநட்சத்திரத்தில் இங்கு நடத்தப்படும் சுதர்ஸன வேள்வி காண்போரை களிப்படைய வைக்கிறது. பங்கு கொண்டோரை பவித்ரமாக்குகிறது. ஆறு முறையோ, ஆறின் மடங்குகளிலோ வலம் வந்தால் எண்ணிய எண்ணியாங்கு சட்டென்று எய்துவர். ஆகவே இவர் ஒரு வரப்பிரசாதி. மரணபயம் அறுத்தும் மனோவியாதியை சுழித்தும், கன்னியருக்கு மாலை கொடுத்தும், காளையருக்கு வேலை கொடுத்தும், மக்கட்பேறை மட்டிலாது அளித்தும், தொழிலில் ஏற்படும் தொய்வினை நீக்கியும் கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாக நரசிம்ம சுதர்சனப் பெருமாள் (சக்கரத்தாழ்வார்) அருளாட்சி நடத்தும் தெய்வத்திருத்தலம் இது என்றால் மிகையாகாது. அருகில் உள்ள மற்ற ஸ்தலங்கள் ஒத்தக்கடை நரசிம்ஹர் - மாணிக்கவாசகர் அவதரித்த திருவாதவூர் (திருமறைநாதர்)

தாள தாமரைத் தடமணி வயல் திருமோகூர்
நாளும் மேவி நன்கு அமர்ந்து நின்று அசுரைத் தகர்க்கும்
தோளும் நான்கு உடைசுரிகுழல் கமலக்கண் கனிவாய்க்
காளமேகத்தையன்றி மற்றும் ஒன்றிலம் கதியே.

- நம்மாழ்வார்

Koviloor Digital Library

93. திருக்கோஷ்டியூர்

பெருமாள்	:	உரகமெல்லணையான் - ஸௌம்யநாராயணன் புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	திருநாமமகள் நாச்சியார்
விமானம்	:	அஷ்டாங்க விமானம்
தீர்த்தம்	:	தேவ புஷ்கரிணி
ப்ரத்யக்ஷம்	:	கதம்ப மாமுனி
மங்களாசாசனம்	:	பெரியாழ்வார், கலியன், பூதத்தார், பேயார், திருமழிசை ஆழ்வார் (39 பாசுரங்கள்)

ராமானுஜர் இக்கோயிலின் கோபுரத்திலிருந்து த்வயமந்த்ரம் உபதேசித்ததால் திருமந்திரம் விளந்த ஸ்தலம் என்று சிறப்புடன் அழைக்கப்படுகிறது. திருக்கோஷ்டியூர் நம்பியின் அவதார ஸ்தலம்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் பெரம்பலூர்-மானாமதுரை மாவட்ட நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

விசேடங்கள் : தேவர்களும் முனிவர்களும் பெருமாளைச் சேவிக்க கோஷ்டியோடு வந்ததால் திருக்கோஷ்டியூர் என்று பெயர் பெற்றதாக ஐதீகம். இராமானுஜர் இவ்வூர் நம்பியிடம் குரு உபதேசம் பெற திருவரங்கத்திலிருந்து 17 முறை வந்து பயன் கிடைக்காமல் 18ம் முறையாக வந்தபோதுதான் உபதேசம் பெற்றார். கோவில் 4 மாடிகளாக அமைப்பு. நின்று, இருந்து, கிடந்து, நடந்து, கூத்தாடும் 5 நிலைகளில் தரிசனமளிக்கும் சிறந்த பதி.

1. தரைமட்டம்
   கீழ்த்தளம் : நடனகிருஷ்ணன்
2. தரைப்பகுதி : பெருமாள் உரகமெல்லணையான் சயன கோலம்
   உற்சவர் : சௌமியநாராயணன் சீதேவி, பூதேவியுடன் காட்சியளிக்கிறார்.
   2ம் தளம் : பெருமாள் உபேந்திர நாராயணப்பெருமாள் நின்ற திருக்கோலம், கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்
   3ம் தளம் : பரமபதநாதன் - சீதேவி-பூதேவியுடன் வீற்றிருந்த திருக்கோலம் - கிழக்கே திருமுக மண்டலம்.

பத்ரிகாசிரமத்தைப் போன்று சிறப்புடையாதலால் இதைத் தென் பத்ரி என்றும் வழங்குவர். இங்கு மகாமகக் கிணறு ஒரு சிறப்பு. இராமானுஜர் விமான மேல்மாடியிலிருந்து உலக மாந்தர் உய்ய நாராயண மந்திரத்தை ஊரறிய உரக்க கூறிய பெருமை வாய்ந்த திருத்தலம்.

Koviloor Digital Library

94. திருப்புல்லாணி (தர்ப்ப சயனம்)

பெருமாள் : ஆதிஜெகநாதன் - தெய்வச்சிலையார், பூதேவி, ஸ்ரீதேவியுடன் நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.
உற்சவர் : கல்யாண ஜகந்நாதன், வீற்றிருந்த திருக்கோலம்
தாயார் : கல்யாணிவல்லி - பத்மாவதி தாயார் - தனிச்சந்நிதி
விமானம் : கல்யாண விமானம்
தீர்த்தம் : ஹேம தீர்த்தம், சக்ர தீர்த்தம் - தலமரம், அரசமரம், அசுவத விருக்ஷம்
ப்ரத்யக்ஷம் : புல்லாரண்ய மஹரிஷி, அச்வந்த நாராயணன், ஸமுத்ரராஜன்
மங்களாசாசனம் : திருமங்கை ஆழ்வார் (21 பாசுரங்கள்)

இராமநாதபுரத்திலிருந்து தெற்கே 8 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருச்சி-மதுரை-காரைக்குடி போன்ற இடங்களிலிருந்து இராமநாதபுரத்திலிருந்து பேருந்து, இரயில் வசதி உள்ளது. தனி சந்நிதி : பெருமாள் - தர்ப்பசயன இராமர் வீரசயனக் கோலத்தில் பட்டாக்கத்தியுடன் புஷ்பகவிமானத்தின் கீழே பள்ளிக்கொண்டு எழுந்தருளியுள்ளார். உற்சவர் ஸ்ரீகோதண்டராமர் அருகில் சீதாப்பிராட்டியார் இலட்சுமணன் - விநயஆஞ்சநேயர். இங்கு ஸ்ரீபட்டாபிராமர் தனிமூலவராக தனிச்சந்நிதியில் சீதாப்பிராட்டி இலக்குவரோடு எழுந்தருளியுள்ளது ஒரு சிறப்பு. தருப்பைபுல்மீது இராமபிரான் பள்ளிகொண்டதால் இத்தலம் புல்லணை என்று பெயர் பெற்றது. இராமபிரான் பூசித்த தலமாதலால் பெரிய பெருமாள் தலம் என வழங்கப்படுகிறது. ஆதி சேது என்னும் தலம் இங்கிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. இங்கு தங்கி தேவிபட்டண கடலில் உள்ள நவபாசானத்தில் பீரிதி செய்தால் புத்திரப்பேறு அடையும் பாக்கியம் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இவ்வூரின் அருகில்தான் இராமேஸ்வரமும், புயலால் சேதமுற்ற தனுஷ்கோடியும் உள்ளன.

95. திருமெய்யம்

பெருமாள் : ஸத்யகிரிநாதன் - மெய்யப்பன் நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.
உற்சவர் : மெய்யப்பன்
தாயார் : உய்ய வந்த நாச்சியார் - உஜ்ஜீவனத் தாயார்
விமானம் : ஸத்யகிரி விமானம்
தீர்த்தம் : ஸத்ய தீர்த்தம், கதம்ப புஷ்கரிணி, தலமரம் : பலாமரம்
ப்ரத்யக்ஷம் : ஸத்ய தேவதைகள்
மங்களாசாசனம் : திருமங்கை ஆழ்வார் (9 பாசுரங்கள்)

இது ஒரு குடைவரைக் கோயில். புதுக்கோட்டையிலிருந்து காரைக்குடி செல்லும் வழியில் புதுக்கோட்டையிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சி - மானாமதுரை இரயில் மார்க்கத்தில் திருமயம் என்னும் ரயில் நிலையம் உள்ளது. அங்கிருந்து இந்தக் கோயில் சுமார் 1 கி.மீ. தூரத்தில் உள்ளது.

Koviloor Digital Library

இங்கு இரண்டு சந்நிதிகள் உள்ளன. இரண்டாவது சந்நிதியில் பெருமாள் மலையோடு சேர்ந்து அனந்த சயன மூர்த்தியாகப் பாறையிலேயே வடிக்கப்பட்டிருக்கிறார். பெருமாள் ஆதிசேடன்மீது சயனம் கொண்டு, கருடன், சித்திரகுப்தன், மார்க்கண்டேயன், பிரமன் தேவர்கள் முனிவர்கள், கின்னரர்கள் விளங்க மதுகைடபர் அசுரர்கள் காலடியில் பூமிதேவி திருமார்பில் சீதேவி விளங்க காட்சி தருகிறார். திருஅரங்கம் அரங்கநாதனைவிடப் பெரிய திருமேனியாகும். மற்றும் சக்கரத்தாழ்வார், ஆண்டாள், கிருஷ்ணர், லட்சுமி, நரசிம்மர் ஆகிய சந்நிதிகளும் உள்ளது. ஆதிசேஷன் இத்தலத்தைக் காத்துக் கொண்டிருப்பதாக ஐதீகம். திருட்டுத்தனமாக அசுரர்கள் தாக்க வந்தபோது ஆதிசேஷன் விஷக்காற்றை தன் மூக்கின் வழியாக விட்டு அசுரர்களை அழித்ததாக ஸ்தல வரலாறு. தாயைக் காக்க செல்லுமுன் கருடன் பணிந்த தலம்.

96. திருவயோத்தி (அயோத்தி)

பெருமாள்	:	**சக்ரவர்த்தித் திருமகன்** - ரகு நாயகன் வீற்றிருந்த திருக்கோலம், வடக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**சீதாபிராட்டி**
விமானம்	:	புஷ்கல விமானம்
தீர்த்தம்	:	பரமபதஸத்ய புஷ்கரிணி, ஸரயூ நதி
ப்ரத்யக்ஷம்	:	பரதன், தேவர்கள், முனிவர்கள்
மங்களாசாசனம்	:	பெரியாழ்வார், குலசேகரர், தொண்டரடிப்பொடி, கலியன், நம்மாழ்வார் (13 பாசுரங்கள்)

மொகல்சராய் - லக்னோ மார்க்கத்தில் பைசாபாத் ரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ள ஸ்தலம். இது ராமர் அவதரித்த தலம். வைகுண்டத்தின் ஒரு பகுதியான அயோத்தியே பூமிக்கு கொண்டு வரப்பட்டதாக புராணம். ஆகவே முக்தி தரும் 7 ஸ்தலங்களில் இதுவும் ஒன்று. ஸரயூ நதிக்கரையில் தென்னிந்திய பாணியில் கட்டப்பட்டுள்ள அம்மாஜிமந்திர் என்ற கோயில் அதே பழைய இடத்தில் உள்ளது. ஸ்ரீரங்கநாதர் சன்னிதியுடன் கூடிய ராமர் சந்நிதி அதே பாணியில் உள்ளது. இங்கே தென்னிந்திய வைஷ்வணர்கள் பூஜை செய்கின்றனர்.

குறிப்பு : ஆழ்வார் பாடிய கோயிலும் மூர்த்தியும் தற்போது இல்லை.

97. திருநைமிசாரணியம்

பெருமாள்	:	**தேவராஜன்** நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார்	:	**ஸ்ரீஹரிலக்ஷ்மி** - புண்டரீகவல்லி தாயார்
விமானம்	:	ஸ்ரீஹரி விமானம்
தீர்த்தம்	:	திவ்யவிச்ராந்த, நேமி தீர்த்தம், சக்ரதீர்த்தம்
தலமரம்	:	தபோவனம்
ப்ரத்யக்ஷம்	:	தேவரிஷிகள், இந்திராதிகள், சுதருமன்
மங்களாசாசனம்	:	திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

Koviloor Digital Library

பகவான் ஆரண்ய ரூபியாக (வனவடிவிலே) உள்ள ஸ்தலம். லக்னோ-டேராடூன் ரயில் பாதையில் பாலமாவ் சந்திப்பிலிருந்து சீதாப்பூர் செல்லும் கிளை இரயில் பாதையில் உள்ள ஒரு ரயில் நிலையம் நைமிசாரண்யா அங்கிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்தலம். **விசேடங்கள் :** ஆழ்வார் பாடிய ஆலயமும் மூர்த்திகளும் இப்போது இல்லை. இங்கு பகவான் ஆரண்ய ஸ்வரூபியாக இருப்பதாக நம்பி காட்டையே வணங்குகிறார்கள். கோமுகி (கோமதி) நதியில் ஸ்நானம் செய்துவிட்டு சக்ர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யலாம். இந்தத் தீர்த்த கரையில் சக்கரத்தாழ்வார், விநாயகர், ராம, லட்சுமணர், சீதை முதலியவர்களின் ஆலயங்கள் உள்ளன. அருகில் உள்ள வியாசக்கட்டியில் பாரதமும் பாகவதமும் இயற்றப்பட்டதாகக் கருத்து. அனுமான் கட்டியில் அனுமான் இராம லக்ஷ்மணர்களை இரு தோள்களிலும் தூக்கிய வடிவில் உள்ளார். பாலாஜி மந்திர் என்று அழைக்கப்படும் பூசமேத வெங்கடேஸ்வர சுவாமி கோயில் ஒன்றும் இந்த ஊரில் உள்ளது. வியாசமுனிவர், சுக முனிவர் ஆகியோருக்கும் கோயில் உள்ளது.

98. திருப்பிரிதி (ஜோஷிமட்) நந்தபிரயாக்

பெருமாள் : **பரமபுருஷன்**
புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **பரிமளவல்லி நாச்சியார்**

விமானம் : கோவர்த்தன விமானம்

தீர்த்தம் : இந்த்ர தீர்த்தம், கோவர்த்தன தீர்த்தம், மானஸ ஸரரூ

ப்ரத்யக்ஷம் : பார்வதி

மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

ரிஷிகேஷ் - பத்ரி பாதையில் 245 கி.மீ. தூரத்தில் ஜோதி மட் என்ற இடம் தான் திருப்பிரிதி என்பது இப்போதுள்ள பொதுவான கருத்து. நந்தப்ரயாகைதான் திருப்பிரிதி என்றும் இரண்டுமே அல்ல என்று வேறுவிதமாகவும் கருதப்படுகிறது. பத்ரியிலிருந்து 52 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 6150 அடி உச்யரத்தில் உள்ள ஸ்தலம். இங்கு நரசிம்மர் ஆலயமும் வாசுதேவர் ஆலயமும் உள்ளது. அவை ஆதிசங்கரரால் எழுப்பப்பட்டவை. சங்கரர் அருள் ஞானம் பெற்ற ஸ்தலம். சங்கரபாஷ்யம் இயற்றியதாக வரலாறு.

99. திருக்கண்டங்கடிநகர் (தேவப்ரயாகை)

பெருமாள் : **நீலமேகப் பெருமாள்** - புருஷோத்தமன்
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **புண்டரீகவல்லி தாயார்**

விமானம் : மங்கள விமானம்

தீர்த்தம் : மங்கள தீர்த்தம், கங்கை நதி

ப்ரத்யக்ஷம் : பரத்வாஜ மஹரிஷி

மங்களாசாசனம் : பெரியாழ்வார் (11 பாசுரங்கள்)

Koviloor Digital Library

பாகீரதி - அலக்நந்தா சங்கமமாகி கங்கையாகும் ஸ்தலம். ரிஷிகேஷிலிருந்து பத்ரிநாத் செல்லும் மலைப்பாதையில் 70 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்தலம். சமுத்திர மட்டத்திலிருந்து 1700 அடி உயரம் ரகுநாத்ஜி மந்திர் என்றால்தான் தெரியும். கோவிலுக்கு பின்னால் அழகான சிறிய ஹனுமார் இருக்கிறார். அலக்நந்தா பாகீரதி நதிகள் சங்கமமாகும் ஸ்தலம். ஆதிகங்கையாகப் போற்றப்படும் புண்ணிய ஸ்தலம். இது ப்ருஹ்மதேவ், தசரதர், ராமர் முதலியோர் தவம் செய்த இடம். இங்கே கோயில் கொண்டுள்ள ரகுநாத் மூர்த்தியை ஆதிசங்கரர் ஸ்தாபித்தார். இத்தலத்தின் அருகில் ஆஞ்சநேயர், காலபைரவர் மகாதேவர், பத்ரிநாதர், சந்நிதிகள் உள்ளன.

100. திருவதரியாச்சிரமம் (பத்ரிநாத்)

பெருமாள் : **பத்ரிநாராயணன்**
வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **அரவிந்தவல்லி நாச்சியார்**

விமானம் : தப்தகாருசன விமானம்

தீர்த்தம் : தப்தகுண்ட தீர்த்தம், தலமரம் : பத்ரி (இலந்தை)

ப்ரத்யக்ஷம் : நரன்

மங்களாசாசனம் : கலியன், பெரியாழ்வார் (22 பாசுரங்கள்)
த்வியம் விளைந்த நிலம்

டெல்லி - டேராடூன் இரயில் பாதையில் ஹரித்துவாரிலிருந்து 325 கி.மீ. தூரத்தில் மலைப்பாதையில் உள்ள ஸ்தலம். பஸ் வசதி உள்ளது. இத்தலம் அலக்நந்தா நதிக்கரையில் அமைந்துள்ளது. பனிப்பிரதேசமானதால் சித்திரா பௌர்ணமி முதல் ஐப்பசி தீபாவளி வரை 6 மாதமே தரிசனம் செய்யலாம். அடுத்த 6 மாதம் உற்சவர்கள் பாண்டுகேசுவரர் தலத்தில் வசுதேவர் கோயிலில் இருப்பர். திரை போடுவதே இல்லை. பல புண்ய தீர்த்தங்களும் ஆலயங்களும் உள்ளன. இத்தலம் ஹரித்துவாரிலிருந்து 300 கி.மீ. தொலைவில் கடல் மட்டத்திலிருந்து 23,210 அடி உயரத்தில் அமைந்துள்ளது. உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ளது. ரிஷி கேசத்திலிருந்து தேவப்பிரயாகை, உருத்திரப் பிரயாகை, நந்தப்பிரயாகை ஜோஷிமட் ஆகிய ஊர்கள் வழியாக பத்ரிநாத்தையடையலாம். தப்தகுண்டம் என்பது வெந்நீர் ஊற்று. இதன் படிகளை ஏறிச்சென்றால் கருடாழ்வாரை தரிசித்துக்கொண்டு பத்ரிநாராயணர் கோவிலுக்குள் செல்லலாம். இங்கு பெருமாள் சாலிக்கிராம மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இது எட்டெழுத்து மந்திரத்தின் அவதாரப் பதி. பெருமாள் தானே குருவாகவும், சீடராகவும் இருந்து திருமந்திரத்தை உபதேசம் செய்ததாக ஐதீகம். இத்தலத்தில் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்வது சிறப்புடையது.

Koviloor Digital Library

101. சாளக்கிராமம் (முக்திநாத்)

பெருமாள் : **ஸ்ரீமூர்த்தி பெருமாள்**
நின்ற திருக்கோலம், வடக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **ஸ்ரீதேவி நாச்சியார்**

விமானம் : ககன விமானம்

தீர்த்தம் : சக்ர தீர்த்தம், கண்டகி நதி

ப்ரத்யக்ஷம் : கண்டகி நதி, பிரமருத்திராதிகள்

மங்களாசாசனம் : பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் (12 பாசுரங்கள்)

பெருமாள் தீர்த்த வடிவில் அமைந்திருக்கும் ஸ்தலம். நேபாள நாட்டில் காட்மண்ட் நகருக்கு வடமேற்கே 275 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்தலம். போக்ராவிலிருந்து விமானத்தில் செல்லும் வசதி உள்ளது. இத்தலம் கண்டகி நதிக்கரையில் அமைந்துள்ளது. சாளக்கிராமம் என்பது திருமாலின் எல்லாத் தெய்வாம்சங்கள் பொருந்தியதும் புண்ணிய காலங்களில் தோற்றம் பெறுவதுமாகிற தெய்வாம்சம் நிறைந்த கல் வகையாகும். இங்கு சாளக்கிராம வடிவத்தில் ஸ்ரீமூர்த்தி பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். இத்தலம் முக்திநாத் என்றும் அறியப்படுகிறது. ரூத்ராக்ஷத்தைபோல் பல வடிவங்களில் உள்ள சாளக்கிராமங்களும் மிகமிக மேன்மையானவையாதலாலும் புண்ணியம் நிறைந்தவையாகவும் இருப்பதால் பல திவ்ய தேசங்களில் சாளக்கிராமங்கள் உருண்டை, தட்டை, முக்கோணம், சங்கு, சக்கரம் என பல வடிவங்களிலும், பல வண்ணங்களில் மாலையாக கோர்த்து சாத்தப்பட்டுள்ளன. இச்சாளக்கிராமங்கள் கண்டகி நதியில்தான் கிடைக்கின்றன என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இல்லை.

102. திருவடமதுரை (பிருந்தாவனம், கோவர்த்தனம் அடங்கியது)

பெருமாள் : **கோவர்த்தநேசன்**
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **ஸத்யபாமை நாச்சியார்**

விமானம் : கோவர்த்தன விமானம்

தீர்த்தம் : கோவர்த்தன, இந்த்ர தீர்த்தம், யமுனா நதி

ப்ரத்யக்ஷம் : இந்த்ராதி தேவர்கள், வசுதேவர், தேவகி

மங்களாசாசனம் : கலியன், பெரியாழ்வார், நம்மாழ்வார்,
தொண்டரடிப்பொடியாழ்வார், ஆண்டாள் (50 பாசுரங்கள்)

டெல்லி - ஆக்ரா இரயில் மார்க்கத்தில் மதுரா ரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ள மதுராவும், 10 கி.மீ. தூரத்தில் உள்ள ப்ருந்தாவனமும் 12 கி.மீ. தூரத்தில் கோவர்த்தனமும் அடங்கிய ஒரே திவ்யதேசம். இம்மதுரா பூமி கண்ணபிரான் அவதரித்த புண்ணிய பூமியாகும். வடமதுரை பரமபத முக்தி தரும் ஏழு தலங்களில் ஒரு தலமாகும். வடமதுரையில் சத்யபாமாவுடன் ஏகபத்தினி சமேதராக காட்சி தருகிறார். யமுனை நதி சமீபமாக உள்ள திருத்தலம் கோவர்த்தனம் கோயில். 2 கி.மீ. தூரத்தில் ஜன்ம பூமி என்ற இடத்தில் கண்ணன்

Koviloor Digital Library

திருஅவதாரம் செய்த சிறைச்சாலை இருந்ததாக நம்பிக்கை. பண்டைக் கோயில்கள் இல்லை. பின்னர் கட்டியவையே உள்ளன. சுமார் 10 கி.மீ. தூரத்தில் பிருந்தாவனமும் கோவர்த்தனமும் உள்ளன. மூன்றும் சேர்ந்ததே வடமதுரை திவ்யதேசம். பிருந்தாவனத்தில் தெண்ணாட்டுப்பாணியில் அமைக்கப்பட்ட ரங்கமந்திர் என்ற விசாலமான கோயில் உண்டு. இங்கு தமிழ்நாட்டு வைணவர்கள் பகவானுக்கு கைங்கரியம் செய்வதோடு தங்குமிடமும், சாப்பாடும் ஏற்பாடு செய்கிறார்கள். இக்கோயிலில் ரங்கமன்னார், ஆண்டாள், கருடாழ்வார் ஸேவை சாதிக்கின்றனர். சத்ருக்கணன் லவனாசுரனை வதம் செய்து யமுனை நதிக்கரையில் அர்த்தசந்திர வடிவில் மிக அழகிய மாடமாளிகை மண்டபம், கோபுரம், பிரகார வீதி, தடாகம் சூழ்ந்த அழகிய மதுரா நகரத்தை நிர்மாணித்ததாக ஐதீகம். அதன் பின்பு மதுரா நகரம் யாதவர்கள் ஆளுகைக்கு வந்தது. வசுதேவர் பரம்பரை ஆட்சி செய்தபோது கிருஷ்ணன் அவதரித்தார். ஒரே மையத்தில் பல லட்சம் பேர் சேவை செய்வதற்கும் தங்குவதற்கும் இடம் கட்டி இருக்கிறார்கள். பூஜைகள் கிரமப்படி நடந்து கோகுலாஷ்டமி முதல் ஒரு வாரம் முழுவதும் கிருஷ்ண சரித்திரத்தை நாடகமாக நடத்தி விழா கொண்டாடுகிறார்கள்.

103. திருவாய்ப்பாடி (கோகுலம்)

பெருமாள் : **மனமோஹன க்ருஷ்ணன்**
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : **ருக்மணி பிராட்டி, ஸத்யபாமை நாச்சியார்**

விமானம் : ஹேமகூட விமானம்

தீர்த்தம் : யமுனா நதி

ப்ரத்யக்ஷம் : நந்தகோபர்

மங்களாசாசனம் : பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்
(22 பாசுரங்கள்)

டெல்லி - ஆக்ரா பாதையில் மதுரா இரயில் நிலையத்திலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ளது. பஸ் வசதி உள்ளது. கோகுல் என்று அழைக்கப்படும் ஸ்தலம். மதுரா ஜங்ஷனிலிருந்து வண்டி பிடித்துக் கொண்டு 4½ கி.மீ. தூரம் சென்று யமுனை பாலத்தைக் கடந்து 7½ கி.மீ. பஸ்ஸில் சென்று இப்புண்ணிய க்ஷேத்திரத்தை அடையலாம். ஆழ்வார்கள் பாடிய கோயில்களோ மூர்த்திகளோ ஒன்றும் இப்போது இல்லை. கோகுல் என்ற இடத்திற்கு சுமார் முக்கால் மைல் தூரத்தில் (புரானா கோகுல்) பழைய கோயில் என்ற ஆலயத்தை நிர்மாணித்துள்ளனர். கோயில் வாசலிலேயே யமுனை நதி ஓடுகிறது. நந்தகோபர், யசோதை, பலராமர் விக்ரஹங்களுக்கு அடியில் குழந்தை கிருஷ்ணன் மரத்தொட்டிலில் ஸேவை சாதிக்கிறார். இவையெல்லாம் மரத்தால் ஆன விக்ரஹங்கள். இந்த இரண்டு கோகுலங்களில் எது உண்மையானது என்று தெரியாதபடியால் இரண்டையுமே ஸேவித்துவிடுவது நல்லது.

Koviloor Digital Library

104. திருத்துவாரகை (துவாரகா)

பெருமாள் : **கல்யாண நாராயணன்** - த்வாரகாநாத்
நின்ற திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம்.
தாயார் : **கல்யாண நாச்சியார்** - ருக்மணி
விமானம் : ஹேமகூட விமானம்
தீர்த்தம் : கோமதி நதி
ப்ரத்யக்ஷம் : த்ரௌபதி
மங்களாசாசனம் : பெரியாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் (13 பாசுரங்கள்)

அகமதாபாத் - ஜாம்நகர் - ஒசா துறைமுகம் இரயில் மார்க்கத்தில் துவாரகா ரயில் நிலையத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ளது. அகமதாபாத்திலிருந்தும் பஸ் வசதி உள்ளது. குஜராத் மாநிலத்தில் கோமதியாறு சங்கமிக்கும் இடத்தின் அருகே இத்தலம் அமைந்துள்ளது. மோட்சத்திற்கு துவாரமாக (வழி) உள்ள ஏழு தலங்களில் இதுவும் ஒன்று. அருகிலேயே பேட்துவாரகா என்ற தீவில் கண்ணன் வசித்த மாளிகையும் பிற சன்னதிகளும் காணலாம். பழநி முருகனுக்கு விதவிதமாக அலங்காரம் செய்வதுபோல் கண்ணனுக்கும் அன்றாடமும் குழந்தையாக, ராஜாவாக பல அலங்காரங்கள் செய்து பார்த்து மகிழ்கிறார்கள். திருமஞ்சனமும் தினமும் உண்டு. கல்யாண நாராயணர் கோவில் 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஸ்ரீகிருஷ்ணன் சமுத்திர ராஜனிடம் இடம் கேட்டு வாங்கி விசுவகர்மாவைக் கொண்டு துவாரகை ஸ்தாபிக்கப்பட்டதாக ஐதீகம். இங்கேதான் கிருஷ்ணன் ருக்மணியை விவாகம் செய்து கொண்டதாக ஐதீகம். கிருஷ்ணன் வைகுண்டம் போவதற்கு முன் ஸேவை சாதித்த அரசமரத்தடி சயனத் திருக்கோலத்தை பாலகா என்ற இடத்தில் காணலாம்.

105. சிங்கவேள்குன்றம் (அஹோபிலம்)

பெருமாள் : **நரஸிம்ஹன் - ப்ரஹ்லாதவரதன்**
வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.
தாயார் : **செஞ்சுலக்ஷ்மி, அம்ருதவல்லி**
விமானம் : குகை விமானம்
தீர்த்தம் : இந்திர, நரசிங்க, பாபநாச, கஜ, பார்க்கவ தீர்த்தம்
ப்ரத்யக்ஷம் : ப்ரஹ்லாதன் - அஹோபில மடத்து முதல் அழகிய சிங்கர்
மங்களாசாசனம் : திருமங்கையாழ்வார் (10 பாசுரங்கள்)

சென்னை - பம்பாய் ரயில் பாதையில் கடப்பா ரயில் நிலையத்திலிருந்து 110 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருப்பதி-ஹைதராபாத் சாலையில் நந்தியாவிலிருந்து 65 கி.மீ. தூரத்தில் உள்ள ஸ்தலம். பஸ் வசதி உள்ளது.

இவ்வூரில் திருப்பதி தேவஸ்தானம் நடத்தும் விடுதியும், அஹோபில மடத்தைச் சேர்ந்த 50 ரூம்கள் உள்ள விடுதியும் உள்ளன. மற்ற பல வசதிகளும் உள்ளன.

Koviloor Digital Library

இங்கு அகோபில நரசிம்ஹன், வராக நரசிம்ஹன், மாலோல நரசிம்ஹன், யோகா நந்த நரசிம்ஹன், பாவந நரசிம்ஹன், காரஞ்சு நரசிம்ஹன், சக்ரவட நரசிம்ஹன், பார்க்கவநரசிம்ஹன், ஜ்வாலா நரசிம்ஹன் என்று 9 நரசிம்ஹர்களின் கோயில்கள் உள்ளன. ஆகவே இது நவநரசிம்ஹக்ஷேத்திரம். மலை மீது பிரகலாத, வராக, உக்ர, நரஸிம்ஹரர்கள் சந்நிதிகள் உள்ளன. இரண்டு நாட்கள் இருந்தால்தான் எல்லா சந்நிதிகளையும் சேவிக்கலாம்.

அஹோபில மடத்தின் பிரதான கோவில் பிரஹலாத வரதன் சந்நிதிதான் அகோபில மடத்தின் தலைமை ஸ்தலம்.

இது ஒரு குடவரைக் கோவில் நரசிம்ஹன் வெளியானதாகச் சொல்லப்படும் தூண் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. காட்டுப்பகுதியாததால் வெளிச்சம் இருக்கும்போதே தரிசனத்தை முடித்துக் கொள்வதுதான் நல்லது. இம்மடத்தின் அழகிய சிங்கஜீயர் ஸ்ரீரங்கம் கோயிலின் தெற்கு ராஜ கோபுரத்தை கட்டுவித்த அபூர்வதிருப்பணியை எவரும் மறக்க முடியாது. ஆதிசங்கரரை காபாலிகர்களிடமிருந்து நரசிம்ஹர் காப்பாற்றிய ஸ்தலம்.

இந்த அவதாரத்தில் நாராயணன் நரசிம்ம அவதாரம் எடுத்தபோது பிரமனின் படைப்புத் தொழிலைச் செய்துள்ளார். இரண்யகசிபுவைக் கொன்று அழித்தபோது, அழித்தல் தொழிலை செய்யும் சிவபெருமானானார். பிரஹலாதனைக் காத்ததின் மூலம் தன் காத்தல் தொழிலைச் செய்துள்ளார். இதனால் நாராயணன் மும்மூர்த்திதானாய் ஆனார்.

மதுரை ஸ்ரீஅழகர்

Koviloor Digital Library

திருவேங்கடம்

இறைவனை உணர மனதிலும் செயலிலும் மேன்மையான ஞானம் அவசியம். அன்றாட அல்லாட்டங்களில் உழலும் மாந்தர்க்கு அதற்கான பக்குவம் கிடைத்து விடுவதில்லை. இப்பூவுலகில் உதித்த மனிதருக்கெல்லாம் இறைவனை நெருக்கத்தில் கொண்டு தர ஆன்றோர்கள் ஆலயங்களை அமைத்தனர். அதற்கெனத் தேர்ந்தெடுத்த புண்ணிய தலங்கள் சில. ஆன்றோர்க்கு ஆசிரியனாக இருக்கும் ஆண்டவனே தேர்வு செய்து குடியேறிய தலங்கள் சில. அப்படியொரு புனித தலம் திருமலை. இங்கு பிரம்மாவே நேரில் நின்று பிரமோத்ஸவம் செய்கிறார் என்பது ஐதீகம். திருமலையில் தினந்தோறும் விழா தான். ஆகவே நித்ய கல்யாணம் பச்சைத்தோரணம் என்று புகழ்ந்து கூறப்படும் திவ்ய தேசமாக திகழ்கிறது. வேதங்களுக்கு முற்பட்ட காலத்திலேயே தோன்றியவன். அதனை பூதத்தாழ்வார்,

வேதங்களுக்கு முற்பட்ட காலத்திலேயே
அளவரிய வேதத்தான்-வேங்கடத்தான்
விண்ணோர் முடி தோயும் பாதத்தான்

என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

வேங்கடமே விண்னோர் தொழுவதும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதுவும் - வேங்கடமே
தானவரை வீழத் தன்னாழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை.

- திருமழிசை ஆழ்வார்

புராணங்களை விடவும், புராணமாய் தோன்றிய இறைவன்,

கிடந்தது பூமி எடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச கிடந்ததுவும்
நீரோத மாகடலே நின்றதுவும் வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிசு என்னும்

என்று பொய்கை ஆழ்வார் சொல்லியபடி

திருப்பதி வேதத்திற்கெல்லாம் முற்பட்ட ஸ்தலம் என்பது துணிபு. 'திரு' என்ற அடைமொழியைப் பெற்ற ஒரே மலைத்தலம் திருமலை.

திருப்பதி திவ்ய தேசங்களில் மிகமிக முக்கியம் வாய்ந்தது. இது மூன்று பகுதியாக உள்ளது.

I. **கீழ்த் திருப்பதி** - கோவிந்தராஜப் பெருமாள் கோவில். மூலவர் **கோவிந்தராஜப் பெருமாள்**, புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம். தாயார் : **புண்டரீகவல்லி**. இங்கு ஆண்டாள், உடையவர் சந்நிதிகளும் உள்ளன.

II. **திருமலை** : மூலவர் **திருவேங்கடமுடையான்** ஸ்ரீனிவாசன், வெங்கடாசலபதி பாலாஜி. நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

உத்ஸவர் : கல்யாண வெங்கடேசர் மலையப்ப சுவாமி

Koviloor Digital Library

தீர்த்தம் : சேஷாசல சுவாமி புஷ்கரிணி, பாபவிநாச நீர்வீழ்ச்சி, ஆகாசகங்கை-கோனேரி தீர்த்தம் 14 **தீர்த்தங்கள்** : வைகுண்ட தீர்த்தம், சக்ர தீர்த்தம், ஜபாலி தீர்த்தம், வருண தீர்த்தம், ஆகாச கங்கை பாபவிநாசம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரை இராமகிருஷ்ண தீர்த்தம், தும்புரு தீர்த்தம், சேஷ தீர்த்தம், யுத்தங்கள் தீர்த்தம், சீதம்ம தீர்த்தம் ஸனகஸனந்தன் தீர்த்தம் உள்ளன.

விமானம் : ஆனந்த நிலைய விமானம்

ப்ரத்யக்ஷம் : தொண்டைமான், ஆறுமுகம்

ஆதிவராஹர் சந்நிதி ஸ்வாமி புஷ்கரிணியில் வடமேற்கு மூலையில் கோவில் கொண்டுள்ள இப்பெருமாளுக்குத் தளிகை ஸமர்ப்பித்த பின்புதான் ஸ்ரீனிவாசனுக்கு ஸமர்ப்பிக்கப்படுகிறது. ஸ்ரீநிவாசன் எழுந்தருளுமுன்பே ஆதிவராகர் இருந்ததால்தான் இந்த முறை. அதேபோல் **ஆதிவராஹரை தரிசித்த பின்பே திருவேங்கடவனை தரிசிப்பது மரபு.**

வேங்கடாத்திரி, சேஷாசலம் நீலாத்ரி, கருடாசலம், வ்ருஷபாத்ரி, அஞ்சனாத்ரி, நாராயணாத்ரி என்ற பெயர்கள் கொண்ட ஏழுமலையின் மத்தியில் கோவில் அமைந்துள்ளது. ஆகவே ஏழு கொண்டலவாடு, ஏழுமலை வாசன் என்று பெருமாள் அழைக்கப்படுகிறார்.

III. **திருச்சானூர்** : மூலவர் தாயார் : **அலர்மேல்மங்கை** (பத்மாவதி) கிழக்கே திருமுகமண்டலம். தீர்த்தம் பத்மசரோவாம். இக்கோயிலில் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் ஸௌந்தரராஜனுக்கும் ஸந்நிதிகள் உள்ளன. இந்தக் கோயில் ஸ்ரீநிவாசர் எண்ணப்படி தொண்டைமான் அரசரால் கட்டப்பட்டு பகவான் ஆனந்தத்துடன் எழுந்தருளியுள்ளதால் ஆனந்த விமானம் என்ற பெயர் உண்டாயிற்று. பிரம்மா உலக நன்மை கருதி இரண்டு விளக்குகள் ஏற்றி வைத்ததாக ஐதீகம்.

முதலில் கீழ்திருப்பதியில் கோவிந்தராஜரையும் தாயாரையும் வணங்கி ,பின் ஏழுமலைகளையும் தாண்டிச் சென்று திருமலையில் புஷ்கரிணியின் வடமேற்கு மூலையில் உள்ள ஆதிவராகப் பெருமாளை சேவித்த பிறகே திருவேங்கடமுடையானை வணங்கி அருள் பெற்றிட வேண்டும் என்பது மரபு. பின்பு திருமலையிலிருந்து இறங்கி திருச்சானூரை அடைந்து அலர்மேல்மங்கையைப் பணிந்திட வேண்டும். இவ்வாறு கிடந்த கோல கோவிந்தராஜர், ஆதிவராகர், நின்ற கோல வேங்கடமுடையான், இருந்த கோல அலர்மேலுமங்கை என நால்வரையும் வரிசைக்கிரமப்படி சேவித்தால்தான் திருப்பதி திருமலை வழிபாடு சிறப்படையும் என்பது ஆன்றோரின் துணிபு.

திருமலையில் ஏழுமலையான் மூலவர் இருக்கும் விமானம் ஆனந்த விமானம். இது முழுவதும் தங்கத்தகடு வேயப்பட்டு ஜகஜ்ஜோதியாகப் பிரகாசிக்கின்றது. ஆனந்த விமானம் மூன்று அடுக்குகளாக உள்ளது. முதல் இரண்டு செவ்வக அடுக்குகளாகும். மேல் அடுக்கு சதுரவடிவு. தற்போது தாமிரத்தகடு வேய்ந்து தங்க மூலாம் பூசப்பட்டுள்ளது.

திருப்பதிக்கு போக்குவரத்து வசதி பல திசைகளிலிருந்தும், ரயில் மூலமும், பஸ் மூலமும் உள்ளன. தங்குமிடங்கள் தேவஸ்தானத்தாலும் வெளியாட்கள்

Koviloor Digital Library

மூலமாகவும் ஏராளம், ஏராளம். கீழ்த்திருப்பதி - மேல் திருப்பதி பஸ் வசதி, வாகன வசதி இருவழிப்பாதையாக அமைந்துள்ளன.

திருப்பதி மலைவாசனை தரிசிக்க வரும் கூட்டம் லட்சக்கணக்கில் இருப்பதால் ஸேவிக்க நமக்கு கிடைக்கும் நேரம் சில விநாடிகளே. நின்ற கோலத்தில் காட்சி தரும் திவ்யதேசங்கள் 67ல் இதுவும் ஒன்று. இப்பெருமாள் கருணைக் கடலானவர். கனிவுப் பார்வை கொண்டவர். அதுவும் வியாழக்கிழமை அருளும் நேத்ர தரிசனத்தைக் காணக் கண்கோடி வேண்டும். அப்படிப்பட்ட கருணைமுகத்துடன் நேரில் பேசுகிறதுபோல் சேவை ஸாதிக்கும் பெருமாளை பக்தகோடிகள் அனைவரும் தரிசிக்க வழிவகுக்குமாறு வினாடிப்பொழுதுதான் என்றாலும் பாலாஜியின் கருணை பொங்கும் முகமும், நேரில் பேசுவது போன்ற தோற்றமும் ஒரு விநாடி கிடைத்தாலும் மானிடப் பிறவியின் பயனை அனுபவித்து விட்டோம் என்று மனமகிழ்வது தான் சிறப்பு. இவ்வளவு தூரம் வந்து சில விநாடிகளே தரிசனம் செய்யும் வாய்ப்புள்ளதே என்று வருத்தப்படாமல் யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெற வழி விடுகிறோம் என்று மகிழ்ச்சியடைவுதான் சிறப்பு. ஏழுமலைகள் உள்ள இடங்கள் உலகிலேயே இரண்டு. ஒன்று திருமலை. மற்றொன்று வாடிகன் அமைந்துள்ள ரோம். இந்த ஏழுமலைகளுக்கும் வந்து குவியும் காணிக்கை போல் உலகில் வேறெங்கும் கிடையாது. ஆகவே ஏழுமலை செல்வமிகுந்த மலை.

திருமால் பள்ளி கொண்டிருப்பது பாற்கடலில். ஆனால் அகிலத்து மக்கள் எல்லோரும் எக்காலத்திலும் அந்த அழகனைக் கண்டு ரசித்து அனுபவிப்பது அடிபணிந்து வணங்கி அருள் பெற வேண்டுமென்பதற்காக அவன் நின்றதுவோ திருவேங்கடம்.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் பெருமாளே
நெடியோனே வேங்கடவா நின் - திருக்கோயில் வாயில்
அடியாரும் வானவரும் அரம்மைபரும் கிடந்தியங்கும்
படியாய் கிடந்து உன்பவழவாய் காண்பேனே.

போகின்ற காலங்கள் போய காலங்கள்
போகு காலங்கள் தாய் தந்தை யுயி
ராகின்றாய் - உன்னை நான் அடைந்தேன் -விடுவேனா?
பாகின்ற தொல்புகழ் மூவுலக்குக்கும் நாதனே பரமா தன்வேங்கடம்
போகின்றாய் தன்துழாய் விரைநாறு கண்ணியனே.

- நம்மாழ்வார்

Koviloor Digital Library

106. திருவேங்கடம் (திருப்பதி)

பெருமாள் : திருவேங்கடமுடையான் - ஸ்ரீநிவாசன்
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : அலர்மேல் மங்கை தாயார்

விமானம் : ஆனந்த நிலைய விமானம்

தீர்த்தம் : சேஷாசல சுவாமி புஷ்கரிணி, பாபவிநாச, ஆகாய கங்கை, கோகர்ப்ப தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : தொண்டமான் சக்ரவர்த்தி, ஆறுமுகன்

மங்களாசாசனம் : மதுரகவி, தொண்டரடிப்பொடி தவிர ஏனைய ஆழ்வார்கள் (202 பாசுரங்கள்)

சென்னை - பம்பாய் ரயில் பாதையில் ரேணிகுண்டாவிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் திருமலை அடிவாரம் உள்ளது. சென்னை மற்றும் பல ஊர்களிலிருந்தும் நேரடி இரயில் வசதிகள் பல உள்ளன.

107. திருப்பாற்கடல்

பெருமாள் : க்ஷீராப்திநாதன்
புஜங்க சயனம், தெற்கே திருமுக மண்டலம்.

தாயார் : கடல்மகள் நாச்சியார்

விமானம் : அஷ்டாங்க விமானம்

தீர்த்தம் : திருப்பாற்கடல் தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : ப்ரம்ஹா, ருத்ராதியர்

மங்களாசாசனம் : மதுரகவி, திருப்பாணன் தவிர ஏனையோர் (51 பாசுரங்கள்)
நிலஉலகில் காணமுடியாத திருத்தலம்.

வெள்ளை வெள்ளத்தின் மேனாரு நாகத்தை மெத்தையாக விரித்து
கள்ள நித்திரையுடன் அனந்தன்மேல் அறிதுயிலமர்ந்து
பாற்கடல்நாதன் வசுதேவன் அனிருத்தன் ப்ரத்யும்னன் சங்கர்சனன்

என ஐந்து நிலை காட்டும் திருப்பாற்கடல் தொழுதிட திருமால் திருவடிகள் பற்றுவோம்.

108. திருப்பரமபதம்

பெருமாள் : பரமபதநாதன்
வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : பெரிய பிராட்டியார்

விமானம் : அந்தரங்க விமானம்

தீர்த்தம் : விரஜா நதி, ஆயிரம்மத புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : அநந்த, கருட, விஷ்வக்ஸேநாதி, நித்ய சூரிகள்

மங்களாசாசனம் : பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், ஆண்டாள், மதுரகவி, குலசேகரர் (36 பாசுரங்கள்)

Koviloor Digital Library

நில உலகில் காணமுடியாத திருத்தலம். இது இவ்வுலகில் இல்லை. முக்தர்கள் பார்க்கக்கூடியது.

அண்டரண்ட பகிரண்ட பேரண்டங்களை அதற்கான அதி தேவதைகளுடன்
அணுவடிவும் பிறழாது ஓரச்சில்சுழல அழகுறச் சமைத்து
நித்ய சூரியர்கள் பல்லாண்டிசைக்கும் தெளிவிசும்புத் திருநாடு என்னும் பரமபதம்
திருமகள் துணையுடன் புகுதற்கு தினம் தவறாது தொழுவோம் வாரீர்.

★★★★

புராண வைஷ்ணவ தலங்கள் 20
அபிமான தலங்கள் 7 பற்றிய விபரங்கள்

1. திருநாராயணபுரம்
மேல் கோட்டை

பெருமாள் : **திருநாராயணன் சம்பத்குமார்**
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **யதுகிரி நாச்சியார்**

விமானம் : ஆனந்தமய விமானம்

தீர்த்தம் : கல்யாணி, தனுஷ்கோடி, வேதபுஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : கருடன்

பெங்களூர் மைசூர் இரயில் பாதையில் பாண்டவபுரம் இரயில் நிலையத்திலிருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ளது. பெங்களூரிலிருந்து நேர் பஸ் வசதியும் உண்டு.

2. புஷ்கரம் (புஷ்கர்)

பெருமாள் : **பரமபுருஷன்**
வீற்றிருந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : **புண்டரீகவல்லி**

விமானம் : மங்கள விமானம்

தீர்த்தம் : பத்மஸரஸ், ப்ரம்ம குண்டம், ரூப தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : ப்ரஹ்மா

ப்ரஹ்மாவிற்குத் தனிக்கோயில் உள்ள ஸ்தலம்.

டெல்லி-பம்பாய் இரயில் மார்க்கத்தில் அஜ்மீர் இரயில் நிலையத்திலிருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ளது.

Koviloor Digital Library

3. ராஜமன்னார்குடி (செம்பகாரண்ய க்ஷேத்ரம்)

பெருமாள் : வாசுதேவர் - ராஜகோபாலன்
நின்ற திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

தாயார் : செம்பகலக்ஷ்மி-செங்கமலத்தாயார்

விமானம் : சுயம்பு விமானம்

தீர்த்தம் : பாம்பணி நதி, ஹரித்ரா நதி, க்ருஷ்ண தீர்த்தம்

ப்ரத்யக்ஷம் : ப்ரஹ்மா, அக்னி, கோபில - கோப்ரளய ரிஷிகள்

தஞ்சை, கும்பகோணம் ஆகிய இடங்களிலிருந்து நேரடிப் பேருந்து வசதி உள்ளது.

4. ஸ்ரீமுஷ்ணம்

பெருமாள் : பூவராஹன் - யக்ஞ்யவராஹர்
நின்ற திருக்கோலம். தெற்கே திருமுக மண்டலம்.

தாயார் : அம்புஜவல்லி

விமானம் : பாவன விமானம்

தீர்த்தம் : நித்ய புஷ்கரிணி

ப்ரத்யக்ஷம் : கமடன், ஜில்லிகை, பூமிதேவி, ஸுதர்மா

விருத்தாசலத்திலிருந்து 20 கி.மீ. சிதம்பரத்திலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூருக்கு பேருந்து வசதி உள்ளது.

5. ஸ்ரீபெரும்புதூர் (பூதபுரி)

பெருமாள் : ஆதிகேசவன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : எதிராஜவல்லி

தீர்த்தம் : எம்பெருமானார் ஏரி

ராமானுஜர் அவதார ஸ்தலம்.

சென்னை - பெங்களூர் சாலை மார்க்கத்தில் சுமார் 40 கி.மீ. தூரத்தில் உள்ளது. சென்னையிலிருந்து பஸ் வசதி உள்ளது.

6. மதுராந்தகம் (வகுளாரண்ய க்ஷேத்ரம்)

பெருமாள் : ஏரிகாத்தராமர் - கருணாகரன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : ஜனகவல்லி

தீர்த்தம் : ராமச்சந்திர புஷ்கரிணி

ராமானுஜர் பஞ்சசம்ஸ்காரம் பெற்ற ஸ்தலம். சென்னை - திருச்சி சாலை மற்றும் ரயில் மார்க்கத்தில் சுமார் 60 கி.மீ. தூரத்தில் உள்ள ஸ்தலம்.

Koviloor Digital Library

7. கயா க்ஷேத்ரம்

பெருமாள் : கதாதரர், நின்ற திருக்கோலம்.
வடக்கே திருமுக மண்டலம், விஷ்ணுபாதம், திருவடி

தீர்த்தம் : உத்தர பங்குனி நதி

கோல்கட்டா-வாரணாசி ரயில் மார்க்கத்தில் கயா ரயில் நிலையத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தூரம்.

8. காசி (வாரணாசி)

பெருமாள் : கேசவன், நின்ற திருக்கோலம்.
கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : லக்ஷ்மி

தீர்த்தம் : சக்ர தீர்த்தம், கங்கா, வாரணா நதி

சென்னை-வாரணாசி ரயில் மார்க்கத்தில் வாரணாசி ரயில் நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தூரம்.

9. பிரயாகை (அலகாபாத்)

பெருமாள் : மும்மூர்த்திகள் (பிரஹ்மா, விஷ்ணு, சிவன்) நதிரூபம்.

தீர்த்தம் : கங்கை, யமுனை, ஸரஸ்வதி நதிகள், திரிவேணி சங்கமம்

வாரணாசி-தரியாகஞ்ச்-அலகாபாத் ரயில் மார்க்கம் மீட்டர்கேஜ், பிராட்கேஜ் இரு ரயில் நிலையங்களும் உள்ளன.

10. மாயா க்ஷேத்ரம் (ஹரித்வார்)

பெருமாள் : பரதனாகக் காட்சி கொடுத்த ஸ்தலம்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : ஆதிலக்ஷ்மீ.

தீர்த்தம் : கங்கை நதி, கனகல தீர்த்தம், ரம்பா தீர்த்தம்,
குசாவர்த்த தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம்

கோல்கட்டா – டேராடூன் ரயில் மார்க்கத்தில் ஹரித்வார் ரயில் நிலையத்திலிருந்து 1 கி.மீ. ஸமுத்ர மட்டத்திலிருந்து 924 அடி உயரம்.

11. அவந்தி (உஜ்ஜயினி)

பெருமாள் : ஸ்ரீக்ருஷ்ணன் (கோபால மந்திரம்)

தாயார் : பத்மாவதி

தீர்த்தம் : கோமதி தீர்த்தம், சிப்ராநதி

டெல்லி - பம்பாய் மார்க்கத்தில் உஜ்ஜயினி ரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ.

Koviloor Digital Library

12. பண்டரீபுரம் (பண்டல்பூர்)

பெருமாள் : பாண்டுரங்கன்
நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் : ருக்மாபாய்

தீர்த்தம் : க்ருஷ்ண தீர்த்தம், சந்திரபாகா நதி

சென்னை - பம்பாய் ரயில் மார்க்கத்தில் குர்துவாடி ஜங்ஷனில் இறங்கி நேரோகாஜ் ரயில் மார்க்கமாக இத்தலத்தை அடையலாம்.

13. பத்ராசலம் (பத்ராசலம் ரோடு)

பெருமாள் : ராமன், நின்ற திருக்கோலம்.

தாயார் : ஸீதாதேவி

தீர்த்தம் : கோதாவரி நதி, ராமகுண்டம்

பெஜவாடா - காஜிபெட் - ஹைதராபாத் ரயில் மார்க்கம் விஜயவாடாவிலிருந்து சுமார் 5 மணி நேரம் பிரயாணம், பஸ் வசதிகள் உண்டு.

14. ஸேதுக்கரை (ஆதிஸேது)

பெருமாள் : ஶ்ரீநிவாஸன், நின்ற திருக்கோலம்

தாயார் : அலர்மேல் மங்கை தாயார்

தீர்த்தம் : அகஸ்தியர் தீர்த்தம், ஹிரண்யநதி

ராமநாதபுரத்திலிருந்து 8 மைல் தெற்கே உள்ளது. பஸ்ஸில் செல்லலாம்.

15. தனுஷ்கோடி

(தற்போது ஸமுத்திரத்தில் மூழ்கி விட்டது)

பெருமாள் : ராமன், நின்ற திருக்கோலம்

தாயார் : ஸீதாபிராட்டியார்

தீர்த்தம் : மூன்று சமுத்திரங்கள் சங்கமம்

16. ராமேசுவரம்

பெருமாள் : ஸேது மாதவன், ராமநாதன், நின்ற திருக்கோலம்.

தாயார் : மஹாலக்ஷ்மீ

தீர்த்தம் : அக்னி தீர்த்தம், ஸமுத்ர ஸ்நானம், ஸேது மாதவ தீர்த்தம்

17. குணசேகரம் (குணசீலம்)

பெருமாள் : ஶ்ரீபிரஸன்ன வேங்கடாசலபதி
ஶ்ரீஅலர்மேல்மங்கா ஸமேத ஶ்ரீநிவாஸன், நின்ற திருக்கோலம்

திருச்சி - முசிறி பஸ் மார்க்கம்.

Koviloor Digital Library

18. நாமக்கல்

(திருச்சி - நாமக்கல் - சேலம் - பெங்களூர் பஸ் மார்க்கம்)

பெருமாள் : **ஸ்ரீந்ருஸிம்ஹர்**
குகையில் ஆவிர்பவித்திருக்கிறார். மேற்கே திருமுக மண்டலம். மலை நடுவில் ரெங்கநாதர், **ஆஞ்சநேயர் 18 அடி உயரம்** - மேல் கூரை இல்லை. ந்ருஸிம்ஹர் ஸந்நிதி எதிரே இருக்கிறது.

19. உடுப்பி

பெருமாள் : பாலகிருஷ்ணன் ஆலயம், அஷ்டமடம், அஷ்டமட மடாதிபதிகள் (8 வயது உள்ளவர்கள்) மூன்று வருடத்திற்கு ஒரு முறை, முறையாகப் பதவியேற்று கிருஷ்ணனை ஆராதித்து வருகிறார்கள். மங்களூரிலிருந்து பஸ் வசதி உண்டு.

20. குருவாயூர்

பெருமாள் : **குருவாரயூப்பன்,**
பகவதி அம்மன், விநாயகர், சாஸ்தா

தீர்த்தம் : **ஸ்வாமி புஷ்கரிணி**

(திருவனந்தபுரம் - கொச்சி - ஷோரனூர் ரயில் பாதை)

பட்டாத்ரிக்கு பிரத்யக்ஷமாகி நாராயணீயம் அருளிய ஸ்தலம். வரப்ரஸாதி, நாராயணீயம் பகவத் ஸந்நிதியில் சொல்லி பட்டாத்ரிக்கு வியாதி விலகியதாக வரலாறு. நாராயணீயம் சொல்லும்போது பட்டாத்ரிக்கு அந்தந்தக் கட்டத்தில் காட்சியைப் பகவான் நேரில் காட்டியதாகப் புராண வரலாறு.

21. மந்த்ராலயா

சென்னை - பம்பாய் ரயில் மார்க்கத்தில் உள்ளது. பஸ் வசதியும் உண்டு. ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமிகள் ஜீவ ஸமாதி உள்ளது. அருகில் பஞ்சமுக ஆஞ்சநேயர் பாறையில் சுயம்பாக உள்ளது.

22. ஸிம்ஹாசலம் (புராண ஸ்தலம்)

ஆந்திர மாநிலத்தில் உள்ள இத்தலம் சென்னை - கோல்கட்டா மார்க்கத்தில் வால்டேருக்கு 8 கி.மீ. தொலைவில் உள்ளது.

பெருமாள் : **வராக நரஸிம்ஹர்**
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : **லக்ஷ்மி**

விமானம் : தார்ஷ்யாத்ரி

தீர்த்தம் : ந்ருஸிம்ஹதாரை

ப்ரத்யக்ஷம் : தேவர்கள், ரிஷிகள், யோகிகள்

Koviloor Digital Library

சிறப்பு : ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு ஆகிய இரு துவார பாலர்களை சம்ஹரித்ததால் வராக நரசிம்ஹ ரூபத்தில் ஸேவை.

23. கூர்மம் (புராண ஸ்தலம்)

ஆந்திர மாநிலத்தில் வால்டேர் கோல்கட்டா மார்க்கத்தில் ஸ்ரீகாகுளத்திலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ள பதி.

பெருமாள் : கூர்மநாதன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்
தாயார் : கூர்மநாயகி
விமானம் : கூர்மவிமானம்
தீர்த்தம் : சக்ரவம்ஸதாரை, லாங்கல
ப்ரத்யக்ஷம் : ச்வேத பூபாலன், திலோத்தமை வக்ராங்க மஹரிஷி, அசிசித்தன் பைரவேசர்

சிறப்பு : கூர்மம் பஸ் பாதையில் ஸ்ரீராமக்ஷேத்திரம், ஸ்ரீபத்மநாபம் என்று இரண்டு புராண வைணவ ஸ்தலங்கள் உள்ளன.

24. ஸ்ரீ ஜகந்நாதம் புருஷோத்தம் க்ஷேத்ரம்

ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ள ஸ்தலம். சென்னை - கோல்கட்டா மார்க்கத்தில் குர்தா ரோட்டில் மாதிபூரி செல்ல வேண்டும்.

பெருமாள் : ஜகந்நாதர், கிருஷ்ணன், பலபத்ரன்
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்
தாயார் : சுபத்திரை
விமானம் : இந்திரா, ஸ்ரீமந்த்ர விமானம்
தீர்த்தம் : மார்க்கண்டேயர், வருணன், ரோஹிணி
ப்ரத்யக்ஷம் : இந்த்ரத்யும்னன்

சிறப்பு : இங்கு பகவான் வ்ருக்ஷ வடிவில் எழுந்தருளுவது.

25. ஜோஷிமடம் (பத்ரி)

உத்திரப்பிரதேச மாநிலத்தில், ஹரித்துவாரிலிருந்து ரிஷிகேசம் வழியாக பத்ரிநாத் செல்லும் வழியில் உள்ள ஸ்தலம்

பெருமாள் : பரமபுருஷன்
புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம்
தாயார் : பரிமளவல்லி
விமானம் : வாசுதேவ விமானம்
ப்ரத்யக்ஷம் : பார்வதி

சிறப்பு : நரசிம்ஹருக்கும், வாசுதேவருக்கும் ஆலயங்கள் உள்ளன. ஆதிசங்கரர் ஸ்தாபித்த மடம்.

Koviloor Digital Library

26. குருக்ஷேத்ரம்

ஹரியானா மாநிலத்தில், டில்லி சண்டிகர் பாதையில் உள்ள தலம்.

பெருமாள் : **லக்ஷ்மி நாராயணர்**

சிறப்பு : மகாபாரத யுத்தம் நடந்த இடம். சூர்ய குண்டம், பீஷ்மர், அம்புபடுக்கை, தர்மர் மித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்தது.

27. வர்க்கலா

கேரள மாநிலம், திருவனந்தபுரம் - கொல்லம் மார்க்கத்தில் உள்ளது.

பெருமாள் : **ஜனார்த்தனப்பெருமாள்**
நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்

தாயார் : ஆஞ்சநேய புஷ்கரிணி

விமானம் : கிருஷ்ண விமானம்

சிறப்பு : தக்ஷிண ஜனார்த்தனம் என்று கருதப்படுகிறது.

இறைவனின் ஐந்து நிலைகள்

உலகங்களைப் படைத்துக் காத்து அழிக்கின்ற எம்பெருமான் ஐந்து நிலைகளில் எழுந்தருளியுள்ளான்.

1. பரம்

பரமபதம் (ஸ்ரீவைகுண்டம், நித்ய விபூதி)

108ஆவது திவ்யதேசம் - இப்பூவுலகில் இல்லாத ஸ்தலம். மோட்சம் பெற்ற ஆத்மாக்கள் அவனுக்குக் கைங்கர்யம் செய்து அவனை மகிழ்விக்கும் இடம்.

2. வ்யூஹம் (திருப்பாற்கடல்)

107 ஆவது திவ்யதேசம். இந்த மானிட சரீத்தோடு போக முடியாத திவ்யதேசம். ஸ்ரீமத் நாராயணன் பரமபதத்திலிருந்து புறப்பட்டு க்ஷீராப்தி என்ற பாற்கடலில் பக்தர்களின் தரிசனத்திற்காக தன்னை வியூஹமாக விரிவுபடுத்திக் கொண்டு ஆதிசேடனாகிய படுக்கையில் யோகநித்திரை செய்து காட்சி தரும் இடம்.

வாஸுதேவன்	-	கிழக்கு திசை திருமுகம்
சங்கர்ஷணன்	-	தெற்கு திசை திருமுகம்
ப்ரத்யும்னன்	-	வடக்கு திசை திருமுகம்
அநிருத்தன்	-	மேற்கு திசை திருமுகம்

தேவர்கள் தமக்குத் துன்பம் வரும்போதெல்லாம் இந்தப் பாற்கடலின் கரையில் வந்து முறையிடுவார்கள் என்பது மரபு.

Koviloor Digital Library

வ்யூஹாந்தரம் (கேசவாதி)

திருநாமம்	இடம்	நிறம்	ஆயுதம்	தாயார்
கேசவன்	நெற்றி	தங்க வர்ணம்	நான்கு சக்கரம்	ஸ்ரீதேவி
நாராயணன்	வயிறு	கருப்பு	நான்கு சங்கு	அம்ருதோத்பவா
மாதவன்	மார்பு	மணிநீலம்	நான்கு கதை	கமலா
கோவிந்தன்	முன்கழுத்து	சந்த்ர வர்ணம்	நான்கு வில்	சந்த்ரஸோதரீ
விஷ்ணு	வலப்புற வயிறு	தாமரைத் தாது	நான்கு கலப்பை	வராரோஹா
மதுசூதனன்	வலது புஜம்	தாமரை	நான்கு உலக்கை	ஹரிவல்லபா
த்ரிவிக்ரமன்	வலக் கழுத்து	நெருப்பு நிறம்	நான்கு கத்தி	விஷ்ணுபத்நீ
வாமனன்	இடப்புற வயிறு	ஸூய வர்ணம்	நான்கு வஜ்ரம்	வைஷ்ணவி
ஸ்ரீதரன்	இடது புஜம்	வெண் தாமரை	நான்கு பட்டஸம்	சார்ங்கிணீ
ஹ்ருஷீகேசன்	இடது கழுத்து	மின்னல்	நான்கு கத்தி	தேவதேவிகா
பத்மநாபன்	பின் முதுகு	சூர்ய வர்ணம்	பஞ்சாயுதம்	மஹாலக்ஷ்மி
தாமோதரன்	பின் கழுத்து	சிவப்பு	நான்கு கயிறு	ஸூரஸூந்தரீ

3. விபவம்

அடியார்களை வாழ்விக்கவும், தீயவர்களை அழிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் எம்பெருமான் மேற்கொள்கின்ற அவதாரங்களே விபவம் ஆகும். விபவத்தின் முக்கியமான பத்து அவதாரங்களாவன :

1. மத்ஸ்யாவதாரம்
2. கூர்மாவதாரம்
3. வராஹாவதாரம்
4. நரஸிம்ஹாவதாரம்
5. வாமனாவதாரம்
6. பரசுராமாவதாரம்
7. ராமாவதாரம்
8. பலராமாவதாரம்
9. க்ருஷ்ணாவதாரம்
10. கல்கி அவதாரம்

4. அந்தர்யாமித்வம்

ஒவ்வொரு ஜீவாத்மாவின் உள்ளேயும், மறைந்து உறையும் நிலை. மனிதர்கள், ஞானிகள் மற்றும் பக்தர்கள் உள்ளத்தில் உணர்வாய் உணர்வில் உயிராய் இறைவன் நிலைத்திருக்கும் நிலை.

Koviloor Digital Library

5. அர்ச்சாவதாரம்

இவ்வுலகில் திவ்ய தேசங்கள், புராண ஸ்தலங்கள் முதலிய இடங்களிலுள்ள கோயில்களிலும் மடங்களிலும் இல்லங்களிலும் விக்கிரமாகவோ, சிலையாகவோ, சித்திரமாகவோ எம்பெருமான் எழுந்தருளியுள்ள நிலை அர்ச்சாவதாரமாகும்.

108 திவ்ய தேசங்களில் 106னைச் சேவித்தவர்களுக்கு மற்ற இரண்டினை எம்பெருமான் தானாகவே காட்டியருளுவான் என்பது ஐதீகம்.

பஞ்சரங்கங்கள்

1. ஆதிரங்கம் - ஸ்ரீரங்கப்பட்டினம் (மைசூர்)
2. அப்பாலரங்கம் - திருப்பேர்நகர்
3. மத்தியரங்கம் - ஸ்ரீரங்கம்
4. சதுர்த்தரங்கம் - கும்பகோணம்
5. பஞ்சரங்கம் - இந்தளூர்

க்ருஷ்ணாரண்ய க்ஷேத்ரங்கள்

1. திருக்கண்ணமங்கை
2. திருக்கண்ணபுரம்
3. கபிஸ்தலம்
4. திருக்கோவிலூர்
5. திருக்கண்ணங்குடி

★★★★

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா
உன் செவ்வடி செவ்வித் திருகாப்பு.

★★★★

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு
படையோர்புக்கு முழங்கும் அப்
பாஞ்ச சன்னிய மும்பல்லாண்டே.

★★★★

Koviloor Digital Library

108 திவ்யதேச தாயார் - பெருமாள் அஷ்டோத்திரம்

ஓம் அத்திகிரி பெருந்தேவி தேவராஜனே போற்றி
ஓம் அயோத்தி ஜனகவல்லி ராமச்சந்திரனே போற்றி
ஓம் அரியமேய விண்ணகர அமுதகுடவல்லி குடமாடு கூத்தனே போற்றி
ஓம் அன்பில் செங்கமலவல்லி வடிவழகிய நம்பியே போற்றி
ஓம் அல்லிக்கேணி வேதவல்லி பார்த்தசாரதியே போற்றி
ஓம் அஷ்டபுஜம் அலர்மேல்மங்கை கஜேந்திர வரதனே போற்றி
ஓம் ஆதனூர் ரெங்கநாயகி ஆண்டாளுக்கும் அய்யனே போற்றி
ஓம் ஆழ்வார் திருநகரி ஆதிநாயகி ஆதிப்பிரானே போற்றி
ஓம் ஆய்ப்பாடி நப்பின்னை நவமோகன கிருஷ்ணனே போற்றி
ஓம் இந்தளூர் புண்டரீகவல்லி பரிமள ரெங்கநாதனே போற்றி
ஓம் உறையூர் கமலவல்லி அழகிய மணவாளனே போற்றி
ஓம் ஊரகத்து அமிர்தவல்லி உலகளந்தவனே போற்றி
ஓம் கடிநகர் புண்டரீகவல்லி புருஷோத்தமனே போற்றி
ஓம் கண்டியூர் கமலவல்லி அரன்சாபம் தீர்த்தவனே போற்றி
ஓம் கண்ணங்குடி அரவிந்தவல்லி சாமளமேனியனே போற்றி
ஓம் கண்ணமங்கை அபிஷேகவல்லி பக்தராவிப் பெருமாளே போற்றி
ஓம் கண்ணபுரத்து கண்ணபுரநாயகி சௌரிராஜனே போற்றி
ஓம் கள்வனூர் அஞ்சிலைவல்லி ஆதிவராகனே போற்றி
ஓம் கறம்பனூர் பூர்ணவல்லி புருஷோத்தமனே போற்றி
ஓம் கபிஸ்தலம் ரமாமணி கஜேந்திரவரதனே போற்றி
ஓம் காட்கரை வாத்ஸல்யவல்லி உதாரபுருஷனே போற்றி
ஓம் காரகத்து பத்மாமணி கருணாகரனே போற்றி
ஓம் கார்வானத்து கமலவல்லி கள்வனே போற்றி
ஓம் காவளம்பாடி வடவரல் மங்கை கோபாலக்ருஷ்ணனே போற்றி
ஓம் காழிவிண்ணகர மட்டவிழும் குழலி தாடாளனே போற்றி
ஓம் குடந்தை கோமளவல்லி ஆராவமுதனே போற்றி
ஓம் குளந்தை பாலவல்லி மாயக்கூத்தனே போற்றி
ஓம் குறுங்குடி குறுங்குடிவல்லி வைஷ்ணவ நம்பியே போற்றி
ஓம் கூடலூர் மட்டவிழும்குழலி வையம்காத்தவனே போற்றி
ஓம் கோயிலடி கமலவல்லி அப்பக்குடத்தானே போற்றி
ஓம் கோயிலூர் பூங்கோவல்நாச்சி திருவிக்கிரமனே போற்றி
ஓம் கோஷ்டியூர் திருமாமகள் திருமாமகளுக்கு இனியவனே போற்றி
ஓம் கோளூர் கோளூர் வல்லி வைத்தமாநிதிப் பெருமாளே போற்றி
ஓம் சாளக்கிராமம் ஸ்ரீதேவி முக்கிநாதனே போற்றி
ஓம் சித்ரகூடம் புண்டரீகவல்லி கோவிந்த ராஜனே போற்றி
ஓம் சிறுபுலியூர் திருமாமகள் அருள்மாக்கடல் அமுதனே போற்றி

Koviloor Digital Library

ஓம்	சிங்கவேள்குன்றம் மகாலெட்சுமி நரசிம்மனே	போற்றி
ஓம்	செங்குன்றூர் செங்கமலவல்லி இமய வரம்பனே	போற்றி
ஓம்	செம்பொன்செய்கோயில் அல்லிமாமலராள் பேரருளாளனே	போற்றி
ஓம்	சோளிங்கபுரத்து அமிர்தபலவல்லி அக்காரக்கனி பெருமாளே	போற்றி
ஓம்	தஞ்சை மாமணி செங்கமலவல்லி நீலமேகப் பெருமாளே	போற்றி
ஓம்	தலைச்சங்காட்டு செங்கமலவல்லி நாண்மதியப் பெருமாளே	போற்றி
ஓம்	திருக்கடித்தானம் கற்பகவல்லி அற்புத நாராயணனே	போற்றி
ஓம்	திருச்சேறை சாரநாயகி சாரநாதப் பெருமாளே	போற்றி
ஓம்	திருத்தண்கா மரகதவல்லி விளக்கொளிப் பெருமாளே	போற்றி
ஓம்	திருத்தங்கால் அன்னநாயகி நின்ற நாராயணனே	போற்றி
ஓம்	திருநின்றவூர் சுதாவல்லி பக்தவத்சலனே	போற்றி
ஓம்	திருநீர்மலை அணிமாமலர்மங்கை நீர்வண்ணனே	போற்றி
ஓம்	திருப்பதி அலர்மேல் மங்கை வெங்கடாஜலபதியே	போற்றி
ஓம்	திருப்பிரிதி பரிமளவல்லி பரமபுருஷனே	போற்றி
ஓம்	திருப்புக்குழி மரகதவல்லி போரேற்றுப் பெருமாளே	போற்றி
ஓம்	திருப்புல்லாணி பத்மாசனி ஆதிஜெகன்னாதனே	போற்றி
ஓம்	திருப்புலியூர் பொற்கொடி மாயாவிஷ்ணுவே	போற்றி
ஓம்	திருப்புளிங்குடி மலர்மகள் பூமிபாலனே	போற்றி
ஓம்	திருப்பேறை குழைக்காது வல்லி மகரநெடுங்குழைக்காதனே	போற்றி
ஓம்	திருமணிக்கூட இந்திராதேவி மணிகூட நாயகனே	போற்றி
ஓம்	திருமயம் உய்யவந்தநாயகி மெய்யப்பனே	போற்றி
ஓம்	திருமூழிக்களம் மதுரவேணி மூழிக்களத்தானே	போற்றி
ஓம்	திருமோகூர் மோகனவல்லி காளமேகனே	போற்றி
ஓம்	திருவட்டாறு பத்மினி ஆதிகேசவனே	போற்றி
ஓம்	திருவண்பரிசாரம் கமலவல்லி திருவாழ்மார்பனே	போற்றி
ஓம்	திருவண்வண்டூர் கமலவல்லி பாம்பணையப்பனே	போற்றி
ஓம்	திருவல்லவாழ் வாத்சல்யவல்லி வல்லராஜனே	போற்றி
ஓம்	திருவனந்தபுரம் ஹரிலெட்சுமி அனந்த பத்மநாபனே	போற்றி
ஓம்	திருவகீந்திரபுரம் வைகுண்ட நாயகி தெய்வநாயகனே	போற்றி
ஓம்	திருவாரன்விளை பத்மாசனி ஸ்ரீவாமனனே	போற்றி
ஓம்	திருவாழித்திருநகரி அமிர்தவல்லி வயலாலி மணவாளனே	போற்றி
ஓம்	திருவிடந்தை கோமளவல்லி பூவராகனே	போற்றி
ஓம்	திருவிண்ணகர் பூமிதேவி உப்பிலியப்பனே	போற்றி
ஓம்	திருவள்ளூர் கனகவல்லி வீரராகவனே	போற்றி
ஓம்	திருவெஃகா கோமளவல்லி சொன்னவண்ணம் செய்தவனே	போற்றி
ஓம்	துவாரகை ருக்மணி துவாரகாபதியே	போற்றி
ஓம்	தெற்றியம்பலம் செங்கமலவல்லி செங்கண்மாலே	போற்றி
ஓம்	தேரழுந்தூர் செங்கமலவல்லி ஆமருவியப்பனே	போற்றி

Koviloor Digital Library

ஓம் தேவனார்தொகை கடல்மகளே ஸ்ரீமாதவனே போற்றி
ஓம் தொலைவில்லிமங்கலம் கருந்தடங்கண்ணி ஸ்ரீநிவாசனே போற்றி
ஓம் நந்திபுரவிண்ணகரசண்பகவல்லி ஜகன்னாதனே போற்றி
ஓம் நறையூர் வஞ்சுளவல்லி ஸ்ரீபரிபூரண ஸ்ரீநிவாசனே போற்றி
ஓம் நாகை சௌந்தர்யவல்லி அழகிய பெருமாளே போற்றி
ஓம் நாங்குனேரி ஸ்ரீவரமங்கை தெய்வநாயகனே போற்றி
ஓம் நாவாய் மலர் மங்கை முகுந்த நாராயணனே போற்றி
ஓம் நிலாத்திங்கள் துண்டான் நேர் ஒருவர் இல்லாவல்லித சந்திரசூடனே போற்றி
ஓம் நீரகம் நிலமங்கை ஜெகதீஸ்வரனே போற்றி
ஓம் நைமிசாரண்யம் ஹரிலெட்சமி தேவராஜனே போற்றி
ஓம் பத்ரியாசிரமம் அரவிந்தவல்லி நரநாராயணனே போற்றி
ஓம் பரமேசுவரவிண்ணகரம் வைகுண்டவல்லி வைகுண்ட நாதனே போற்றி
ஓம் பவழவண்ணம் பவழவல்லி பவழவண்ணனே போற்றி
ஓம் பாடகம் ருக்மணி சந்தியபாமா பாண்டவதூதனே போற்றி
ஓம் பார்த்தன்பள்ளி தாமரைநாயகி கமலநாதனே போற்றி
ஓம் புள்ளபூதங்குடி பொற்கமலவல்லி கோலவில்ராமனே போற்றி
ஓம் மகாபலிபுரம் நிலமங்கை தலசயனனே போற்றி
ஓம் மணிமாடக்கோயில் புண்டரீகவல்லி நந்தாவிளக்குப் பெருமாளே போற்றி
ஓம் மதுரை மதுரவல்லி கூடலழகனே போற்றி
ஓம் மாலிருஞ்சோலை சுந்தரவல்லி கள்ளழகனே போற்றி
ஓம் வடமதுரை சத்தியபாமா கோவர்த்தனேசனே போற்றி
ஓம் வன்புருஷோத்தமம் புருஷோத்தமநாயகி உதாரபுருஷனே போற்றி
ஓம் வரகுணமங்கை வரகுணமங்கை விஜயாசனனே போற்றி
ஓம் வித்துவக்கோடு வித்துவக்கோட்டுவல்லி உய்யவந்த பெருமாளே போற்றி
ஓம் வெள்ளக்குளம் அலர்மேல்மங்கை ஸ்ரீநிவாசனே போற்றி
ஓம் வெள்ளறை பங்கஜவல்லி புண்டரீகாக்ஷனே போற்றி
ஓம் வெள்ளியங்குடி மரகதவல்லி ஸ்ரீநிவாசனே போற்றி
ஓம் வேளுக்கை அமிர்தவல்லி நாராயணனே போற்றி
ஓம் வைகுண்டவிண்ணகரம் வைகுண்டவல்லி வைகுண்டநாதனே போற்றி
ஓம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் ரெங்கமன்னாரே போற்றி
ஓம் ஸ்ரீவைகுண்டம் வைகுண்டவல்லி கள்ளர்பிரானே போற்றி
ஓம் ஸ்ரீரங்கம் ஸ்ரீரெங்கநாச்சி பெரிய பெருமாளே போற்றி
ஓம் திருப்பாற்கடல் அலைமகள் பாற்கடல்நாதனே போற்றி
ஓம் பரமபத்து பெரியபிராட்டி பரமபதனே போற்றி

– நன்றி அவனருள் பேரா; முரளி அவர்களுக்கு

Koviloor Digital Library



Koviloor Digital Library

சோழநாட்டுத் திருநாங்கூர் திருப்பதிகள்



திருநாங்கூர் உட்கோயில்கள்



Koviloor Digital Library





தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
காஞ்சிபுரம் - உட்கோயில்கள்
வ
மே
கி
தெ
உலகளந்த பெருமாள் கோவில் சன்னதிகள்
70 திருநீரகம்
81 திருஊரகம்
83 திருக்காரகம்
84 திருக்கார்வானம்
திருக்கள்வனூர் : காமாட்சியம்மன் திருக்கோயில் சன்னதி
நிலாத்திங்கள் துண்டம் : ஏகாம்பரநாதர் திருக்கோயில் சன்னதி
செங்கல்பட்டு

Koviloor Digital Library



பாண்டி நாட்டுத் திருப்பதிகள்
(சாலை வழி)

வரைபடம் : வா.ஸ்ரீ

Koviloor Digital Library



 

Koviloor Digital Library



...orial waters of India extend into the sea to a distance of twelve ...miles measured from the appropriate base line

Scale 1:1,500,000 1 cm = 15 Kms.

Designed, Cartographed and Printed by TT. Maps & Publications Pvt. Ltd., Madras-44. for Tiruvalluvar Transport Corporation Limited, Madras 3rd Edition



மலைநாட்டுத் திருப்பதிகள்
சாலைமார்க்கம்
வ
மே
கி
தெ
திருச்செங்குன்றூர் திருப்பதிகள்
செங்கனாச்சேரி
திருக்கடித்தானம்(70)
திருவல்லவாழ்(66)
திருவல்லா
திருவாறன்விளை(71
(ஆரமுளா)
திருவண்வண்டூர்(67)
திருச்செங்குன்றூர்(64)
திருப்புலியூர்(63)
(குட்டநாடு)
கொல்லக்கடவு
பட்டாம்பி
திருநாவாய்(65)
பாலக்காடு
குருவாயூர்
திருச்சூர்
திருமூழிக்களம்(62)
எர்ணாகுளம்
கோட்டயம்
செங்கனாச்சேரி
செங்கன்னூர் திருப்பதிகள்
அரபிக்கடல்
திருநெல்வேலி
திருவனந்தபுரம்(59)
திருவட்டாறு(58)
திருவண்பரிசாரம்(60)
நாகர்கோவில்
வரைபடம் : வாரஸ்ரீ

Koviloor Digital Library

12032



Koviloor Digital Library

அருள்மிகு சௌமிய நாராயணப் பெருமாள்
திருக்கோஷ்டியூர்

Koviloor Digital Library

திருமலை திருப்பதி